பெப். 06 – 12, 2005 16.00 24 பக்கங்கள்
Feb.06 -12, 2005
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
வார மலர்



## அதிகரிக்கும் முரண்பாடுகள்!



## இந்திய மருமகன் முரளி!



## ஜனாதிபதியின் நரித்தந்திரம் ரணில் முறியடிப்பாரா?

## ஆழிப் பேரலை அனர்த்தம் எஞ்சியது நெருக்கடியே!

# மிஸ்டர் வேதாளம்



குனிந்தபடி வேலையில் மூழ்கியிருந்த எமக்கு முன்னால் ஏதோ நிழலாடியது. நிமிர்ந்து பார்த்தால் வேதாளத்தார். "அடடா... என்ன சத்தம் சந்தடியில்லாமல் ஆஜராகி விட்டீர்!" என்றோம். லேசாகச் சிரித்தார். கையிலே ஒரு குறிப்புத் துண்டு வைத்திருந்தார். அதனைப் பார்த்தபடி "செய்திகளைச் சொல்லட்டுமா?" என்றார்.

"சரி...சரி. ஆரம்பியும். முதலில் கடந்த அரசியல் நிலவரங்கள் பற்றிச் சொல்லும்" என்று கேட்டோம்.

"சூடாக இருந்தது. கடந்த வாரங்களில் அம்மையாரின் கட்சிக்கும், சிவப்புச்சட்டைக் கட்சிக்கும் ஏக லடாய்.. அந்தக் கட்சியினர், தங்களைக் கணக்கெடுக்காமல் அம்மா கட்சியினர் இயங்குகிறார்கள், போதாததற்கு அம்மாவும் ஏற்கனவே போடப்பட்ட ஒப்பந்தத்துக்கு விரோதமாக தனியாக முடிவெடுக்கிறார். என ஏகப்பட்ட மன வருத்தங்கள்."

"அப்படி என்ன முடிவு செய்தார்?"

"சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீள் கட்டமைப்பு செய்யும் குழுவுக்குச் சுயமாக ஆட்களை நியமித்தது. புலிகளுடன் நிவாரணப் பணி தொடர்பான இணக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவது... எக்ஸட்ரா...எக்ஸட்ரா..."

"ஓஹோ லடாய் முற்றிவிட்டது என்கிறீர்"

"ஆமாம்... கடந்த வார முற்பகுதியில் ஒருநாள் சிவப்புச்சட்டைக்காரர்களின் மத்திய செயற்குழு காலை 8 மணி முதல் இரவு 12 மணி வரை கூடி இதுபற்றி விவாதித்தது. அங்கே சிவப்புச்சட்டை உறுப்பினர்கள் அரசின் செயற்பாடுகள் பற்றி வெம்பி வெடித்தனராம்..."

"அதற்குத் தலைவர்கள் என்ன சொன்னார்கள்?"

"லண்டன் தலைவர்... சடுதியாக, 'அப்படி என்றால் உறவை முறித்துக்கொண்டு வெளியேறுவோமே' என்றாராம்."

"அவர் எல்லாவற்றையும் எடுத்தேன்-கவிழ்த்தேன் என்றுதான் முடிவு எடுப்பார். சரி.. பிறகு..."

"அவருக்கென்ன அரசைக் கவிழ்த்து விட்டு டாட்டா சொல்லிவிட்டு வெளிநாடு சென்றுவிடுவார். இங்கே குத்துப்படுவது தாடிக்காரர்கள்தானே... எனவே...விமல் தம்பி எல்லோரையும் அமைதிப்படுத்தி விட்டு எதற்கும் ஒரு தடவை கடைசியாக பேசிப்பார்ப்போமே என்றாராம்"

"அதன் பின்னர்தான் சூடு தணிந்ததோ?"

"ஆமாம்... அதன் பின்னர் அம்மையாரும் அவர்களை ஒரு தடவை சந்தித்துப் பேசப்போவதாக அறிவித்த பின் கொஞ்சம் சூடு தணிந்திருக்கிறது. ஆனால், அம்மையாரைச் சந்திக்கும் போது சீறிப் பாயப் போகிறார்களாம்"என்று கூறிவிட்டு மேசையில் இருந்த தண்ணீரை எடுத்து மடக் மடக் கெனக் குடித்தார்.

"அதுசரி சுனாமி-நிவாரணம்-மீள் கட்டமைப்புகளுக்கிடையில் ஆயுதக் கொள்வனவும் நடக்கிறதே? நீர் அதுபற்றி எதுவும் சொல்லவில்லையே!"

"அதுபற்றி என்ன சொல்வது? மாமியாரின் 'சேலை அவிழ்வதைப் பார்த்த மாப்பிள்ளையின் நிலையில் இருக்கிறார்கள் அரசாங்கத்தார்"

"என்னய்யா..பழமொழி இது. விளங்கவில்லையே?"

"அதாவது மாமியாரின் சேலை அவிழ்வதைப் பார்த்த மாப்பிள்ளையின் மன நிலை எப்படியிருக்கும்... மாமி.. மாமி.. சேலை அவிழ்ந்துவிட்டது என்று சொல்ல முடியாது. ஐயய்யோ... மாப்பிள்ளை பார்த்துவிட்டாரே என்று மாமியார் சங்கடப்படுவாரே என்ற கவலை... சொல்லாமல் விட்டால் பார்ரா... எனது சேலை அவிழ்ந்து மானம் போவதைக் கண்டும் மாப்பிள்ளை சொல்லாமல் விட்டுவிட்டாரே என்று மாமி கவலைப்படுவாரோ என்ற கவலை. இவ்வாறான ஒரு மன நிலையில் திண்டாடுகிறது அரசு"

"என்ன திண்டாட்டம்? என்னத்தைச் சொல்ல முடியவில்லை?"

"அதாவது சுனாமியால் படையினருக்குப் பாதிப்பு அதிகமாக இல்லை என்று வெளியே சவடால் அடித்துக்கொண்டாலும், உள்ளே சேதங்கள் அதிகம். இதுவரை எடுக்கப்பட்ட மதிப்பின்படி இராணுவத்துக்கு மட்டுமே 80 கோடி ரூபாக்கள் நஷ்டம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது தவிர குடாநாட்டுப் படையினருக்கென 3 மாதங்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களைப் பத்திரப்படுத்தி வைத்திருந்த களஞ்சியமொன்று 'காங்கேசன் துறையில் அழிந்தது. இதில் 5 கோடி ரூபா வரை நாசம். கடற்படையினருக்கு ஏற்பட்ட பாதிப்பு இதனை விட அதிகம்."

"கிட்டத்தட்ட எவ்வளவு வருமென்கிறீர்?"

"கிட்டத்தட்ட 3 பில்லியன்.நன்றாகக் கவனித்துக்கொள்ளும்.மில்லியன் அல்ல பில்லியன்."என்றார்.

"அடடா அவ்வளவா?"

"ஆமாம். இதில் காலியில் மூழ்கிப் போன பராக்கிரம பாகு என்ற கப்பல் மட்டும் 13.5 மில்லியன் டொலராம். இவ்வாறாக இழந்தவைகளை உடனடியாக ஈடு கட்டாவிட்டால் திடீர் யுத்தம் ஒன்று வந்தால் படையினரின் கதி அதோ கதிதானாம். அதனால் உடனடியாக ஆயிரத்து 500கோடி ரூபாவுக்கு கொஞ்ச நஞ்ச ஆயுதங்களை வாங்கி இவைகளை ஈடுகட்டலாம் என எண்ணியிருக்கிறார்களாம். ஆனால், இவைகளை வெளியே சொன்னால் எங்கே தங்கள் பலவீனம் வெளியே தெரிந்துவிடுமோ என்ற கவலை."

"ஓஹோ! அதுதான் இந்த அவசர ஆயுதக் கொள்வனவோ"?

"ஆமாம்.அதிலும் அடிபிடியாம். முப்படைத்தளபதியாக உள்ள கடற்படைக்காரர் கடற்படைக்கு அதிக ஆயுதங்கள் வாங்க சிபாரிசு செய்கின்றாராம். இதனால் இராணுவக்காரர்களுக்கு மனஸ்தாபம். இதனால் மடத்திடம் முறையிட்டிருக்கிறார்களாம்."

"அப்படி என்றால் விமானப் படையினருக்கு எதுவுமில்லையோ... இரணைமடுவில் புலிகளின் விமானங்கள் நிற்பதாக குற்றஞ்சாட்டுகிறார்கள்."

"அது சும்மா... கப்ஸாவாம். புலிகளிடம் விமானம் இருக்கிறதோ இல்லையோ அதனை இப்படிப் பொதுப் பார்வையில் நிறுத்தி வைக்க மாட்டார்கள். இந்த ஆயுதக் கொள்வனவுக்கு சுனாமியைக் காட்டி இராணுவமும்- கடல் படையும் எனக்கு- உனக்கு என்று அடிபட, சேதங்கள் எதுவும் இல்லாத விமானப் படை என்ன சாட்டைச் சொல்லி ஆயுதங்களைக் கேட்பது? அதுதான் இப்படி ஒரு கப்ஸாவுடன் களத்தில் குதித்திருக்கிறார்கள்"

"ஓஹோ! அப்படியா சங்கதி... சரி... வேறு ஏதாவது உண்டா?" என்று கேட்ட போது...

"இல்லை"என்று சொல்லிபபடி கையிலே இருந்த குறிப்பேட்டை மடித்து சட்டைப் பையினுள் வைத்துக்கொண்டு ஜூட் விட்டார் வேதாளத்தார்.

# திரையுலகை தனது கைக்குள் போடும் முயற்சியில் ஜெயலலிதா

2001ஆம் ஆண்டு மே மாதம் முதல்வரானதிலிருந்து இன்று வரை தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சி நித்திய கண்டம் பூரண ஆயுசு என்ற வகையில் தான் நடந்து வருகிறது. அடுத்த ஆண்டு மேயில் அவரது பதவிக்காலம் முடிகிறது. இந்த நான்கு வருடங்களும் மத்திய ஆட்சியில் தி.மு.க தொடர்ந்து முக்கிய பங்காளியாக இருந்து வந்துள்ளபோதும் 356ஆவது சட்டத்தைக் கொண்டுவந்து ஜெயலலிதா அரசைக் கலைக்க தி.மு.க.வால் முடியவில்லை.

முதல்3ஆண்டுகளும்பி.ஜே.பி ஆட்சியிலும் கடந்த ஒருவருடம் காங்கிரஸ் ஆட்சியிலும் தி.மு.க மிகப்பிரதான பங்காளிக்கட்சி; இருந்த போதிலும் ஜெயலலிதா தப்பிப் பிழைத்து வருகிறார். 1991இல் பிரதமர் சந்திரசேகர் அரசில் 12 லோக்சபா எம்.பிக்களைக் கொண்டிருந்த ஜெயலலிதா, அவரைக் கொண்டு 2 வருடங்கள் மட்டும் ஆண்டிருந்த தி.மு.க. அரசைக் கலைத்தார். ஆனால்,



-ரஜினி-

இன்றோ 'ஜெ' அரசு நாலாவது ஆண்டு ஆட்சியைத் தொடுகிறது. 17 எம்.பிக்களைக் கொண்ட தி.மு.க. எதுவும் செய்யமுடியாமல் தடுமாறுவது அதன் போதாத காலம் என்றே சொல்லவேண்டும்.

இதற்கிடையில் இனி ஆட்சி கலைந்தாலும் சிக்கலின்றி ஆட்சி 2006 மே வரை தொடர்ந்தாலும் இரண்டும் ஒன்றே என்ற நிலைக்கு ஜெயலலிதா வந்துள்ளார். அதனால் இப்போதே ஒரு தேர்தல் வந்தாலும் முகம் கொடுக்கத் தயாராக காய்நகர்த்தல் நடைபெறுகிறது.

சங்கராச்சாரியார் வழக்கில் அவர் எதிர்பாராதவிதமாக பி.ஜே.பியின் எதிர்ப்பைச் சந்தித்தாலும் ஒருவேளை வழக்கில் சங்கராச்சாரியார் குற்றமிழைத்தவர் என ஜெயலிதாவால் நிரூபிக்க முடிந்தால் அவருக்கு இரட்டை வெற்றிகிடைக்கும்.

ஏனெனில், சட்டம் ஒழுங்கை கறாராக அமுல்படுத்தும் ஒரு முதல்வர் என்ற பெயரைத் தனக்கு சூடிக்கொள்ளலாம். ஏற்கனவே வீரப்பன் விடயத்தில் வெற்றிபெற்றது மூலம், அதில் சம்பந்தப்பட்ட பொலிஸாருக்கு விழாமேல் விழா எடுத்துப் பாராட்டு வழங்கியது மூலமும், சட்ட ஒழுங்கை முன்னிறுத்தும் தமிழகப் பொலிஸாரிடம் அபரிமிதமான செல்வாக்கை ஜெயலலிதா பெற்றுக் கொண்டுள்ளார்.

வீரப்பன் தப்பித்தப்பி வாழ்ந்தது அரசியல்வாதிகளின் மறைமுக செல்வாக்கினால் தான் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வந்த நிலையில் இரும்புக்கரம் கொண்டு அவனைத்தேடி அழித்ததனால் பிறமாநிலங்களில் ஜெயலலிதாவுக்கு நல்லபெயர். அதிலும் வீரப்பனால் பெரும் தொல்லைக்குள்ளான கர்நாடகாவில் அவருக்கு பெரும் மதிப்புண்டு.

இதைவிட தமிழக அரசியலில் கடந்த காலங்களில் மிக அதிக செல்வாக்கு செலுத்தி வந்த தமிழகத் திரையுலகத்தைக்கூட தன் காலடியில் கொண்டுவந்துள்ளார். அவரது எதிரியான பா.ம.க தலைவர் ராமதாஸ் கடந்த லோக்சபா தேர்தலுக்குமுன் ரஜனிகாந்துடன் மோதியதால் ரஜனி தனது பரமவைரி என்றும் பாராமல் ஜெயலலிதாவை ஆதரித்து வெளிப்படையகப் பிரசாரம் செய்தார். ஆனால், அவரது ஆதரவை ஜெயலலிதா பெரிதாக ஏற்றுக்கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஆதரவு தேவையில்லை என்று சொல்லவுமில்லை. ரஜனி ஆதரவில்லாமலே வென்றோம் என்று மார்தட்டவே அவர் நப்பாசை கொண்டிருந்தார். அது நடக்கவில்லை.

பிறகு ராமதாஸ் மற்றொரு செல்வாக்கு மிக்க நடிகரும், நடிகர் சங்கத்தலைவருமான விஜய்காந்துடன் மோதினார். இந்தச் சந்தர்ப்பத்தில் திருட்டு வி.சி.டி விவகாரத்தால் தமிழகத் திரையுலகம் அவதியுறுவதைக்கண்டு அதை ஒழிக்க தீர்க்கமான பல நடவடிக்கைகளை ஜெயலலிதா அறிவித்தார். இதற்கு நன்றிபாராட்டி நடிகர் சங்கம் விழா எடுத்து ஜெயலலிதாவுக்கு பொன்னாடை போர்த்தியதும் நினைவிருக்கலாம். அவ்விழாவில் ரஜனி கூட கலந்து கொண்டார்.

இதற்கிடையில் ரஜனியின் மகளை நடிகர் தனுஷை காதலிக்க வைத்து திருமணம் செய்துவைப்பதிலும் ஜெயலலிதா திரை மறைவில் நின்று செயற்பட்டார். விழாவுக்கு ஜெயலலிதா பெரும் மதிப்புடன் அழைக்கப்பட்டு ரஜனி 'இனி எனக்கு அரசியல் இல்லை' என அறிவிப்பது வரை விடயங்கள் நடந்து முடிந்தன. ஆக ரஜனி ஜெயலலிதாவின் கைக்குள் வந்துவிட்டார்.

இந்த நிலையில் ரஜனி, விஜயகாந் என திரையுலக பெருந்தலைகளுடன் முட்டி மோதிய ராமதாஸ் கடந்த மாதம் மற்றொரு பெரும் நடிகரான கமலஹாசனுடன் மோதலைத் தொடங்கியுள்ளார். தமிழ்த்திரைப்படத்துக்கு ஆங்கிலப் பெயர் வைக்க விடோம் என ராமதாஸும், தலித் தலைவர் திருமாவளவனும் முழக்கமிட்டது ஜெயலலிதாவையும், கமலஹாசனையும் நெருங்க வைத்துள்ளது.

கமலஹாசனை எதிர்த்து ராமதாஸ் குழு போராட்டம் நடத்துவது பற்றி கடுமையான தொனியில் எச்சரித்த முதல்வர்ஜெயலலிதா, தமிழன் பெயரால் வன்முறை நடப்பதை அனுமதிக்க மாட்டோம் என்று மிரட்டியுள்ளார். ராமதாஸின் கூட்டாளி கருணாநிதியின் கட்சித் தொலைக்காட்சியின் பெயரை "சன் டி.வி" என்பதிலிருந்து மாற்ற வேண்டுமென ராமதாஸ் போராட்டம் நடத்துவாரா? அண்ணாவின் இரு மொழிக் கொள்கைக்கு விரோத



-ஜெயலலிதா-

மானது திரையுலகுக்கு எதிரான போராட்டம் எனவும் கூறியுள்ளார். அவரது பேச்சில் தர்க்கரீதியான நியாயம் உண்டே என்பதை ராமதாஸின் பழைய சாதிச் சண்டை எதிரியும் இன்றைய நண்பருமான திருமாவளவனை சென்ற வாரம் பி.பி.ஸி பேட்டி கண்ட போது தெரிந்தது. சன் டி.வியை எதிர்த்து நீங்கள ஏன் போராட்டம் நடத்தவில்லை என பி.பி.ஸி கேட்க, திருமாவளவன் தடுமாறினார் பதிலின்றி.


சென்ற தேர்தலில் ரஜனி ரசிகர்களை மீறி ராமதாஸ் உள்ளிட்ட திமுக அணியினர் வென்றது சரிதான். ஆனால், அதன் பிறகு விஜய்காந், கமல்ஹாசன் எனப் பெரும் தலைவர்களோடு முட்டிமோதுவது சும்மா இருப்பவர்களை அருட்டி ஜெயலலிதா பக்கம் சேர்க்கும் முயற்சியாகவே கடைசியில் முடியும். ஒட்டுமொத்த தமிழ்த்திரையுலகத்தையும் எதிர்த்து அரசியல் செய்வதும் ஓரளவு கடினம்தான். சினிமாவால் ஆட்சிக்கு வந்த திராவிடக்கட்சிகள் ஒரேயடியாக அந்த சினிமாவை உதறுவதும் சிரமமான விடயமே.

சந்தர்ப்பம் பார்த்து ஜெயலலிதா திரையுலகத்தை தனது கைக்குள் போட்டுக்கொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ளார். தமிழ் நாட்டில் ஆங்கிலம் அவசியமின்றி தமிழுக்குள் தலையீடு செய்வது சினிமாவில் மட்டும் தானா என்ற கேள்விக்கு ராமதாஸ் குழுவினர் பதில் சொல்லியாக வேண்டும். நாட்டுக்கு முக்கியமான பிரச்சினைகள் எவ்வளவோ இருக்க – இதை இழுத்துப்போட்டுப் பெரிதாக்கும் முயற்சி தி.மு.க கூட்டணிக்கு நன்மையைத் தராது.

–எஸ்.சுரேந்திரஜித்–

# முஸ்லிம் பகுதிகளில் ஜே.வி.பியினர் ஊடுருவல்!

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற வடக்கு – கிழக்குப் பகுதிகளில் அரசின்



அஷ்ரப்

நிவாரணப் பணிகள் மாத்திரமல்லாது மீட்பு மற்றும் சுத்திகரிப்பு வேலைகளும் சீராக இடம் பெறவில்லை என்பது யாவரும் அறிந்த விடயமாகும். உறவுகளையும், உடமைகளையும் பேரலைகளுக்குப் பறிகொடுத்து விட்டு நிர்க்கதியடைந்த மக்களுக்கு பொது அமைப்புகளின் உதவிகளே முதலில் கைகொடுத்தன.

டிசம்பர் 26 ஆம் திகதி சுனாமி அனர்த்தம் இடம்பெற்றதைத் தொடர்ந்து, கொழும்பு, கண்டி, குருநாகல் போன்ற மாவட்டங்களில் இருந்த தனிநபர்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும், பொதுநல அமைப்புகளும் நூற்றுக்கணக்கான லொறிகள் மற்றும் வான்களில் நிவாரணப் பொருட்களைக் கொண்டு வந்து இன, மத, மொழி பேதம் பாராது இப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவின. மனிதாபிமான ரீதியில் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர்.

தமிழ், முஸ்லிம் மக்களின் தாயக பூமியான வடக்கு – கிழக்குப் பிரதேசம் சுனாமியால் கடும் பேரழிவுக்குள்ளாகியிருந்த போதிலும் சிங்களத் தேசிய அரசு தென் பகுதியிலேயே கூடிய அக்கறையுடன் நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. இப்போது புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளில் அரசு தென்னிலங்கைக்கே முன்னுரிமை கொடுத்து வருகின்றது.

இவ்வளவு பேரழிவுக்கு மத்தியிலும் இன, மத, பிரதேச வேறுபாட்டை நிலைநிறுத்திக் காட்டியுள்ள அரசு எதிர்காலங்களில் சிறுபான்மையினரை அரவணைத்துச் செல்லும் என எதிர்பார்க்க முடியாது. ஆழிப்பேரலையின் ஊழித் தாண்டவத்தை விட அரசின் பேரினவாதக் கொடூரம் மிகைத்து நிற்கிறது. எனினும், பௌத்த சிங்கள மக்கள் இப்பேரழிவுக்கு மத்தியில் மனிதாபிமானத்துடன் செயற்பட்டுள்ளனர் என்கின்ற உண்மையை மூடி மறைத்துவிட முடியாது.




தென் பகுதியில் சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டிருந்தபோதிலும் அவர்கள் வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்கு அவசர நிவாரண உதவிகளைச் செய்திருக்கின்றனர். மீட்புப் பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

அதேவேளை அவசர நிவாரண உதவிகள், மீட்புப் பணிகள் மற்றும் சுத்திகரிப்பு வேலைகளில் கூட அரசு வடக்கு – கிழக்கில் பாரபட்சம் காட்டியபோது பௌத்த சிங்களப் பேரினவாதத்தில் ஊறித் திளைத்த ஜே.வி.பி. களத்தில் குதித்து உதவிகள் புரிந்தமை இப்பகுதி மக்களை ஆச்சரியமடையச் செய்துள்ளது. குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் அவர்களின் பங்களிப்பு பாரியளவில் கிடைத்திருந்தது. விசேடமாக முஸ்லிம் பகுதிகளில் ஜே.வி.பி. தொண்டர்கள் ஆயிரக்கணக்கானோர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

சுனாமி இடம் பெற்று முதல் இரண்டு, மூன்று நாட்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுக் களைத்து ஓய்ந்த அவ்வப்பகுதி மக்களின் சுமைகளை ஜே.வி.பி.யினர் சுமந்து கொண்டனர். அவர்களின் தியாகம் மிக்க பணிகளைக் கண்டு மக்கள் மூக்கின் மேல் கை வைத்தனர். அவ்வளவு சிறப்பாக அவர்கள் மீட்புப் பணிகளையும், சுத்திகரிப்பு வேலைகளையும் மேற்கொண்டனர். பாதிக்கப்பட்ட வீடுகளை ஜே.வி.பி. தொண்டர்கள் மிகவும் கச்சிதமாகத் துப்புரவு செய்து கொடுத்தனர்.

நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதை விட மீட்புப் பணிகளும், துப்பரவு செய்யும் வேலைகளும் மிகக் கடினமானவையாகும். எனினும், ஜே.வி.பி.யினர் தமது வீட்டு வேலைபோன்று வியர்வை சிந்தி அப்பணிகளில் ஈடுபட்டதைப் பார்க்கின்றபோது அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. கட்டட இடிபாடுகளுக்குள் சிக்குண்டு சிதைவடைந்திருந்த சடலங்களைப் பார்த்து உறவினர்கள் கூட மூக்கைப் பொத்திக் கொண்டு தூர விலகிச் சென்றபோது ஜே.வி.பி.யினர் முகம் சுழிக்காமல் அவற்றை மீட்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

இதனால் இப்பகுதி மக்களின் மனதை ஜே.வி.பியினர் வென்று விட்டனர் என்று தான் சொல்ல வேண்டும். சுமார் ஒரு மாத காலம் அவர்களின் உதவி, ஒத்தாசை – அரவணைப்பு மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனக்



விமல்

கூறினால் அது மிகையாகாது. பேரினவாதக் கும்பல் என்று அடையாளப்படுத்தப்பட்டிருந்த ஜே.வி.பியினர், தமது மனிதாபிமானமான உதவிகளால் கிழக்கு முஸ்லிம்களின் நல்லபிப்பிராயத்தைப் பெற்றிருக்கின்றனர்.

உண்மையில் ஜே.வி.பியின் இலக்கும் தேவையும் அதுவாகத்தான் இருந்தது. முஸ்லிம் பகுதிகளில் காலூன்றுவதற்கான முன்னோடி நடவடிக்கையாகவே நன்கு திட்டமிட்டு ஜே.வி.பி. இப்பணிகளைச் செய்திருக்கிறது. தனி ஒரு அமைப்பு பெரும் எண்ணிக்கையான தொண்டர்களைக் களத்தில் இறக்கி நிவாரணம், மீட்புப் பணிகளில் சிறப்பாக ஈடுபட்ட ஓர் இயக்கமாக ஜே.வி.பி. முத்திரை பதித்துள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)




## சிறுவர் துஷ்பிரயோகம்

சிறுவர்களின் சுகாதாரநலன், வளர்ச்சி, எதிர்கால வளர்ச்சி ஆகியவற்றுக்கு தேவையான கடமைகளை செய்யாதிருத்தல் மூலம் சிறுவர் துஷ்பிரயோகம் நடைபெறுகிறது.

தினசரி மோதல்கள், பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் குடும்பத்தில் உள்ள பிள்ளை உடல் ரீதியான துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றது.

சிறுவர்களுக்கு ஏற்படும் சிறுகீறல்கள், பெரிய காயங்கள், கைகால் உடைதல், மரணம் என்பவற்றால் ஏற்படும் சிறுவர் துஷ்பிரயோகத்தால் நாட்டிற்கு பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

அடித்தல், உதைத்தல், காயப்படுத்துவதன் மூலம் சிறுவர்கள் துஷ்பிரயோகப்படுத்தப்படுகின்றார்கள்.

சிறு பராயத்தில் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்படும் சிறுவர்கள் வயதுவந்ததும் முரட்டுத்தனமான செயல்களில் ஈடுபட முனைவார்கள்.

"சிறுவர்களின் உலகம் சிறுவர்களே உலகம்"

**National Child Protection Authority**

No. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawardenapura, Sri Lanka. Telephone : 94-2778911-14 Fax : 94-2778915

unicef E-mail: ncpa@childprotection.gov.lk / Website: http://www.childprotection.gov.lk




# சுனாமி

பலவருடங்களுக்கு முன்னர் ஜப்பானில் ஒரு கிராமத்தில் ஹமாகுச்சி என்றொரு வயதான அறிஞர் வாழ்ந்துவந்தார். அந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் அரிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தனர். ஹமாகுச்சி ஒரு பெரும் அறிஞர் மட்டுமல்ல பெரும் செல்வந்தரும் கூட. அவர் கடற்கரையை ஒட்டிய சிறிய மலைக்குன்று ஒன்றில் வீடுகட்டி வாழ்ந்து கொண்டிந்தார். கரையோரப் பகுதியில் அந்தக் கிராம மக்கள் வாழ்ந்தனர். ஹமாகுச்சியின் வீட்டைச் சுற்றி அவரது வயல் இருந்தது.

அது ஹமாகுச்சியின் வயலில் அறுவடை முடிந்த காலகட்டம். அறுவடையான முதிர்ந்த நெற்கதிர்கள் கட்டுகளாய் கட்டப்பட்டு வயலில் வரிசையாக சாய்த்து வைக்கப்பட்டிருந்தன. இந்தத் தடவை — கிராம மக்களுக்கும் நல்ல விளைச்சல். எனவே, கிராமம் முழுவதும் சந்தோஷமாக களியாட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

ஹமாகுச்சி — மலையுச்சியில் இருந்த தன் வீட்டின் விறாந்தையிலிருந்து கீழே கிராமத்தில் நடைபெறும் கொண்டாட்டங்களை கவனித்துக் கொண்டிருந்தார். முன்னர் இப்படியான கொண்டாட்டங்களில் ஹமாகுச்சியும் கீழே இறங்கிச் சென்று கலந்துகொள்வார். ஆனால், அன்றைய தினம் கடும் வெப்பமாகவும், புழுக்கமாகவும் இருந்தது. அதனால் ஹமாகுச்சிக்கு மிகவும் களைப்பாக இருந்தது. எனவேதான் கீழே கிராமத்தில் நடக்கும் கொண்டாட்டங்களில் ஹமாகுச்சி கலந்து கொள்ளாமல் — தனது பேரன் தாடாவுடன் வீட்டில் இருந்தார்.

கீழே கிராமம் வண்ண வண்ண லாந்தர்களால் அலங்கரிக்கப்பட்டு அழகாகக் காட்சியளித்தது. கடலில் அஸ்தமித்துக் கொண்டிருந்த சூரியனின் ஒளிக்கற்றைகள் கடற்கரைக்கு வண்ணம் பூசி அலங்கரித்தன.

என்றாலும் இன்று வெப்பம் அதிகமாகத்தான் இருந்தது. கடல் காற்றும் கொஞ்சம் வேகமாகத்தான் வீசியது. திடீரென்று வீடு குலுங்கியது போல் ஒரு உணர்வை ஹமாகுச்சி உணர்ந்தார்.

மலைக்கு அடியாக ஒரு பெரும் அலை உருண்டு செல்வது போல் அந்த அதிர்வு இருந்தது. அதுவும் ஓரிரு கணங்களுக்கு மட்டும் இருந்தது. அப்புறம் எல்லாமே அமைதியாக இருந்தது.

'நிச்சயம் இது ஒரு புவி அதிர்வுதான். ஆனால், மிகவும் தூரத்தில் தான் இது ஏற்பட்டிருக்கின்றது' என்று ஹமாகுச்சிக்கு புரிந்தது. ஹமாகுச்சி பயப்படவில்லை அவரது இந்த நீண்ட வாழ்நாளில் எத்தனையோ புவி அதிர்வுகளை அவர் கண்டிருக்கின்றார். அவரது பார்வை கீழே இருந்த கிராமத்துக்கும் தூரத்தில் தெரிந்த கடலுக்கும் சென்றது.

கிராமத்தில் எதுவித சலசலப்பும் தெரியவில்லை. ஒன்றுமே நடக்காத மாதிரி மக்களின் நடமாட்டம் இருந்தது. கடலில் ஒரு வித்தியாசம் காணப்பட்டது. கடலின் நீல நிறம் எங்கேயோ போய்விட்டது. கடல்கருமை நிறமாக காட்சியளித்தது. இன்னொரு காட்சியும் அவர் கண்முன் விரிந்தது. கடற்கரையை விட்டு கடல் நீர் பல மீற்றர் தூரம் உள்வாங்கப்பட்டிருந்தது. பல மீற்றர் தூரம் கடற்கரை வெறும் மணல்கரையாகக் காட்சியளித்தது.

கடலில் நீரில்லாமல் கரை தெரிவதை கிராமத்து மக்களும் கண்டனர். இப்படியொரு விந்தையான நிகழ்வை தமது வாழ்நாளில் என்றுமே அவர்கள் கண்டதில்லை. மக்கள் கூட்டம் அலையலையாய் — அலையில்லாத வெறும் கடற்கரையை நோக்கி வேடிக்கை பார்க்கச் சென்று கொண்டிருந்தது.

மேலே இருந்து கீழே நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஹமாகுச்சி திடீரென எழுந்தார். தாடா! உடனடியாக ஒரு தீப்பந்தம் கொண்டுவந்து என்னிடம் தா? என்று பேரனுக்கு கட்டளையிட்டார். தாடா வீட்டினுள் சென்றான். (ஜப்பானில் கடற்கரையோரங்களில் அடிக்கடி புயல் அடிப்பதால் அக்காலங்களில் உபயோகிக்க — கடற்கரையை அண்டி வளரும் தாழை மரத்தின் பாளைகளை கொண்டு பந்தங்கள் செய்து வைத்திருப்பார்கள். இவற்றைக் கொளுத்தி தீப்பந்தமாக எந்த புயல்காற்றிலும் அணையாமல் கொண்டு செல்லலாம்). உள்ளே இருந்த தாழைப் பந்தத்தை கொளுத்தி எரியவிட்டு கொண்டு வந்து தாத்தாவிடம் தாடா கொடுத்தான்.

ஹமாகுச்சி எரிகின்ற பந்தத்தை ஏந்திக் கொண்டு தனது வயல் பக்கம் விரைந்து நடந்தார். நடப்பது என்னவென்று புரியாமல் பேரனும் தாத்தாவை பின் தொடர்ந்தான்.

தனது வயலை அடைந்த ஹமாகுச்சி கட்டப்பட்டு வரிசையாக அடுக்கப்பட்டிருந்த அறுவடை செய்யப்பட்ட நெற்கட்டுக்களுக்கு தீவைத்து கொண்டு நடந்தார். காய்ந்திருந்த கட்டுகள் நன்றாகவே பற்றி எரிந்தன. வீசிய கடல் காற்றும் எரிவதை தூண்டிவிட்டது. சில நிமிட நேரத்தில் முழுவயலுமே பற்றி எரிந்தது. கரும் புகை மண்டலம் வானத்தை தொட்டது.

''தாத்தா என்ன செய்கின்றீர்கள்'' என்று பேரன் ஹமாகுச்சியின் பின்னால் கத்திக்கொண்டு ஓடினான். தாத்தாவுக்கு சித்தபிரமைதான் பிடித்து விட்டது. எமது உணவு தரும் நெற்கதிர்களையும், சொத்தான வயலையும் புத்தியுள்ளவர்கள் இப்படி நாசம் செய்வார்களா? பேரன் குழம்பினான். ஆனால், அறுவடையான சகல நெற்கட்டுகளுக்கும் தீவைத்தபின்னர் தான் ஹமாகுச்சி தீப்பந்தத்தை தூர எறிந்துவிட்டு நிமிர்ந்து கீழே பார்த்தார்.

ஹமாகுச்சியின் வீட்டிற்கு மேலே உயரத்தில் ஒரு புத்த கோயில் இருந்தது. அங்குள்ள ஊழியன் கீழே ஹமாகுச்சியின் வயலில் தீ பற்றி எரிவதை கண்டான். தீயை அணைக்க உதவி கோரி — கோயில் மணியை பெலமாக தொடர்ந்து அடித்தான்.

கடற்கரையில் புதினம் பார்த்து நின்ற மக்கள் கோவில் மணி அடிபடுவதை கேட்டு திரும்பிப் பார்த்தனர். ஹமாகுச்சியின் வயல் தீப்பிழம்பாக எரிவதைக் கண்டனர். ஊரின் பெரியவரும், அறிஞரும், செல்வந்தருமான ஹமாகுச்சியின் வயலின் தீயை அணைக்க கடற்கரையில் நின்ற கூட்டம் மலைநோக்கிவந்து ஏறத் தொடங்கியது. இளைஞர் கூட்டம் முதலில் வயலை அடைந்து தீயை அணைக்க முற்பட்டது. ஹமாகுச்சி அவர்களைத் தடுத்தார். "இன்னும் நன்றாக எரியட்டும் விட்டுவிடுங்கள்' என்று கத்தினார். இதற்குள் கிராமத்திலிருந்து ஆண்கள், பெண்கள், குழந்தைகள், சிறுவர், சிறுமிகள், வயதானோர், தாய்மார்கள் என்று முழுக் கிராமமுமே மேலே வந்து விட்டது. மேலே ஏற முடியாத வயோதிபர்கள் கூட மற்றவர்கள் உதவியுடன் மேலே வந்து விட்டனர்.

ஹமாகுச்சி தீயை அணைக்கவிடாமல் தடுப்பதைப் பார்த்த மக்கள் குழம்பிப் 'பெரிசுக்கு என்ன ஆச்சு. ஏன் இப்படி பைத்தியக்கார வேலை செய்கின்றார், என்று மக்கள் பேரனிடம் கேட்டனர்.

'எனக்கு என்ன என்று தெரியவில்லை. சும்மா உட்கார்ந்து கொண்டிருந்த தாத்தா தீப்பந்தம் ஒன்று கேட்டார். கொண்டு வந்து கொடுத்தேன். அவர் ஓடி வந்து இப்படி வயலுக்கு தீ வைத்தார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை' என்று பேரன் புலம்பினான்.

'நான் தான் தீவைத்தேன். என் வயலுக்கு நானே தீ வைத்தேன் கீழே இருந்தவர்கள் எல்லோரும் மேலே வந்து விட்டீர்களா?' என்று ஆவலுடன் கேட்டார் ஹமாகுச்சி.

மக்கள் தங்களைச் சுற்றி ஒரு தரம் பார்த்தனர். 'எல்லோரும் இங்கு இருக்கின்றோம். அது சரி — இப்போது சொல்லுங்கள்; ஏன் இந்த பைத்தியக்கார வேலையை அறிஞரான நீங்கள் செய்தீர்கள்?' என்று மக்களில் ஒருவன் கேட்டான். அவனை ஆமோதிப்பது போல் கூட நின்ற கூட்டமும் தலையை மேலும் கீழும் அசைத்தது.

'கொஞ்சம் திரும்பி அங்கே பாருங்கள்' என்றார் ஹமாகுச்சி. 'இப்போது சொல்லுங்கள் நான் செய்தது பைத்தியக்காரத்தனமான செயலா?' ஹமாகுச்சி கேட்டார்.

மக்கள் கூட்டம் கடலைத் திரும்பிப் பார்த்தது. அந்த மங்கிய வெளிச்சத்திலும் கடல் தெளிவாகத் தெரிந்தது. தொலைதூரத்தில் — அடிவானத்தில் கடலும் வானமும் சந்திக்கின்ற இடத்தில் ஒரு புகை போன்ற கோடு மெல்ல மெல்ல கரை நோக்கி நகர்ந்து வந்தது. தொடர்ந்து கரையை அண்ட அண்ட அந்த கோடு அகலமாகி, உயரமாகி பெரிதாகியது. வெறுமனே கடல் மண்ணாக இவ்வளவு நேரமும் விரிந்து கிடந்த கடற்கரை நோக்கி — அந்த கரையை நோக்கி இந்தக் கோடு வந்தது.

பெரியதொரு மலை வருவது போல் கடல் உயர்ந்து, புரண்டு பயங்கர வேகத்துடன் கரையில் விழுந்தது.

கடல் கிராமத்துக்குள் வருகின்றது என்று மக்கள் அலறினார்கள். அவர்களின் அலறல் முடிவதற்கு முன்னரே பேரலைகள் கரையைத் தாக்கின. பேரலைகள் விழுந்த சப்தத்தினால் மலைப்பிரதேசமே நடுங்கியது.

கடல் அலையின் வெண்நுரைகள் மக்கள் உள்ள இடத்திற்கு பரவி வந்தன. பேரலைகள் வந்து போனபின் கடற்கரை வெறுமையாக கிடந்தது. குடியிருப்புகள் வீடுகள், தோணிகள் ஒன்றையுமே காணவில்லை. முழுக்கிராமத்தையுமே கடல் அள்ளிச் சென்று விட்டது. மக்கள் வாயடைத்து நின்றார்கள். கண்டது நிஜமா என்று மலைத்து நின்றார்கள்.

ஹமாகுச்சியின் குரல்தான் அவர்களை உலகிற்கு கொண்டுவந்தது. 'இதற்காகத்தான் நான் என் வயலை எரித்தேன். உங்கள் கவனத்தை ஈர்க்கவே என் சொத்தை எரித்தேன். எனது வீடு பெரியது. அதற்கு எதுவும் சேதம் ஏற்படவில்லை. உங்களில் பலர் நிலைமை சீரடையும் வரை அங்கு தங்குங்கள். மேலேயுள்ள கோவிலிலும் மிகுதியானோர் தங்கலாம் என்றார் ஹமாகுச்சி.

மக்களுக்கு பெரியவர் ஹமாகுச்சியின் செயலின் காரணம் புரிந்தது. தம்மைக் காப்பாற்ற தனது சொத்தையே அழித்த ஹமாகுச்சிக்கு நன்றி சொல்லுவது போல் அத்தனை மக்களும் மண்டியிட்டு தலை சாய்த்து வணங்கினர்.

*இது ஒரு 'சுனாமி' சிறுகதை. லாப்கேடியோ ஹேர்ன் (Lafcadio Hearn) என்ற கிரேக்க எழுத்தாளர் ஜப்பானிற்கு ஆங்கில ஆசிரியராக சென்று ஜப்பானிய பெண்ணொருத்தியை மணம் புரிந்து - ஜப்பானிலேயே வாழ்ந்தார். அவரது ஜப்பானிய சிறுகதைகளில் ஜப்பானில் கலை கலாசாரம் வாழ்க்கைமுறை என்பன பிரதிபலிக்கின்றன. ஒரு 'சுனாமி' சம்பவத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட இந்தச் சிறு 'சிறுகதை' சுனாமி அலைகளின் குண இயல்புகளை மக்களிடையே விழிப்புணர்வு ஏற்றும் வண்ணம் அமைந்திருப்பது ஒரு சிந்திக்கத்தக்க விஷயம். Burnina of Ricefields என்ற இந்த ஜப்பானிய சிறுகதையின் தமிழ் வடிவம் இது.*

*கடல் திடீரென வற்றிப்போனபோது அந்த அதிசயத்தைக் காண கடலை நோக்கி ஓடிய மக்களைத் திசை திருப்புவதற்காக மலைப் பகுதியில் இருந்த தனது வயலுக்குத் தீ மூட்டுகிறார் ஹமாகுச்சி என்ற ஜப்பானிய முதியவர். தீயை அணைக்க மக்கள் மலைப்பகுதியை நோக்கி ஓடியதால் ஆயிரக்கணக்கானவர்கள் சுனாமிப் பேரலையில் இருந்து தப்பினர்.*

- அருள் -



LBN கேபிள் தொலைக்காட்சி
பணத்திற்கேற்ற பெறுமதி

எப்படி யென்றாலும் வீட்டுவேலைகளை முடித்து விட்டு serial பார்க்க வந்துவிடுவேன். எல்லா நிகழ்ச்சிகளும். நன்றாக உள்ளது. இந்து சமய நிகழ்ச்சிகளை ராஜ் ஜெயா TV யில் நேரடியாக ஒளிபரப்புவதால் அந்த ஸ்தலத்திற்கு செல்லாமலே தரிசிக்க முடிகின்றது. கொடுக்கும் பணத்திற்கு பெறுமதியானது.

இன்றே அழையுங்கள் 5 36 23 23

புதிய அங்கத்தவர் ஒருவரை அறிமுகப்படுத்தி உங்கள் சந்தாப்பணத்தில் 10% கழிவை பெற்றுக் கொள்ளுங்கள் அல்லது 10 பேரை அறிமுகப்படுத்துவதன் மூலம் முற்றிலும் இலவசமான இணைப்பைப் பெறுங்கள்.

* நிபந்தனைகளுக்குட்பட்டது

GET CABLE TV FREE FOR LIFE

LET YOUR EYES FIND THE TRUTH

IMPACT HOUSE OF ADVERTISING


## சுனாமிக்கு பலியானோரை கேலிசெய்த அமெ.அறிவிப்பாளர்

அமெரிக்காவில் ஒலிபரப்பாகும் ரேடியோவில் சுனாமி பேரலைத் தாக்குதலுக்குப் பலியானவர்களைக் கேலி செய்யும் பாடலை ஒரு பெண் அறிவிப்பா ளர் ஒலிபரப்பினார். இதற்குக் கடும் எதிர்ப்புக்கிளம் பிய தைத் தொடர்ந்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

சுனாமி பேரலைத் தாக்குதலால் 13 நாடுகளைச் சேர்ந்த இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பலி யானார்கள். பல லட்சம் பேர் வீடு,வாசல் மற்றும் உடைமைகளை இழந்தனர். பாதிக்கப்பட்ட மக்களுக்காக உலகமே கண் ணீர் சிந்தியது. உலக நாடுகள் உதவிக்கரம் நீட்ட ஓடோடி வந்தன.

ஆனால், அமெரிக்க நாட்டின் "ஹாட் 97" என்ற ரேடியோ நிலையம் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களை கேலி செய்து நிகழ்ச்சியை ஒலிபரப்பியது.

ரேடியோ அறிவிப்பாளர் மிஸ் தர்ஷா ஜோன்ஸ், இன வெறி அதிகமாக உள்ள ஒரு பாடலை ஒலிபரப் பினார்.

நடிகையும், பாடகியும், பாடல் ஆசிரியருமான அவர் ஒலிபரப்பிய பாடல் இதுதான்.

*அன்று ஒருநாள்*
*சூரிய ஒளி வீசிய நாள்*
*காற்று வாங்கிவர*
*கடற்கரைவரை நான் போக*
*20அடி அலை பாய்ந்து வந்தது*
*உங்கள் நாடே அதில் மாய்ந்துபோனது.*
*எங்கு பார்த்தாலும்*
*மரண ஓலம்*
*யாருமே இல்லை மீதம்*
*ஆப்பிரிக்கர் மூழ்கினர்*
*சீனாக்காரர் மூழ்கினர்*
*கடவுளின் சிரிப்புக்கேட்டது.*

இந்தப் பாடல் ஒலிபரப்பானதும், அமெரிக்கா முழு வதும் அதிர்வலைகள் ஏற்பட்டன.

பாடலைக்கேட்டு கோபம் அடைந்த ரசிகர்கள் உடனே ஜோன்சைப் பதவி நீக்கம் செய்யும்படி கோரி ரேடியோ நிலையத்துக்கு 'இ-மெயில்' அனுப்பினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 'ஹாட் 97' நிலையம் மீது அமெரிக்க பெடரல் கொம்யூனிகேஷன்ஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த ரேடியோ நிலையம் மீது 2 கோடி ரூபா அபராதம் விதிக்க வேண் டும் என்றும் கோரினர். அமெரிக்க முஸ்லிம்களும், சீனர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இது நடந்த சில மணி நேரங்களில் ரேடியோ நிலை யம் மன்னிப்புக்கோரியது. ஒரு துயரமானசம்ப வத்தை வேடிக்கையாக்கி, நிகழ்ச்சியை ஒலிபரப்பியதற்காக வருந்துகிறோம். இந்தப் பாடல் யார் மனதையாவது புண்படுத்தியிருந்தால், மன்னிப்புக் கேட்டுக் கொள்கி றோம் என்று ரேடியோ நிலையம் கூறியது.

"ஜோன்சும், மற்றும் அந்தப் பாடல் ஒலிபரப்பில் சம்பந்தப்பட்ட 7 ஊழியர்களும் தங்கள் ஒருவார சம் பளத்தை சுனாமி நிவாரணத்துக்கு நன்கொடையாக வழங்கி உள்ளனர்" என்றும் ரேடியோ நிலையம் அறி வித்தது. ஜோன்ஸ் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.




சுடர் ஒளி ஊடக அனுசரணையுடன்.....

ஐம்பது வருட நிறைவு விழாவைக் கொண்டாடும்
வட்டகொட அமர்நாத் விளையாட்டுக் கழகம்
ஆழிப் பேரலை அனர்த்த நிவாரண நிதிக்காக நடத்தும்

மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டி



தலைமை:
கௌரவ. பி.திகாம்பரம்
(மத்திய மாகாணசபை உறுப்பினர்)

பிரதம அதிதி :
கௌரவ. பெ.சந்திரசேகரன் எம்.பி.
(தலைவர் மலையக மக்கள் முன்னணி)

அனுசரணை : கொழும்பு வாழ் மலையக வர்த்தக நண்பர்கள்
இடம் : அமர்நாத் விளையாட்டுக் கழக மைதானம், மடகொம்பர, வட்டகொட
காலம் : 2005 பெப்ரவரி 4,5,6 ஆம் திகதிகளில்

முதலாம் பரிசு ரூபா 25,000 பணப்பரிசுடன் வெற்றிக் கிண்ணம்
இரண்டாம் பரிசு ரூபா 15,000 பணப்பரிசுடன் வெற்றிக் கிண்ணம்
மூன்றாம் பரிசு ரூபா 10,000 பணப்பரிசுடன் வெற்றிக் கிண்ணம்



தொடரின் சிறப்பாட்டக்காரர் - ரூபா 5,000 பணப்பரிசுடன் நினைவுச் சின்னம்
சிறந்த அடித்தாடும் வீரர் - ரூபா 5,000 பணப்பரிசுடன் நினைவுச் சின்னம்
சிறந்த பந்துயர்த்தும் வீரர் - ரூபா 3,000 பணப்பரிசுடன் நினைவுச் சின்னம்

ஒழுங்கமைப்பு:
அமர்நாத் விளையாட்டுக் கழகம்

தொடர்புகளுக்கு: திலக் 077-6321415

# கவிதைப் புனல்

## இல்லை

இருமனம்
இணையாத
திருமணம்
சொர்க்கமாய்
சுவைப்பதில்லை.
இதயத்தை ஈர்க்காத
கவித்துளி
முத்துக்கள்
இறவாது
வாழ்வதில்லை.
இசையினில்
இனிமை
இணையாத போது
இன்பமே
கிடைப்பதில்லை.
இனிமையற்ற
பேச்சினை எவர்
பேசினாலும் அது
இதயத்தை
தொடுவதில்லை.
இல்லாத
வறியோர்க்கு
இருப்பவர்
ஈயாமலிருந்தால்
அவர் இருந்தும்
பிரயோசனமில்லை.
இல்லாளை
இம்சிக்கும்
கணவனை யாரேனும்
குணவானாய்
ஏற்பதில்லை.
இறைவழிபாட்டிற்கு
இன்னல்கள்
இழைப்போரை
நல்லோராய் யாரும்
ஏற்பதில்லை.
இல்லத்தரசிக்கு
புன்னகை இல்லையேல்
இல்லம் என்றும்
செழிப்பதில்லை.

கவிக்குயிலன்
சேனையூர் – 06



## முதுமை

குடித்துக் குடித்து
கும்மாளமிட்டு
கூத்தடித்து
கூன்விழுந்து
குறுகிய
என்
ஆயுட் காலத்தில்
இளமை மாறிப்
போனதால்
வந்தது! இந்த நலை?

திருமலை நதார்
ஜன்னா நகர்.

## சுனாமிக் குமுறல்

"ஆராரோ ஆரிரரோ
ஆரடிச்சா... எவரடிச்சா...
அடிச்சாரைச் சொல்லியழு
அலையடிச்சுச் செத்தனியோ"

இண்டைக்கு
அழுவது நானல்ல...!
அன்னம்மா அழும் குரல்
அண்டமெல்லாம் கேட்கிறது.

"பந்தல் கட்டி
பற்பல தோரணம் கட்டி
பட்டுப் புடைவையோட
செய்யாத நகையும்
செய்து வச்சு
பகட்டாய் கல்யாணம்
உனக்கு
செய்து வைக்க
ஆசைப்பட்டேன்.
ஊரோட சேர்ந்து நீ
உருக்குலைஞ்சி
போனியோடி
உண்மையாய் அழுகிறேன்
உத்தமியே பதியே
பதிலென்ன?"
பரமசிவம் பதறும் குரல்
பாரெல்லாம் கேட்கிறது.

வெயிலடிக்கும்...
மழையடிக்கும்...
ஆனால்...
இவ்வளவு பெரிய
அலையடிக்கும் என்று
ஆரேனும் கருதலியே...
கடலலையே
எங்கள்

கல்லறையாய்
மாறுமுன்னு
கனவுல கூட
நெனைக்கலியே!

பணம் போச்சி
நகை போச்சி
பரவாயில்லை!
பாவி மக
என் புள்ளையிண்ட
உயிர் கூட சேர்ந்தா
போகோணும்?
பல குரல்கள்
அழுவதை
படைத்தவன்
தான் கேட்பானோ?

வேயப் போட்ட
ஓலையும்
மேயப் போன
வெள்ளாட்டையும்
வெள்ளம் கொண்டு
போயிருச்சே
மூழ்கிப் போன என்
மூத்த மகள மட்டும்
விட்டுட்டு
போகக் கூடாதோ?

தவமிருந்து பெத்தவளை
தண்ணி கொண்டு போயிருச்சே
தனியாளா என்னை மட்டும்
தவிக்க விட்டுப் போயிருச்சே!

மீன் பிடிக்கப் போனவனே
மீனாகிப் போனானே
மீனுக்கு உணவாக
வீணாகிப் போனானே!

மண்ணுக்குள்
புதைந்த
தன் குழந்தையை
மீட்டெடுத்து
மண் துடைத்து
மீண்டும்
மண்ணுக்குள் புதைந்த
அந்த
அப்பனுக்கு
ஆறுதல் சொல்ல
எந்த
சுப்பன்
வரப்போறானோ?

ஊருக்குள் தண்ணி
ஓங்கி
வருகையிலே
தப்பிக்க எண்ணி
தலைதெறிக்க
ஓடையிலே
மேலிருந்து பார்த்தேன் –
ஜாதி
தெரியலியே
ஒரு மதமும்
புரியலியே
தறி கெட்ட
மனிதனுக்கு
தண்ணிதானா பாடம்
எடுக்க வேணும்?
இதுக்குப் பின்னாவது
எஞ்சியவன்
கொஞ்சமாவது
திருந்த வேணும்.

மதன்
கிருலப்பனை.

## எப்போ?

உயிரே
உனைப்பார்க்க
துடிக்கும்
என்
விழிகளுக்கும்
உன்னை
எண்ணி
வாழ்ந்திடும்
என்
உள்ளத்துக்கும்
உன்
பதில் என்ன?

ஊமை கண்ட
கனவாக – என்
உள்ளத்திலிருக்கும்
உண்மைகள்
வார்த்தைகளாய்
உன் வாசல்வர
காத்திருக்க
நீ மட்டும்
ஏன்
இன்னும்
என் நெஞ்சம்
புரியாது
என்னை கொஞ்சம்
கொஞ்சமாய்
வஞ்சிக்கின்றாய்?
உனக்காகவே
உயிர்வாழும்
இந்த
உள்ளத்தை
நீ
உணரப்போவது
எப்போ??

யஸ்மினா
மீசாலை

## இன்று தான் புரிகிறது!.

அன்பே
முன்பெல்லாம்
அடிக்கடி
கூறுவாயே – நான்
உந்தன்
முதுகெலும்பாக
வாழ்கிறேன் என்று
அதனால் தானோ
என்னவோ
இப்போது நீ
என்னை
திரும்பிக் கூட
பார்ப்பதில்லை

ஆர். தேவாணி
புன்னைவனக்கூடம்



## தற்கொலையாளி

வாழ்க்கை
போர்க்களத்தில்
வாள் வீசத் தெரியா வீரன்

எ. டபிள்யூ. எம். ஜவாஹீர்
ஹெரவபொதானை

## முன்னெச்சரிக்கை



பெண்ணே
உன்னை
அழகாகப் படைத்துள்ள
ஆண்டவன்
உன்
மனதினை மட்டும்
ஏன்
கல்லாலே செய்தான்?
உன்னை
காதலிக்கும்
ஆண்களை
கல்லறைக்கு
அனுப்புதற்கான
முன்னெச்சரிக்கையோ
அது?

வி. விஜேந்திரா
யாழ். பல்கலைக்கழகம்

## உனக்குத்தான்!

உனக்கு மட்டும்
தான்
நான் என்று
உனக்குப்புரிந்தும்
நீ
ஏன்
என்னை
அடிக்கடி வந்து
எட்டிப்பார்த்து
விட்டுப்போகிறாய்...?
நீ
அழைக்கும்போது
நானே
உன்னிடம்
வருவேன்.
அதுவரை
கொஞ்சம்
பொறுத்துக்கொள்
காலதேவனே!

எஸ். நிலா,
கொழும்பு.

## கடல் தந்த ஓலத்தாளமும் ஒப்பாரி ராகமும்

இறையே !
நீ இல்லாதிருத்தல்
வேண்டும்.
இல்லையேல்
உன்னால்
இயற்கையை
முறையாய்
இயக்குவதற்கு
இயலாதிருத்தல்
வேண்டும்.

கடலே நீ
உப்புத் தந்து
உரமூட்டினாய்
என்பதற்காய்
உயிர் பறிப்பது
உத்தமமா?
உயிர் வாழும்போது
வியர்வையாலும்
கண்ணீராலும் –
இறந்தபின்பு
ஊனத்தாலும்
உனக்கு நாங்கள்
உப்புத் தந்திருக்கிறோம்.

காணி நிலம்
வேண்டுமென்றால்
ஒதுக்கி வைக்கிறோம்.
உனக்கும்
சொத்து – சுகம்
தேவையென்றால்
எழுதி வைக்கிறோம்.
அதற்காய்...
எம்மைக்கொல்வதென்பது
எப்படி நியாயமாகும்?

கண்ணிமை நோக்கும்
நொடிப்பொழுதுகளில்
எங்களை நோகடித்து
அத்தனை உயிர்களையும்
சாகடித்துச் சென்றாய்.

வலிய வந்து
வலியைத் தந்த
உவர் நீர்ப்பேயே
விடு...விடு...
விட்டுவிடு
உன் வீறாப்பு வித்தை
இத்தோடு ஓயட்டும்.

சமுத்திரமே – நீ
சாதித்துவிட்டாய் என்று
கங்கணம்
கட்டிக்கொள்ளாதே!
இறைவன் மட்டும்
உன்போல் என்னை
விசாலப்படுத்தியிருந்தால்
உன் வேலைகளுக்கு
நான் என்றோ
முடிவு கட்டியிருப்பேன்.
நிலம் வெடித்து
பூமி பூப்பெய்தட்டும்.
அதற்காய் நீ ஏன்
கொந்தழிக்க வேண்டும்?
அந்தப் பெண்மை நிலை
உனக்கு இல்லாதிருக்கலாம்.
உன் கன்னித்தன்மை
கட்டுண்டு கிடக்கலாம்.
மனித இனத்தின்
பெண்குலம்
குழந்தைப் பேறுடையதை
உன்னால்
ஜீரணிக்க முடியாதா?
அதற்காய்
நிலவுயிர்களை
விழுங்குவது
நீதியல்லவே!
ஆதலால்
மலட்டுக்கடலே
விடு, விடு விட்டுவிடு
உன் வீறாப்புவித்தை
இத்தோடு ஓயட்டும்.

போரின்
தயார் நிலைக்காய்
களமாடுமுன் கூட
அறைகூவலும்
அழைப்பும்
அவகாசமும்
வழங்கப்படுகிறது.
கோழைக்கடலே
உன் வருகையை
சொல்லி வைத்து வா
விலகிச் சென்றுவிடுகிறோம்.

கடல் அரக்கியே
உன்னை யார்
கடலன்னை என்றது?
உன்னை யார்
தேவதை என்றது?

உனக்குச் சுனாமி
என்ற பெயர் சூட்டவா
எங்களை
சூறையாடினாய்?
உன் சூதாட்ட
சூட்சுமத்தில்
சிக்குண்டு
உயிர் பிரிந்து
உடல் ஊதி
சிதைந்துபோகவா
ஊருக்குள் வந்தாய்?

பழிக்குப் பழிவாங்கும்
எண்ணமிருந்தால்
சமுத்திரங்களே
உங்களோடு
ஒத்த
சமுத்திரங்களோடு மோதி
உங்களை நீங்களே
உறுஞ்சிக்கொள்ளுங்கள்.

பூ.பிரதீபன்,
திருமலை.

## சமுத்திரத்தின் கெஞ்சல்

புரிகிறது தோழி
என்
வருகைக்கு
நீ கொடுக்கும்
வரவேற்பு.
வந்திருக்க
கூடாதுதான்.
ஆனாலும்
வந்துவிட்டேன்
தோழி.
உன்னை
போல்தான்
நானும்!
செய்ய
கூடாதவற்றை
செய்து விட்டு
நீ
தனிமையில்
அழுவாயே...
அதே போல்
தான் நானும்
இப்போது
ரகசியமாய்
அழுகிறேன்
அவசர அவசரமாய்
பறித்து போன
உயிர்களுக்காக.
போகட்டும்...
இனிமேலாவது
என்
ஆவேச வருகையை
ஆசுவாசப்படுத்தி
கொள்ள
முயல்கிறேன்
ஒரு முறை
என்னைப் பார்த்து
புன்னகை செய்
தோழி.
உன்
பாராமுகத்தை
நானும்
பார்த்துத்தான்
போகிறேன்.

## எங்கே என் பூபாளம்

என்
சின்ன
கவிதைக்கும்
சிம்மாசனம்
தந்தவள் நீ!
இன்றோ
என்
எண்ணக் கடலில்
கவிதை அலைகள்
எங்கெல்லாமோ
அலைந்து தேடுவது
என்னவோ
உன்னைத்தான்!
எந்த மூலையில்
நீ
என்
கவிதைகளில்
என்னை வாசித்து
கொண்டிருக்கிறாய்?
ஏக்க
நெருப்புக்கள்
நெஞ்சைச்சுட
ஆவியாய்
கண்ணீர்
வழிந்தோடுகிறது.
நீ
என்
அருகிலிருக்கும்போது
சத்தங்களுக்குகூட
சம்மதிக்காத
உன்
உதடுகள்
மௌனங்களுக்கெப்படி
நிரந்தர விசா
வழங்கியது?
உன் மௌன
நங்கூரத்தால்
என்
வார்த்தை
கப்பலை
நிறுத்திவிட்டு
எங்கே
போனாய்
நீ?

பெ. விக்னேஸ்வரன்
ஹட்டன்

# ஜனாதிபதியின் நரித்தந்திரம்! ரணில் முறியடிப்பாரா?

சுனாமி அனர்த்தப் பேரழிவுகளுக்கு மத்தியிலும் தனது அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான தீவிர முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திரைமறைவில் ஈடுபட்டு வருகின்றார். கடந்த சில



சந்திரிகா

வாரங்களாக இலங்கையின் அரசியல் அரங்கில் இடம்பெற்று வருகின்ற நிகழ்வுகள் அதனையே எமக்கு உணர்த்துகின்றன.

அம்பாந்தோட்டையில் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் ஆற்றிய உரை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டிருப்பதாக அரச ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் பிரசாரம், ஐ.தே.க. எம்.பிக்களை விலை கொடுத்து வாங்குவதற்காக அரசின் முக்கிய புள்ளிகள் மேற்கொண்டு வருகின்ற பிரயத்தனம் என்பன அவற்றில் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நாட்டில் எந்தத் தேர்தலையும் நடத்த வேண்டிய அவசியம் இல்லை என ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் கடந்த 19 ஆம் திகதி அம்பாந்தோட்டையில் தெரிவித்த கருத்து எல்லோரையும் அதிர்ச்சியடையச் செய்திருக்கிறது.

எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டிய கட்டாயத் தேவை இருந்துகொண்டிருக்கையில் ஐந்து ஆண்டுகளுக்குள் எந்தவொரு தேர்தலும் அவசியமில்லை என்று சுனாமியின் பெயரால் ஜனாதிபதி அரசியல் குதர்க்கம் செய்திருப்பது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை நிலைகுலையச் செய்து விட்டது. அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அதிர்ச்சியால் ஆடிப்போய் விட்டார். தனது ஜனாதிபதியாகும் கனவு நிறைவேறாமல்போகும் என்பதைவிட கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து தான் தூக்கியெறியப்படலாம் என்கின்ற அச்சத்தையும் ஜனாதிபதியின் அறிவிப்பு ரணிலுக்கு ஏற்படுத்திவிட்டது.

### மறுப்புக்கான நிர்ப்பந்தம்

அதனால் அவர் ஜனாதிபதியின் கருத்தை உடனடியாக மறுதலித்துக் கண்டித்தார். உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும் என உரத்த குரலில் கூறினார். ஜீ.எல்.பீரிஸ், ராஜித சேனாரத்ன, திஸ்ஸ அத்தநாயக்க போன்ற ஐ.தே.க. பீரங்கிகளும் செய்தியாளர் மாநாடுகளைக் கூட்டி ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுவதை ஒரு நாள் தானும் பிற்போடப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், சுனாமியின் பெயரால் ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்படுவதை அனுமதிக்க மாட்டோம் எனவும் அடித்துக் கூறிவிட்டனர்.

இதனால் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தனது அறிவிப்பை வாபஸ் பெறவேண்டியேற்பட்டது. அதற்காக ஊடகங்களில் பழியைப் போட்டிருக்கிறது ஜனாதிபதி செயலகம். அம்பாந்தோட்டையில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த கருத்துக்களை ஊடகங்கள் திரிபுபடுத்திவிட்டன என்றும், அடுத்த ஐந்து வருடங்களுக்கு பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டிய அவசியம் கிடையாது என்று தான் அவர் கூறினார் எனவும் ஜனாதிபதி செயலகம் மறுப்பறிக்கை வெளியிட்டது. அத்துடன் உரிய வேளையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பி ஒரு வாரம் கழித்தே ஜனாதிபதி செயலகம் மறுப்பறிக்கை வெளியிட்டுள்ளது. ஜனாதிபதியின் கருத்தை நாட்டு மக்களோ, வர்த்தக சமூகமோ, பொது அமைப்புகளோ, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளோ வரவேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஜனாதிபதி செயலகம் இந்த அறிக்கையை வெளியிடுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியும் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் அறிவிப்பை வரவேற்காமல் மறைமுகமாகக் கண்டித்திருந்ததும், இந்த மறுப்பறிக்கையை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று கூறலாம்.

எவ்வாறாயினும் தான் ஏற்கனவே கூறிய கருத்தை வாபஸ்பெற்றுக்கொள்வது போன்றே ஜனாதிபதியின் மறுப்பறிக்கை அமைந்திருக்கிறது. ஆகையால் அவர் அக் கருத்தை வெளியிட்டதன் பின்னணி பற்றி ஆராய்வது அவசியமாகும்.

### ஜனாதிபதிக்கு அதிஷ்டம்

இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும் என ஐ.தே.க. ஒற்றைக்காலில் நிற்கிறது. அதற்கான மக்கள் எழுச்சிப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஆயத்தங்களில் அக் கட்சி ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே

**–அஸ்லம் எஸ். மௌலானா–**

சுனாமி அனர்த்தம் இடம்பெற்றது.

அதேபோன்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவை சிறையிலிருந்து விடுவிப்பதற்காக ஐ.தே.க. மேற்கொண்டு வந்த ஆர்ப்பாட்டப் பேரணிகளுக்கு ஆழிப் பேரலை முற்றுப் புள்ளி வைத்துவிட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் முதலாவது பட்ஜட் தொடர்பான விமர்சனங்களுக்கும் சுனாமி முழுக்குப்போட்டு விட்டது.

இவையெல்லாம் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்குச் சாதகமாக அமைந்திருக்கின்றன. நாட்டில் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்டோரின் உயிரைக் காவுகொண்டு – பேரழிவை ஏற்படுத்திய சுனாமி, சந்திரிகா அம்மையாருக்குக் கைகொடுத்து உதவியுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. அதனால், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனது அரசியல் இருப்பை நீட்டிக் கொள்வதற்கான தந்திரோபாயங்களை அவர் மேற்கொண்டு வருகிறார்.

அதில் ஒரு அங்கமாகவே 'அடுத்த ஐந்து வருடங்களுக்கு எந்தவொரு தேர்தலும் நடத்த வேண்டிய அவசியம் கிடையாது' என அவர் ஒரு கருத்தை வெளியிட்டு நாட்டு மக்களையும், பொது நல அமைப்புகளையும், பங்காளிக் கட்சிகளையும் நாடி பிடித்துப் பார்த்திருக்கிறார்.

ஐ.தே.க.தனது அறிவிப்பை எதிர்க்கும் என்பதை நன்கு அறிந்து வைத்திருக்கின்ற போதிலும், ஜனாதிபதி இக் கருத்தை



ரணில்

வெளியிட்டதன் நோக்கம் யாதெனில், அக் கட்சி மீதான எதிரலையை மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டும் என்பதே. தேர்தலை ஒத்திப்போட முடியாது – இந்த ஆண்டு டிசம்பரில் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும் என ஐ.தே.க. கூக்குரலிடும். அதேவேளை, இந்தப் பேரழிவுக்கு மத்தியில் தேர்தல் ஒன்று தேவைதானா என்று மக்கள் ஐ.தே.கட்சியைக் கண்டித்து வெறுத்தொதுக்குவர் என ஜனாதிபதி எதிர்பார்த்தார். ஆனால், அவ்வாறான அபிப்பிராயம் மக்களிடமிருந்து மட்டுமல்ல, தனது

(22 ஆம் பக்கம் பார்க்க)


**மணமகள் தேவை**

கொழும்பில் தொழில் நுட்ப முகாமையாளராகப் பணிபுரியும் மது, புகைப்பழக்கம் அற்ற யாழ். இந்து வேளாள மணமகனுக்கு ஓரளவேனும் படித்த அழகான நற்பண்புள்ள தூய சைவ போசன மணமகள் தேவை.

மணமகள் 30க்கும் 34க்கும் இடைப்பட்ட வயதுடையவராகவும், 5 1/4 அடிக்கு மேற்படாத உயரமுடையவராகவும் இருப்பது விரும்பத்தக்கது. தொழில் முக்கியமல்ல. மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம், ஜாதகம், குடும்ப விபரங்களுடன் தொலைநகர் (Fax No) 2599412 அல்லது மின்னஞ்சல் அனுப்பவும்.

(மின்னஞ்சல்–harrihar32@yahoo.co.uk



**இலங்கை இதழியல் கல்லூரி**

இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் (SLPI) ஓர் இணைப்பு அமைப்பு

# பணிப்பாளர்

## – இதழியல் கல்லூரி

இலங்கை இதழியல் கல்லூரி உயர்ந்த தரத்திலான பத்திரிகையாளர்களை உருவாக்கும் முக்கிய நோக்குடன் நிறுவப்பட்டது. இக்கல்லூரி முழுநேர டிப்ளோமா பாடநெறியொன்றை நடத்துவதுடன் குறுகிய தவணைப்படையான மத்திய தொழில்சார் பத்திரிகைத்துறை கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை உயர்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வள ஆய்வுத்திறம் வாய்ந்த வல்லுநர்களைப் பயன்படுத்தி ஒழுங்குமுறையாக நடத்தி வருகிறது. இக்கல்லூரியின் மாணவர்கள் நவீன வசதிகள், கலை உபகரணங்கள் சகிதம் வள ஆய்வு நிலையம் ஒன்றில் கற்கவும் பயிற்சி பெறவும் வாய்ப்பு அளிக்கப்படுகின்றனர். அத்துடன் இலங்கை இதழியல் கல்லூரி சுவீடனின் பத்திரிகையாளர்களுக்கான மேற்கல்வி நிறுவனமான "போஜோ"வுடன் பங்குதாரராக விளங்குவதால் அது ஒப்புற்ற மேன்மை வாய்ந்த நிலையமாக பலம் பெற்றுத் திகழ்கிறது.

இதழியல் கல்லூரியில் "இதழியல்துறை கல்லூரி - பணிப்பாளர்" பதவிக்கான வெற்றிடம் உள்ளது. இதழியல்துறை பணிப்பாளர் பதவியானது இக்கல்லூரிக்குள்ளான அதிசிரேஷ்ட நிலைவாய்ந்த பதவியாகும். இப்பதவியானது இப்பிராந்தியத்தில் இக்கல்லூரியை பத்திரிகையாளர் பயிற்சிக்கான அதிமேன்மை வாய்ந்த நிலையம் என்ற அந்தஸ்துக்கு வழிநடத்திச் செல்லும் முழுமையான பொறுப்பைக் கொண்டுள்ளது. இப்பதவியை வகிப்பவர் இலங்கை பத்திரிகைத்துறை நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபைக்கும் இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் செயலாளர் நாயகத்துக்கும் அறிக்கையிடுபவராக இருக்கும் அதேவேளை உயர்ந்த அனுபவம் வாய்ந்த ஊடகத்துறைப் பயிற்சி வல்லுனர் குழு ஒன்றுடன் சுதந்திரமாக பணிபுரிபவராகவும் இருப்பார். இப்பதவிக்கு நிறைவான

இப்பதவிக்கான விண்ணப்பதாரர் கொண்டிருக்க வேண்டிய ஏனைய தகைமைகளாவன:-

- இளமாணி பட்டம் மற்றும் ஊடகக் கல்வி அல்லது அது தொடர்பான கல்வித்துறையில் பட்டப்பின் படிப்பு தகுதிகள் விரும்பத்தக்கது.
- ஆங்கில மொழியில் சிறந்த தேர்ச்சி மற்றும் மிகச்சிறந்த தொடர்பாடல் மற்றும் பொது மக்கள் தொடர்புகளில் திறன்கள்.
- ஊடக நிறுவனங்கள், பயிற்சி கல்வி ஸ்தாபனங்கள், சிவில் சமூக நிறுவனங்கள் அல்லது கூட்டு அமைப்பு ஆகியவற்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவம் பெற்றதற்கான நிரூபிக்கப்பட்ட அத்தாட்சி.
- ஊடக நிறுவனங்களுடனும் அவை தொடர்பான தொழில்சார் நிறுவனங்களுடனும் மிகச்சிறந்த தொடர்பு கொண்டிருத்தல்.
- சர்வதேச ரீதியில் இது போன்ற பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்தக் கூடிய திறமை.

இதழியல் கல்லூரிப் பணிப்பாளர் ஒழுக்கத்திலும் நடத்தையிலும் உயர்ந்த தரங்களை நிறுவுபவராகவும் அவற்றைப் பேணுபவராகவும், சிறந்த நடைமுறைகளைக் கடைப்பிடித்து மிகச் சிறந்த முன்மாதிரியாக விளங்குபவராகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரருக்கு கணிசமான ஊதியக் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் வாகனம் ஒன்றும் பாவனைக்கு வழங்கப்படும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் உறவு அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு விபரங்களுடன் விபரமான சுயவிபரக்கோவையை (CV) கீழ்க்காணும் முகவரிக்கு 2005 பெப்ரவரி 15ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை பத்திரிகை நிறுவனம்
65/5, வாட் பிளேஸ்,
கொழும்பு - 7

இலங்கை பத்திரிகை நிறுவனம் சமத்துவமான வாய்ப்பு வழங்கும் நிறுவனமாகும்.



**பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ காட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

பெப்ரவரி 20 – 26 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368477, Cell. 0722 970796
Hot Line: 0777 569205

**வவுனியாவில்...**

பெப்ரவரி 05 - 06 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**யாழ்ப்பாணத்தில்...**

பெப்ரவரி 10 -16
A.S.N. கல்யாண வீடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5199

பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Kootavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர் ஒளி

பெப்.06 - 12, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## அதிகரிக்கும் முரண்பாடுகள்!

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான முரண்பாடுகள் சமீபகாலமாக அதிகரித்து வருகின்றன. அரசுக்கு அளித்துவரும் ஆதரவை ஜே.வி.பி விலக்கிக் கொள்ளும் நிலைமை உருவாகிவருகிறது.

ஜே.வி.பியும் சுதந்திரக் கட்சியினரும் பல இழுபறிகளுக்கு மத்தியில் மாதக்கணக்கில் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே பொதுத் தேர்தலில் இணைந்து போட்டியிடும் முடிவுக்கு வந்தனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டனர்.

அரசு பதவிக்கு வந்து ஒரு வருடம் கூட நிறைவு பெறவில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெறும் போராட்டத்திலேயே பல மாதங்கள் கழிந்தன.

தற்பொழுது இ.தொ.க, முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்றோர் ஆகியோரின் ஆதவுடன் பெரும்பான்மைப் பலம் கிடைத்துவிட்டது. சபாநாயகர் தெரிவில் தோற்றுப் போன அரசு வரவு செலவுத் திட்டத்தை பெரும் எண்ணிக்கையான வாக்குகளால் நிறைவேற்றக் கூடியதாக இருந்தது.

ஆகவே பெரும்பான்மைப் பிரச்சினை தீர்ந்து விட்டது. தற்பொழுது அதற்கு சவால் விடும் மற்றொரு பிரச்சினை உருவாகி விட்டது.

ஜே.வி.பிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான முரண்பாடே அது. பெரும்பாலும் சகல விடயங்களிலும் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இதுவரை அரசியல் ரீதியில் இருந்த முரண்பாடுகள் தற்பொழுது தொழிற்சங்க ரீதியிலும் ஆரம்பித்துவிட்டன என்றே கூற வேண்டும்.

ஜே.வி.பி. சார்பான 63 தொழிற்சங்கங்கள் அரசுக்கு எதிராக போர்க்கொடி தூக்கி உள்ளன.

இந்த அரசு பதவிக்கு வந்த பின்பு இடம் பெற்ற சில வேலை நிறுத்தங்கள், தொழிற்சங்கப் போராட்டங்களில் ஜே.வி.பியின் கரம் பின்னால் இருந்ததாக குற்றச் சாட்டுக்கள் எழுந்தன. எனினும் ஜே.வி.பி இவற்றை மறுத்திருந்தது. தற்பொழுது இது பகிரங்கமாக வெளிக்கிளம்பி இருக்கிறது.

அரசதுறைகளை தனியார் மயமாக்கல், 100 மீற்றல் தூர கடல் பிரதேசத்தை அனர்த்த பிரதேசமாக பிரகடனப்படுத்தல், இடைக்கால தன்னாட்சி அதிகார சபை, ஆழிப் பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளில் புலிகளையும் இணைத்துக கொள்ளுதல், புதிதாக அமைச்சர்களையும் அதிகாரிகளையும் நியமனம் செய்தல் ஆகியவை தொடர்பாக ஜனாதிபதி தன்னிச்சையாக முடிவுகளை எடுத்துள்ளார் என்றும் தம்மை முற்றாக ஓரம் கட்டிவிட்டார் என்றும் ஜே.வி.பியினர் கருதுகின்றனர்.

முக்கிய விடயங்கள் தொடர்பாக முடிவுகளை எடுக்கும் போது ஜனாதிபதி ஜே.வி.பியினருடன் கலந்தாலோசிக்க வேண்டும், அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தக் கூடாது என்ற பல நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அரசுக்கு ஆதரவு வழங்க ஜே.வி.பி இணங்கி இருந்தது.

தற்பொழுது ஜனாதிபதி தம்மைப் புறக்கணித்து வருகிறார் என்று ஜே.வி.பியினர் குற்றஞ்சாட்ட ஆரம்பித்துள்ளனர். அரசு விட்டுக் கொடுப்புக்களுடன் நடந்து கொள்ளாவிட்டால் அரசுடன் உறவை வெட்டிக் கொள்ள வேண்டும் என்ற கருத்து ஜே.வி.பியின் உயர் மட்டக் குழுவில் மேலோங்கி இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் குறுகிய நோக்கத்துடனேயே கடந்த பொதுத் தேர்தலில் ஜே.வி.பியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து போட்டி யிட்டன.

தற்பொழுது முரண்பட்டு நிற்கின்றன. ஆனால், இரு தரப்பினருமே தங்களுக்கிடையிலான உறவைத் துண்டிக்கத் தயா ரில்லை போன்று தெரிகிறது.

ஜே.வி.பியினர் அங்கம் வகிக்கும் — ஆட்சியில் பிரதான பங்காளியாக இருக்கும் — எந்த ஓர் அரசினாலும் இனப்பிரச்சினைக்கு தீர்வ காண முடியாது.

# ஆழிப்பேரலை அனர்த்தம் எஞ்சியது நெருக்கடியே!

கடல் பேரனர்த்தத்தின் பின்னரான இலங்கையின் நிலை முன்பு எதிர்பார்த்ததற்கு மாறாக இன்னொரு திசையில் செல்லத் தொடங்கியிருப்பதுபோல் தெரிகிறது.

சுனாமி கடல் அனர்த்தத்துக்கு முன்னர் இலங்கையில் கள நிலைமை வேறு மாதிரியாக இருந்தது. யுத்தம் தவிர்க்க முடியாத ஒரு தெரிவாக நெருங்கி வந்து கொண்டிருந்தது. ஆனால், பேரனர்த்தம் நிலைமையை மாற்றியிருந்தது.

எனினும் தற்போது இப்பேரனர்த்தம் மாற்றத்துக்குப் பதிலாக நெருக்கடியையே தந்துவிட்டுச் சென்றுள்ளது.

இந்த நெருக்கடிச் சிக்கலை இரண்டுவகையில் பார்க்கலாம். முதலாவது வடக்குகிழக்கு மனிதாபிமான நெருக்கடி; இரண்டாவது தென்னிலங்கையின் அரசியல் நெருக்கடி. இந்த இரண்டையும் இங்கு விரிவாகப் பார்க்கலாம்.

### முதல் நெருக்கடி

முதலாவதாக வடக்கு– கிழக்கில் கடல் அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண—புனர்வாழ்வு— மீள்குடியேற்றம் ஆகியவற்றை உள்ளடக்கிய மனிதாபிமான நெருக்கடி முன்னணிக்கு வந்துள்ள அதேவேளை அரசியல் பிரச்சினையும் அதனுடன் பிணைந்துள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டி இருக்கிறது.

கடல் அனர்த்தத்தின் பின்னர் வடக்கு கிழக்கு கடற்கரைப் பகுதிகளுக்கான உதவிகளில் அரசு பாரபட்சம் காட்டியே வருகின்றது. சர்வதேச நாடுகளின் உதவிகள் குவியத் தொடங்கியதில் இருந்து தற்போது வரை சொற்ப அளவு நிவாரண உதவிகளையே தமிழர் தாயகப் பகுதிகளுக்கு அரசு அனுப்பியது. அதிலும் ஏகப்பட்ட தில்லுமுல்லுகள் நடந்துள்ளன என்று தெரிய வந்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களே நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஊடாக உதவிகளைச் செய்து வருகின்றன. அதிலும் தற்போது நெருக்கடி தோன்றும் நிலை ஏற்படப்போகிறது. அதாவது சட்ட விரோத உபகரணங்களும் நிவாரணப் பொருட்களுடன் வருவதாகக் கூறி அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அரசு புதிய சட்ட வரைபுகளைத் தயாரிக்கப் போகிறது. ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இது குறித்து முடிவாகியுள்ளது. இதுகூட தமிழர் தாயகப் பகுதிகளுக்கு நிவாரணம் நேரடியாகச் செல்வதைத் தடுக்கும் ஒரு கைங்கரியம் ஆகும்.

இந்த நிலையில் அரசு—புலிகள் தரப்புகள் சமாதான செயலகங்கள் ஊடாக பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதிகளுக்கு உதவிகளை வழங்க ஒரு பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது குறித்து ஏழு சுற்றுப் பேச்சுகள் நடத்தியபோதும் முன்னேற்றம் எதுவும் இல்லை. இப் பேச்சுகளில் விபரங்களும் பொதுக்கட்டமைப்பு பற்றிய தகவல்களும் கசிந்துள்ளன.

தமிழர் தாயகப் பகுதிகளில் நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக அமைக்கப்படும் இக்கட்டமைப்பில் பதினொருபேர் அங்கம் வகிப்பதெனவும் இதில் ஆறுபேர் புலிகளாலும் ஐந்துபேர் அரச தரப்பாலும் நியமிக்கப்படுவார்கள் என்னும் இரு தரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால், உருவாக்கப்படும் பொதுக் கட்டமைப்புக்கு நிறைவேற்று அதிகாரி ஒருவர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார் என அரச தரப்பில் பிடிவாதமாக கூறப்பட்டதாலும் இந்தக் கட்டமைப்பில் இலங்கை அரசின் திறைசேரியின் அதிகாரமோ — மேலாண்மையோ இருக்கக் கூடாது என புலிகள் வற்புறுத்தியதாலும் இந்த இரு தரப்புப் பேச்சுக்களிலும் ஒரு தொய்வு ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையை தீர்க்கும் ஒரு விடயத்தில்கூட தனது மேலாண்மையை நிறுவ சிங்கள தேசம் முனைவதானது, தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண சிங்கள தேசம் எவ்வளவு தூரம் முன்வரப் போகிறது என்ற கேள்வியை எழுப்புகிறது.

சர்வதேசம் கொடுத்து வரும் அழுத்தத்தின் காரணமாகவே தமிழர் தாயகப் பகுதிகளில் ஒருகட்டமைப்பை நிறுவ அரசு முன் வந்தது. எனினும் அதற்கு முட்டுக்கட்டைகளைப் போட்டு அதையும் குழப்பியடித்து வருகிறது. எனவே இதுவும் ஒரு இழுத்தடிப்பு நாடகத்தின் வெளிப்பாடு தான்.



அண்மையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்த கருத்து, தமிழ் மக்களுக்கு அரசின் நிலைப்பாட்டைத் தெளிவாக தெரியப்படுத்துவதாய் இருந்தது. சர்வதேசத்தின் உதவி நேரடியாக புலிகளுக்கு வழங்கப்படாது என கதிர்காமர் உறுதிப்படுத்தியிருந்தார். எனவே, அரசை நம்பும் அளவுக்கு தமிழ் மக்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்லர்.

நிவாரண நடவடிக்கைகளைப் பொறுத்தவரை தென்னிலங்கையில் காட்டும் தீவிரமும் வேகமும்,தமிழர் தாயகப் பகுதிகளில் இல்லை என்பதுடன் கிட்டத்தட்ட அரசால் கைவிடப்பட்ட நிலையில் தான் வடக்கு கிழக்கு உள்ளது. அதுமட்டுமன்றி தமிழர் தாயகப் பகுதிகளுக்குச் சென்றடையும் உதவிகளையும் தடுத்து நிறுத்திவிடுவதிலும் அரசு ஆர்வம் காட்டி வருகின்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வரும் நிவாரண நடவடிக்கைகளையும் இராணுவ இரும்புக்கரங்களால் நசுக்கும் நடவடிக்கைகளையும் சிங்கள அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழர் தாயகப் பகுதிகளில் புலிகளின் மேலாண்மையே நிலவி வருகிறது. இந்த யதார்த்தத்தை உணராது அரசு தனது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்பட்டு வருவது ஏற்கனவே சிங்கள—தமிழ்ச் சமூகங்கள் மத்தியில் வேரூன்றியுள்ள ஆழமான பிளவை மேலும் ஆழமாக்கிவிடும் நிலையே உள்ளது.

சுனாமி கடல் பேரனர்த்தம் நடந்து சில தினங்களில், இப் பேரனர்த்தம் சகலரையும் ஒன்றிணைய வைத்துள்ளது என ஜனாதிபதி கூறியது இன்று நகைப்புக்கிடமாகிப் போயுள்ளது. மேலும், ஒன்றிணைக்காது பிளவுபடுத்தியுள்ளது அரசின் நகர்வுகள். இவை வடக்கு—கிழக்கை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ள நெருக்கடிகள்.

### 2ஆம் நெருக்கடி

மற்றைய இரண்டாவது நெருக்கடி தென்னிலங்கையை மையப்படுத்தி எழுந்துள்ள அரசியல் நெருக்கடி.

தென்னிலங்கையின் பிரதான இரு அரசியல் கட்சிகளிடையேயான முறுகல்கள் கடல் பேரனர்த்தத்தின் பின் ஓரளவு ஒய்ந்துள்ள போதும் அரசின் ஆட்சிப் பங்காளிகளிடையே முரண்பாடு வலுத்து வருகிறது. இந்த நிலை நீடிக்குமா? முடிவுக்கு வருமா? என்பதைப் பொறுத்தே தென்னிலங்கை அரசியல் மாற்றத்தின் அறிகுறிகளை அறிய முடியும்.

முரண்பாட்டு நிலை நீடித்தால் அரசின் ஆயுளுக்கு ஆபத்து ஏற்படுவது நிச்சயமானது. தற்போதைக்கு முடிவுக்கு வந்தாலும் இப்பிரச்சினை நீறு பூத்த நெருப்பாகவே இருந்துகொண்டிருக்கும். அது மீண்டும் மீண்டும் பிரச்சினையை தொடரவே செய்யும்.

கடல் அனர்த்தத்தின் பின்னர் நிவாரண நடவடிக்கையில் அரசு மேற்கொண்ட நடைமுறையே விரிசலை ஏற்படுத்தியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு பூரண ஆதரவு வழங்குவதாக அறிவித்தபோதும் அதைப் பெரிதாகக் கணக்கெடுக்கவில்லை. அத்துடன் பங்காளியான ஜே.வி.பியையும் ஜனாதிபதி ஓரங்கட்டத் தொடங்கியமை எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தமை போன்றமைந்துவிட்டது.

**பிங்கலன்**

நிவாரண நடவடிக்கையில் ஜே.வி.பி தனது தொண்டர்களை தனியாகவே களமிறக்கியிருந்தது. அரசுடன் இணைந்துபோக அந்தக் கட்சி விரும்பாமையின் வெளிப்பாடுதான் அதுவும்.

ஒட்டு மொத்தமாக சுனாமிப் பேரலை இப்போது ஒரு அரசியல் வடிவில் சுழன்றடிக்க ஆரம்பித்துவிட்டது.

அனர்த்தத்துக்குப்பின்னர் ஒரு மிகச் சிறந்த ஒருமைப்பாட்டுக்கான சூழல் தோன்றியிருந்ததுடன் புரிந்துணர்வுடன் கூடிய ஒரு நிலையும் இருந்தது. ஆனால், அதை அரசாங்கம் தனது அரசியல் சதுரங்க காய்நகர்த்தல் மூலம் நிர்மூலமாகியுள்ளது.

தேசிய மட்டத்தில் புரிந்துணர்வும், நெருக்கமும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக விரிசல்களே மிஞ்சிக்கிடக்கின்றன. இன்னும் சிறிது பொறுத்திருந்து பார்த்தால் நிலமை மேலும் வெளிச்சமாகக் கூடும்.

# முஸ்லீம் பகுதிகளில்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

### முஸ்லிம் போராளிகள் எங்கே?

மேடைப் பேச்சுக்களிலும், ஊடகங்களிலும் தம்மைப் போராளிகள் எனப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்ற முஸ்லிம் கட்சிகளின் தொண்டர்கள் எங்கே என்று வாக்களித்த மக்கள் கேள்வி எழுப்புகின்ற அளவிலேயே அவர்களின் பங்களிப்பு அமைந்திருந்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் சிலர் கட்சியின் சின்னம் பதித்த ரீசேட்,தொப்பிகளை அணிந்து கொண்டு சில இடங்களில் சேவை செய்த போதிலும் அவை பாதிக்கப்பட்ட மக்களைத் திருப்திப்படுத்தவில்லை. ஜே.வி.பியினரின் அதிரடியான பணிகளைக் கண்ணுற்று மு.கா.தலைமை, கட்சித் தொண்டர்களை போதியளவில் களத்தில்இறக்குவதற்கு மேற்கொண்ட முயற்சி கைகூடவில்லை. திட்டமும் இல்லாமல் கட்டுக்கோப்பும் இல்லாமல் போட்டிக்கு—ஒப்புக்காக எதையாவது செய்வோம் என்ற நிலையே முஸ்லிம் காங்கிரஸிடம் காணப்பட்டது.

தேசிய முஸ்லிம் காங்கிரஸ், நு-ஆ போன்ற கட்சிகளின் தொண்டர்கள், போராளிகள் பெயரளவில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.கட்சி அமைப்பாளர், அமைச்சு இணைப்பாளர்கள் சிலரே இப் பணிகளில் முன்னின்றனர். வேறு எவரும் காணப்படவில்லை. தேர்தல் காலங்களில் மக்களின் வாக்குகளைச் சூறையாடுவதற்காக கச்சை கட்டிக் கொண்டு களத்தில் நிற்கின்ற முஸ்லிம் கட்சிகளின் போராளிகளைக் கூட்டமைப்பு ஒன்றுடன் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கான திட்டமோ, தைரியமோ இல்லாமல் முஸ்லிம் தலைமைகள் வங்குரோத்து நிலையில் இருப்பதே இப்பின்னடைவுக்குக் காரணமாகும்.

இதனை ஜே.வி.பி.நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளது என்பதையே எம்மால் உணர முடிகிறது. இந்த நாட்டில் பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கான அத்தனை முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கின்ற ஜே.வி.பி.முஸ்லிம் பகுதிகளில் தளமொன்றை ஏற்படுத்துவதற்கான அத்திவாரத்தையே இப்போது இட்டிருக்கிறது.

### காத்திருக்கும் ஆபத்து

முஸ்லிம் கட்சிகள் தோன்றிய பின்னரும் ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி போன்ற தேசியக் கட்சிகளுக்கு கணிசமானளவு முஸ்லிம்கள் வாக்களித்து வரும் சூழ்நிலையில் ஜே.வி.பியின் அரசியல் காய் நகர்த்தல், அக்கட்சிக்கு ஓரளவு நல்ல பயனைப் பெற்றுக்கொடுக்கும் என்றே அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

சிங்களத் தேசியக் கட்சிகளிடமிருந்து முஸ்லிம் சமூகத்தை மீட்டெடுப்பதற்காகவே முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. அந்த முயற்சியும் இலக்கும் வீண்போகவுமில்லை. இலங்கை முஸ்லிம்கள் குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மு.கா.கொடியின் கீழ் அணிதிரண்டு கொண்டிருந்தபோதே அதன் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் திடீர் மறைவு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து கட்சி பிளவுபட்டு தலைவர்கள் பலர் உருவாகினர்.

அவர்கள் தமது சுய அரசியல் லாபங்களுக்காக — அமைச்சுப் பதவிகளுக்காக — பெருந்தொகைப் பணத்திற்காக பேரினவாதக் கட்சிகளுடன் கூட்டிணைந்து முஸ்லிம் சமூகத்தை ஏற்கனவே தாரைவார்த்து விட்டனர். அதனால் எந்த அரசு பதவிக்கு வந்தாலும் அடிமைச் சமூகமாகவே முஸ்லிம்கள் வழி நடத்தப்படுகின்றனர்.

இந்நிலையில் முஸ்லிம் பிரதேசங்களில் ஜே.வி.பியினர் காலூன்றுவதற்கு மேற்கொண்டிருக்கின்ற முயற்சிகள் எதிர்காலத்தில் பெரும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என புத்திஜீவிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். அவ்வாறான ஒரு சூழ்நிலை உருவாகாமல் தடுப்பது முஸ்லிம் தலைவர்களின் கடமை எனக் கூறிவிட்டு எவரும் வாளாவிருக்க முடியாது. ஏனெனின் அவர்களே ஜே.வி.பி. கட்சிக்கு சோரம் போகமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது. ஆகையினால் பொது நல அமைப்புகளும், புத்திஜீவிகளும் விழிப்புடன் செயற்படுவது அவசியம் என்பதைப் புரிந்து கொள்வோமாக!

—அஸ்லம் எஸ்.மௌலானா—

# மார்பகத்தில் ஏற்படும் கட்டியும் மருத்துவ பரிசோதனையும்

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமஸ்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு – 14

**கே: எனது மகன் வயது 5. ஒன்பது மாதத்தில் போட்ட தடுப்பூசியின் பின்னர் காய்ச்சல் ஏற்பட்டு கால் கை வலிப்பு வந்தது. அதன் பின்னர் காய்ச்சல் ஏற்பட்டால் கட்டாயம் வலிப்பு வருகின்றது. வைத்திய நிபுணர்கள் காய்ச்சல் வராமல் பார்த்துக் கொள்ளும்படியும் வலிப்பு வராதிருக்க – லுமினால் (LUMINAL) மாத்திரை உபயோகிக்கும் படி யும் கூறுகின்றார்கள். எனது மகன் குணமடைய மருந்து கூறுங்கள்?**

ப: பொதுவாகப் பார்க்கும்போது உங்கள் மகனுக்கு எற்பட்டிருப்பது அநேகமான குழந்தைகளுக்கு காய்ச்சல் வரும்போது ஏற்படும் FEBRILE CONVULSIONS என்கின்ற வலிப்பு குணம் போல் தெரிகிறது. காய்ச்சல் ஏற்படும் போது உடல் வெப்பம் மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாய்களால் மூளைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மூளையின் கலங்களைத் தூண்டுகின்றன. மூளையின் கலங்கள் தூண்டப்படும் போது அவை சிறு மின் அதிர்வுகளை ஏற்படுத்துவதால் கை கால் தசைகள் சுருங்கி விரிவதே வலிப்பு என்கின்றோம். என்ன வெப்ப நிலையில் இந்த அதிர்வுகள் ஏற்படும் என்பது குழந்தைகளுக்குக் குழந்தைகள் – வேறுபடும். சில குழந்தைகளுக்கு 100° F வெப்ப நிலையிலேயே வலிப்பு ஏற்படும். சிலருக்கு 102°F வெப்பநிலை வரும்வரை ஒன்றும் நடவாது. இப்படியான காய்ச்சலுடன் வரும் வலிப்புகள் குழந்தைகளின் மிக இளம் வயதிலேயே தொடங்கி ஆறு ஏழுவயதில் நின்றுவிடும். இப்படியான குழந்தைகளுக்கு காய்ச்சல் வந்தவுடன் வெப்பத்தை குறைக்கக் குளிர் நீர் துணியால் உடல் முழுவதையும் துடைத்து விடுவதோ (FOMENT) அத்துடன் காய்ச்சலை குறைக்கும் பரசற்றமோல் (PARACETAMOL) மெவ்னேமிக் அசிட் (MEFNAMIC ACID) மாத்திரைகளை கொடுப்பதோ நல்லது. எதற்காக உங்கள் வைத்தியர் LUMINAL என்ற பீனே பார்பிற்றோன் (PHENOBARBITONE) மாத்திரைகளை உபயோகிக்க வேண்டாம் என்றார் என்பது புரியவில்லை. இப்படியான குழந்தைகளுக்கு காய்ச்சல் விடும்வரை வலிப்பு ஏற்படாமல் இருக்க மூளையை அமைதிப்படுத்தும் (SEDATING) PHENOBARBITONE 1/2 GRAIN அல்லது DIAZEPAM 2mg மாத்திரைகள் கொடுப்பது அவசியம் என்று குழந்தை மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றார்கள். வலிப்பு அதிகம் ஏற்பட்டால் அதனால் மூளை பாதிக்கப்படலாம் என்பதாலும் வலிப்பின் போது வாந்தி ஏற்பட்டு, வாந்தி மூச்சுக்குழாயினுள் சென்று நியூமோனியா என்கின்ற சுவாசநோய்களைத் தரலாம் என்பதாலுமே இப்படி வலி ஏற்படாமல் மாத்திரைகளை வைத்தியர்கள் உபயோகிக்க அறிவுரை தருகின்றார்கள்.

உங்கள் குழந்தைக்கு ஒன்பது மாதம் வரை



காய்ச்சலுக்கு வலிப்பு எற்படவில்லை என்று கூறுகின்றீர்கள். ஒன்பது மாதத்தில் கொடுக்கப்படும் தடுப்பூசி MEASLES, MUMPS, RUBELLA (MMR) என்கின்ற, தட்டம்மை, பொன்னுக்கு வீங்கி, ரூபெல்லா நோய்களுக்குரியது. இதில் உள்ள பொன்னுக்கு வீங்கி மருந்து சில வேளைகளில் வலிப்பு நோயை ஏற்படுத்தும் என்பதால் சில நாடுகளில் இதனை உபயோகிப்பதில்லை. எதற்கும் உங்கள் மகனை விசேட நரம்பு சிகிச்சை நிபுணரிடம் (NEUROLOGIST) காட்டி ஆலோசனை பெறுங்கள். சில வேளைகளில் நாம் காய்ச்சலால் ஏற்படும் வலிப்பு நோய் என்று எண்ணுவது EPILEPSY என்கின்ற கால் கை வலிப்பு நோயாக கூட இருக்கலாம். ELECT-RO ENCEPHALO GRAM என்கின்ற EEG பரிசோதனை செய்வது நல்லது.

**கே: பெண் வயது 18. எனது வலது பக்க மார்பகத்தில் 5 மாதங்களாக கட்டி ஒன்று உள்ளது. டாக்டரிடம் காட்டியபோது மாறிவிடும் என்று மருந்து தந்தார். இன்னும் மாறுவதற்கான அறிகுறியில்லை. பதில் தரவும்?**

ப: ஆண்களின் மார்பு பகுதியிலோ, பெண்களின் மார்பகத்திலோ ஏதாவது கட்டி இருந்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவது முக்கியம். விசேட சத்திர சிகிச்சை நிபுணரைத்தான் நீங்கள் முதலில் சந்திக்கவேண்டும். எந்தக் கட்டி என்றாலும் அதற்கு மருந்து செய்ய முன்னர் விசேட சத்திர சிகிச்சை நிபுணரிடம் காட்டுவது நல்லது. நேரடிப்பரிசோதனையில் உடனடியாக வைத்தியரால் எதுவும் கூறமுடியாது. எனவே FINE NEEDLE BIOPSY (FNB) என்று ஒரு பரிசோதனையும் MAMMOGRAPHY என்றொரு விசேட எக்ஸ் கதிர் பரிசோதனையையும் கட்டியில் மேற்கொள்ள வேண்டும். இதில் முதலாவது FNB என்பதை எந்த அரச பொது மருத்துவமனைகளிலும் முக்கியமாக மாகாணப் பெரிய வைத்திய சாலைகளில் தான் செய்வார்கள். இந்த பரிசோதனையின் போது ஒரு மெல்லிய ஊசியினை கட்டியினுள் செலுத்தி – கட்டியினுள் உள்ள திசுக்களை எடுத்து நோயியல் பரிசோதனைக்கு (PATHOLOGY) அனுப்புவர். இதன் மூலம் கட்டியின் தன்மையை, புற்றுநோயா அல்லது சாதாரண கட்டியா என்பதை அறியலாம். புற்று நோயாக இருந்தாலும் இல்லாவிடினும் கொழும்பு போன்ற நகரங்களில் தனியார் வைத்திய நிலையங்களில் மார்பகத்தை விசேட எக்ஸ் கதிர் பரிசோதனை செய்வர். இதனை MAMMOGRAHY என்று கூறுவர் இதிலும் புற்று நோய் கட்டிகளையும் அவை எங்கு பரந்துள்ளன என்பதையும் கண்டறிய முடியும். இப்பொழுது மார்பகத்தில் கட்டி இருந்தாலும், இல்லாவிடினும் நாற்பது வயதுக்கு மேற்பட்ட எந்தப் பெண்ணும் வருடத்துக்கு ஒரு தடவை MAMMOGRAPHY பரிசோதனை செய்வது நல்லது என அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனவே நீங்களும் உங்கள் மார்புக்கட்டியின் காரணத்தை அறிய தகுந்த வைத்தியரை நாடுங்கள். சிறிய வயதிலும் மார்பக புற்று நோய் வருவதுண்டு. எனவே கவனயீனமாக இருக்காமல் கவனம் எடுங்கள். மார்பக புற்றுநோய் ஆரம்பகாலத்தில் எளிதில் குணமாக்கக் கூடியது.

**கே: வயது 18 ஆண். ஆறு மாதங்களுக்கு முன்பு படிப்பு நிமித்தம் தினமும் 4 மணி நேரம் கணினிக்கு முன்னால் இருந்து வேலை செய்ய வேண்டி நேர்ந்தது. தற்பொழுது எனக்கு தூரத்து பார்வை குறைந்துள்ளது. தலைவலி இருக்கின்றது. எனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை என்ன? தீர்வு உண்டா?**

ப: கணினியில் தொடர்ந்து பணிபுரிபவர்கள் மணிக்கு ஒரு தடவையாவது கண்களுக்கு ஓய்வு கொடுக்காமல் பணிபுரிந்தால் – கண் கோளாறுகள் தோன்ற இடமுண்டு. இப்படியான கோளாறுகளில் சில – தலைவலி, கண்ணால் நீர் வடிதல் – கண் கூச்சம், பார்வைக் கோளாறுகள் – விழியில் பூவிழுதல் என்ற Cataract கண் நோய் என்பனவாகும். கண்களுக்கு ஓய்வு கொடுத்து பணி புரிதல் – கண்களுக்குரிய பயிற்சிகள், கணினியின் திரையிலிருந்து தீங்கு தரக்கூடிய ஒளிக்கதிர்கள் கண்களில் படாதவாறு Filter என்கின்ற வடிதிரை ஒன்றைப் பாவித்தல் போன்ற செயல்களினால் கணினி உபயோகிப்போர் கணினியால்வரக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்கலாம். நீங்கள் ஒரு சில மாதங்களுக்குத்தான் கணினியில் வேலை பார்த்திருப்பதால் நிச்சயமாக கணினிதான் உங்கள் பார்வை குறைபாட்டுக்குக் காரணம் என்று சொல்ல முடியாது. ஆனால், கண்களில் முன்னரே கண்தசைகளில் உள்ள பெலவீனத்தை கணினி வேலை மிகைப்படுத்தியிருக்கலாம். நீங்கள் ஒரு கண் சிகிச்சை நிபுணரை கண்டு கண்களைப் பரிசோ தித்து சிலவேளை கண்ணாடி உபயோகிக்க வேண்டி நேரிடும். பார்வை குறைபாடு உள்ளபோது தூரத்துப்



பார்வை உங்களுக்குக் குறைவாக இருக்கும் போது கண்ணாடி இன்றி கண் தசைகளையும், முக, நெற்றித் தசை களையும் சுருக்கித் தூரத்துப் பார்வையைப் பார்க்க முயலும்போது தலைவலி ஏற்பட நேரிடும்.

# சக்தி தரும் இயந்திர உடை

விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகள் ஒவ்வொன்றையும் மனித இனத்தின் நன்மைக்காகவே பயன்படுத்த வேண்டும் என்பது முக்கியமானதாகும். அணு சக்தி முதல் ரோபோ தொழில்நுட்பம் வரை அனைத்துத் தொழில்நுட்பங்களும் மனித இனத்தின் மேம்பாட்டைக் குறி வைத்தே உருவாக்கப்படுகின்றன.

அவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள தொழில் நுட்பத்தில் ஒன்றுதான் இயந்திர உடை. ஆங்கிலத்தில் இதை பவர் அசிஸ்ட் சூட் என்று அழைக்கிறார்கள்.

ரோபோ எனப்படும் இயந்திர மனிதனைத் தயாரிக்கும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இதற்கான நவீன கருவி தயாரிக்கப்பட்டுள்ளது.

வயதான நோயாளிகள் மற்றும் விபத்தில் சிக்கியவர்களை ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்குத் தூக்கிச் செல்லுவது கடினமான பணியாகும்.


குறிப்பாக பூகம்பம் மற்றும் சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது இடிபாடுகளை அகற்றி பாதிக்கப்பட்டவர்களைத் தூக்கி வருவது என்பது மிகக் கடினமான பணியாகும். மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதிமார் போன்றவர்கள் தங்கள் எடையை விட அதிகமான எடைகொண்டவர்களைத் தூக்கும் நிலையும் உள்ளது. இதுபோன்ற பணிகளில் ஈடுபடவேண்டிய நிலையில் உள்ளவர்களுக்கு இந்த இயந்திர உடை வரப்பிரசாதம்.

ஜப்பான் நாட்டில் உள்ள கனகவா பல் கலைக்கழகத்தில் இருக்கும் நலப்பணிகள் தொடர்பான தொழில்நுட்பத்துறையில் தலைவராக இருப்பவர் பேராசிரியர் கெஜிரோ யாமோமோட்டோ. இவரது தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் குழு சக்தி தரும் இயந்திர உடைகளை வடிவமைப்பது பற்றி ஆராய்ச்சிகள் செய்து வந்தனர்.

குறிப்பாக வைத்தியசாலைகளில் பணி புரியும் தாதிமார் மற்றும் நோயாளிகள், வயதானவர்கள் ஆகியோரை ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்குத் தூக்கிச் செல்ல வேண்டிய பணியில் இருப்பவர்களுக்கு உதவும் வகையில் தங்களது தயாரிப்பு இருக்க வேண்டும் என்ற முயற்சியில் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டனர்.

இந்த ஆய்வு குறித்து பேராசிரியர் கெஜிரோஜோமோ மோட்டோ கூறும்போது,

''மனிதர்களுக்கு உதவும் வகையில் இயந்திர மனிதர்களை உருவாக்க வேண்டும்



என்று யோசித்து வந்தேன். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டோம். ஆனால், என்னதான் மனிதர்களுக்கு உதவும் வகையில் தயாரிக்கப்பட்டாலும் இயந்திரம், மனிதர்கள் போன்று முழுமையானதாக அமையாது என்று தோன்றியது. எனவே, மீட்பு மற்றும் உதவிப் பணிகளில் ஈடுபடும் மனிதர்களுக்கு சக்தி தரும் வகையில் இயந்திரங்களை அமைத்தால் அது எப்படி இருக்கும் என்று தோன்றியது. எனவே, இது தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டோம். அதன் மூலம் உருவானதுதான் மனிதர்களுக்கு சக்திதரும் வகையில் அமைந்த பவர் அசிஸ்ட் சூட்'' என்றார்.

''இந்த உடை 3 முக்கிய பகுதிகளைக் கொண்டது. கைகள், முதுகு, கால்கள் ஆகியவற்றுக்குச் சக்தி தரும் வகையில் கருவி அமைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக மனிதர்கள் தங்கள் உடை எடைக்கு இணையான அல்லது தங்களால் தூக்க முடிந்த எடையைத் தூக்கும்போது முதுகு மற்றும் கை; பகுதிகள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன. இதன் காரணமாகச் சில நேரங்களில் உதவிக்குச் செல்பவர்களும் காயம் அடையும் நிலை ஏற்படுகிறது.

இந்தக் கருவியில் இதை அணிபவரின் உடல் சக்தி மற்றும் தசைகளின் இயக்கம் போன்றவற்றைக் கண்டுபிடிக்கும் 'சென்சார்' கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த சென்சார் கருவிகள் எடையைத் தூக்குபவரின் கை–கால் மற்றும் முதுகு ஆகியவற்றின் இயக்கங்களைக் கண்காணிக்கின்றன.

தூக்க வேண்டிய எடை அதிகமாக இருக்கும்போது அல்லது தூக்க முடியாத நிலையில் இருக்கும்போது இந்தக் கருவியில் உள்ள றப்பர் பைகளுக்கு சென்சார்கள் உத்தரவு பிறப்பிக்கின்றன. இதைத் தொடர்ந்து இயந்திர உடையில் உள்ள கருவிகள் செயற்பட்டு சிரமம் இல்லாமல் எடையைத் தூக்க உதவுகின்றன. அதற்கு ஏற்ற வகையில் இந்த உடை வடிவமைக்கப்பட்டுள்ளது'' என்றும் பேராசிரியர் கெஜிரோ கூறினார்.

# கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் கன்னித்தமிழ் முழங்கிய நாகர்!

**பண்டைய குமரிக்கண்டம் கடற்கோள்களால் தாக்குண்டபோது எஞ்சிய மிஞ்சிய நிலப்பகுதிகளில் இலங்கைத் தீவும் ஒன்று!**

ஏறத்தாழ 6000 ஆண்டுகளுக்கு முன்னர் இன்றைய கடல் சூழ் இலங்கை இருக்கவில்லை. மாறாக இந்தியாவும், இலங்கையையும், பிற இந்து சமுத்திரத் தீவுகளும், தீவுக்கூட்டங்களும் புராதன குமரிக்கண்டத்தில் ஒரே நிலப்பரப்பாக இருந்தன!

பின்னர் சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட கடற்கோளினால் மீண்டும் இடைவிட்டு இடைவிட்டு ஏற்

**இலக்கியப் பொழில்**

பட்ட கடற்கோள்களால் குமரிக்கண்டத்தின் பரந்துவிரிந்த நிலப்பரப்பு தாக்குண்டு சின்னாபின்னப்பட்டு மேற்சொன்ன நாடுகளும், தீவுகளும், தீவுக்கூட்டங்களும் உருவாயின!

அத்தகைய இயற்கைச் சீற்றம் முற்காலங்களில் ஆயிரக்கணக்கான பல்லாயிரக்கணக்கான ஆண்டுகால இடைவெளிகளில் பூமியின் வேறு பகுதிகளில் நிகழ்ந்தேறியிருப்பதை அறிய முடிகிறது. அதனையிட்டுத்தான் பூமியின் மேற்பரப்பில் நிலப்பகுதி நீராகவும், நீர்ப்பகுதி நிலமாகவும் காலத்திற்குக் காலம் மாற்றமுற்று வந்ததான கதைகளும் ஏற்றம் பெற்றன. ஆம், கடலும், நிலமும் அடிக்கடி இடம் மாறியிருப்பது உண்மைதான்.

நிலத்தின் அடியில் பூமிக்குள் உண்டாகும் அமுக்கங்களினால் பாறைக்குழம்புகள் நகர்வு காரணமாக நிலநடுக்கம், எரிமலைக்குமுறல், கடற்கோள் முதலிய இயற்கைச் சீற்றங்கள் உருவாகின்றன. நிலநடுக்கம் ஏற்படும்போது எரிமலைகள் விழித்துக் கொள்வது வழக்கம்.

குமரிக்கண்டத்தில் கண்டத்தீமலை, அகண்டத்தீமலை ஆகிய எரிமலைகள் இருந்திருப்பதை நாம் அறிய முடிகிறது. பூமியின் அடியில் உருவாகும் அமுக்கங்களின் தன்மை காரணமாக நிலப்பரப்பில் சடுதியான ஏற்ற இறக்கம் தோன்றும்போது தாழ்வுற்ற பதிக்குள் அண்மையான கடல் ஊடுருவிக் கொள்கிறது. அதுவே கடற்கோள்!

அவ்வாறு கடற்கோள் உண்டாவதற்கான காரணங்கள் அமைந்திருக்கும்போது இராவணனின் துட்டத்தனத்தால் கடற்கோள் ஏற்பட்டதென சில பௌத்த சிங்கள வரலாற்று ஏடுகள் விபரித்திருப்பது பெரும் விந்தையாகும்!

இலங்கையின் பூர்வகால மக்களான, திராவிடரான இயக்கரும் நாகரும் பல கோணங்களிலும் இத்தகைய விந்தைகளுக்கும், மாயத் தோற்றங்களுக்கும் உட்படுத்தப் பட்டிருப்பதன் நோக்கம் யாது?

இயக்கர் நாகர் என்பவை மனிதவர்க்கத்தினரைக் குறிக்கவில்லையென திரு.ஜி.சி. மென்டிஸ் "இலங்கையின் முற்காலச் சரித்திரம்" என்ற நூலில் கூறியுள்ளார். (THE EARLEY HISTORY OF CEYLON, 1946, P.8,40) அது யதார்த்த பூர்வமான வரலாற்று ரீதியான கூற்றா?

ஆதலின் முற்காலம் குறித்து ஆராய்ந்து பார்ப்பது இங்கு அவசியமாகிறது. அதே வேளை, கடற்கோள் பற்றி விந்தையான காரணம் சொன்ன ஏடுகள் குமரிக்கண்டத்தில் வாழ்ந்த மக்கள் பற்றியும் அக்கண்டத்தில் வழங்கிய மொழி பற்றியும் மூச்சும் விடாதமை ஏனாம்?

இப்பூமியில் முதன்முதலாக மொழியின் பெயரால் சங்கம் வைத்தவன் தமிழன்தான்! கடல் கொண்ட பழைய பாண்டி நாட்டின் ஏழ்மதுரையிலேயே பாண்டிய அரசனால் தமிழ்ச்சங்கம் (முதற்சங்கம்) நிறுவப்பெற்றிருந்தது. ஏழ்மதுரையின் அக்கம் பக்க நாடுகளாக தெங்கநாடு, குறும்பனைநாடு, ஒளிநாடு போன்றவை விளங்கின.

"செந்தமிழ் சேர்நிலம் பன்னிரண்டு" என்பது யாவரும் அறிந்ததே. (தொல்.எச்ச. சூத். 4 உரை)

பழந்தமிழ் இலக்கியங்களில் ஏழியன், எழுவர், ஒளியர் என்று சொல்லப்பட்டிருப்பது ஏழ்நாட்டவரையும், ஒளிநாட்டவரையும் சுட்டியெழுந்த பெயர்களாகும்.

தமிழ்நாட்டு வரலாற்றறிஞரான ந.சி.கந்தையாபிள்ளை கூறியிருப்பதாவது:

இஞ்ஞான்று இலங்கை எனப்படும் தீவு கடல்வாய்ப்பட்ட குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியாகும். இலங்கையானது ஏழ்தெங்க நாடு எனப்பட்ட நிலத்தின்ஒரு பகுதியெனக் கருதப்படுகிறது (பழந்தமிழர், பக்.115).

தமிழ்ச்சங்கம் நிறுவப்பெற்றிருந்த ஏழ்மது

**கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் கன்னித் தமிழ் முழங்கிய நாகர் என்ற ஆக்கம் இலக்கியப் பொழிலில் இந்த வாரமும் அடுத்த வாரமும் இரு பகுதிகளாக வெளிவருகிறது. முதலாவது பகுதியைப் படியுங்கள். இரண்டாம் பகுதி அடுத்த வாரம் வெளிவரும்.**

ரையும், வேறுசில பகுதிகளும் கடற்கோளில் மூழ்கிய பின்பு இரண்டாம் தமிழ்ச்சங்கம் (இடைச்சங்கம்) பாண்டிய மன்னனால் கவாட புரத்தில் நிறுவப்பெற்றது.

இதிலிருந்து இராவணன் காலத்திற்கு முன்னரும் கடற்கோள் நிகழ்ந்திருப்பது புலனாகும்.

ஏழ்தெங்க நாடு முற்காலத்தில் தமிழ் செழித்த நிலம். பழம்பெரும் புலவர் முத்தூர் அகத்தியன் ஏழ்தெங்க நாட்டைச் சேர்ந்தவர். உண்மை அப்படியிருக்க கடற்கோள்களுக்குப் பின்னர் ஏழ்தெங்க நாட்டின் எஞ்சிய பகுதியாக மிஞ்சிய




இலங்கை மண்ணில் ஆதியில் பிசாசுகள் வாழ்ந்ததாக இங்கு பௌத்த வரலாற்று நூல்களில் சொல்லப்பட்டிருப்பது பெரும் வரலாறல்ல உள்நோக்குடனான கற்பனையாகும்.

மனிதனின் வரலாறு மனிதனிலிருந்து ஆரம்பமாகிறதே தவிர மன்னனிலிருந்து ஆரம்பமாகவில்லை! ஆதிமனிதர் கைச்சைகையினாலும் பின்னர் தம் குரலினால் ஒலிக்குறிகளை எழுப்பியும் தமது எண்ணங்களை பரிமாறிக் கொண்டனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகால சுழற்சியின் பின்னரே அந்த ஒலிக்குறிகள் மொழியாக பரிணமித்தன.

அதன் காரணமாக முழு உலகிலும் மொழி வழி இனப் பெயர்கள் இடைக்காலங்களிலேயே தோன்றின. அதற்கு முந்திய காலங்களில் பூர்வகால மக்களனைவரும் குழுக்களின் பெயராலும், கோத்திரப் பெயராலும் பின்னர் சாதிப் பெயர்களாலுமே அழைக்கப்பட்டு வந்தனர். அது போன்றுதான் பண்டைய குமரிக் கண்டத்தில் வழங்கி வந்த இயக்கர், நாகர் போன்ற பெயர்களும் மிகப் பழைய சாதிப் பெயர்களாகும். தமிழர் என்பது மொழிவழி இனப்பெயர்!

**வாராவாரம் வெளிவரும் 'இலக்கியப்பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.**

அதனை அறியாதோர் யானையைக் குருடர் பார்த்தமாதிரி இயக்கரையும், நாகரையும் விதம் விதமாக சித்தரித்திருப்பதுதான் சரித்திரத்தை விசித்திரமாக்கியுள்ளது.

நாகரினதும், இயக்கரினதும் பூர்வீக தாய் நிலம் குமரிக்கண்டமாகும். மேற்கு நாட்டினர் அதனை "லெமூரியா" கண்டமென விளிப்பர். அங்கு 'லெமூர்' எனும் குரங்கினம் வாழ்ந்தமையால் அப்பெயர் உண்டாயிற்று.

குமரிக்கண்டம் பல தடவை கடல்வாய்ப்பட்டபோது மாண்டவர் போக மீண்டவர்களும் இடம் பெயர்ந்தவர்களுமான இயக்கர், நாகர் போன்ற சாதியினரே இந்தியாவினதும், இலங்கையினதும் பூர்வகால மக்கள். ஆரியர் வருவதற்கு முன்வட இந்தியாவரை திராவிடர் பரந்து வாழ்ந்தனர். வடமொழி இதிகாசங்களில் இயக்கர், நாகர் பற்றி பரக்கச் சொல்லப்பட்டிருப்பதற்கு அதுவும் காரணம்.

## நாகம்

நாகம் என்பது தூய தமிழ்ச்சொல். அது பல பொருட்களையுடையது. அவை நல்ல பாம்பு, மலை, நாவல்மரம், மேகம், ஒலி, யானை, வாள், சொர்க்கம், துகில், சுரபுன்னை, குறிஞ்சிப்பண்வகை என்றவாறாக. நாகதிசை என்றால் மேற்குத் திசை என்றும் பொருள்.

இவற்றில் எப்பொருளிலிருந்து நாகர் என்ற சாதிப்பெயர் உருவாகியது? நாக வழிபாட்டை மேற்கொண்டதன் நிமித்தம் நாகர் என்ற பெயர் தோன்றியதெனினும், மலைகளைக் குடைந்து குகைகளுள் வாழ்ந்தவர்களும் நாகர் என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளனர். இவர்களின் வழிபாடு லிங்க வழிபாடும், நாக வழிபாடும் ஆகும்.

இவர்கள் மலைகளைக் குடைந்து வாழ்ந்ததால் 'நாகர்' என்ற பெயர் தோன்றியிருக்கலாமென நன்னூல் பாயிரமும் கூறுகிறது.

இலங்கையில் பௌத்த வரலாற்று நூல்கள் நாகர்களை மானிடர்களாக ஏற்றுக் கொள்ளாதமை என்ன தர்மமோ?

இந்தியாவில் தோடர், கொண்டர், பைகர், முந்தர் போன்ற அருகிப்போன பண்டைக்கால சாதியினர் பற்றிய மானிடவியல் ரீதியான ஆராய்ச்சி நடைபெற்றிருக்கிறது. இலங்கையில் அப்படியான ஆய்வு எதுவும் நடைபெறவில்லை. மாறாக வெறுவாய் கதைகளே சொல்லப்பட்டுள்ளன.

இயக்கரை பிசாசு கணங்களோடும், நாகரை பாம்பின் உடலோடும் ஒப்பீடு செய்திருப்பது அறியாமையால் அமைந்ததா அன்றி சுயநோக்கினால் எழுந்ததா?

அறியாமையாயின் மானிடவியலுக்கு நேர்மாறானதாகவும், யதார்த்தத்தைப் பிரதிபலிக்காமலும் இயற்றப் பெற்றிருக்கும் இலங்கையின் பூர்வகாலபௌத்த வரலாறு மீளாய்வு செய்யப்படுமெனில், இயக்கரும் நாகரும் மானிடரென அறியப்படுமெனில், அப்பூர்வகால சாதியினரின் தாய்மொழி பற்றிய உண்மையும் தானாகவே தலையை நீட்டும்!

இலங்கைக்கு ஆரியர் வருவதற்கு முன் இங்கு மானிடர் வாழவில்லை என்ற மாயையை வலிந்து உண்டுபண்ணுவதற்காகவும் பூர்வகால மக்களான இயக்கரையும், நாகரையும் மானிடரல்லவென சிலர் வாதித்துள்ளனர்.

முன்னாள் தொல்லியல் ஆணையாளரான டாக்டர் செனரத்பரணவிதான கூறியிருப்பதாவது:

"....... நாகர்களை மனித ஜீவன்களாக மாற்றுவது நியாயமற்றதாகும். நாகர்களை மனித ஜீவன்களாகக் கொள்ளலாமென்பதற்கான விவாதம் தேவர்களை மனிதர்களாகக் கொள்வதற்கும் உதவும்" (THE ARIYA KINGDOM IN NORTH CEYLON, 1961, JRASCB (N-S)

அத்தகைய மாறுபாடான கருத்தைக் கொண்டிருந்தவரான செனரத் பரணவிதான தொல்லியல் ஆணையாளராகவிருந்த காலத்தில் அவரால் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை எக்கோணத்தில் வழிநடத்தப்பட்டிருக்குமென்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல!

நாகர்களை மனிதரென ஒத்துக் கொண்டால் அவர்கள் தமது விழிபோல் காத்த மொழி தமிழென்ற உண்மை பூதாகரமாக வெளிக்கிளம்பி இலங்கையின் பூர்வகால வரலாற்றை வழி நடத்தத் தொடங்கிவிடுமென்பதே பரணவிதானவினது அஞ்ஞான கூற்றின் அடிப்படை!

கடற்கோளின் எதிர்விளைவாக இலங்கைத்தீவு தோன்றுவதற்கு முன் குமரிக்கண்டத்தில் வாழ்ந்த மானிடருள் நாகரும் அடங்குவரென்பது ஏலவே சொல்லப்பட்டதே.

இப்பூமியில் இலட்சக்கணக்கான ஆண்டுகளாக மனித ஜீவன்கள் உயிர் வாழ்ந்து வருவதை மானிடவியல் ஆராய்ச்சி உறுதிப்படுத்தியுள்ளது. அவ்வாறு இலட்சக்கணக்கான ஆண்டுகள் தொடர்ச்சியாக வாழ்ந்துவரும் மனிதகுலத்தின் வாழ்வுக்காலத்தை பரணவிதான போன்றோர் சில சொற்ப ஆயிரம் ஆண்டுகளுக்குள் குறுக்கிவிட முடியுமா?

## 'மூ' நாடு

குமரிக்கண்டத்திற்கு 'மூவின்தாய் நிலம்' எனும் பெயரும் வழங்கி வந்ததாக பண்டைக் கால எழுத்தாராய்ச்சி வல்லுனரான டாக்டர் டபிள்யூ.எஸ்.கோர்வே கூறியுள்ளார்.

"மூ" என்றால் 'மூன்று' என்பது மட்டுமன்றி 'மூப்பு' 'மூத்த' என்றும் பொருள் பெறும். அதனால் "மூவின் தாய்நிலம்" என்பது "மூதாதையரின் தாய்நிலம்" என்றாதல் வேண்டும். அது "மூ" நாடு என்று வழங்கப்பட்டு வந்திருப்பதையும் அறிய முடிகிறது.

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" என்று தொல்காப்பியத்திலும், "வீயாத் திருவின் விறல்கெழு தானை மூவர்", "முந்நீரேணி விறல்கெழு மூவர்" என புறநானூற்றிலும் குறிப்பிடப்படும் மூவர் 'மூ' நாட்டவர் என்க.

## மேருமலை

'மூ' நாடென்ற குமரிக்கண்டத்து மானிடரான நாகர்களைப் பற்றி எத்தகைய கற்பனைக் கதைகள் சொல்லப்பட்டிருப்பினும் மகாவம்சத்திற்கு அடுத்ததாக சிங்கள மன்னர்களின் வரலாற்று நூலெனக் கொள்ளப்படும் இராஜாவளிய நூலில் மேருமலையைச் சுற்றி 'நாகர் உலகம்' இருந்ததாகச் சொல்லப்பட்டிருப்பது கவனத்திற்கொள்ளத்தக்கது. (THE RAJAVALIYA, 1906, P.1)

மேருமலை என்பது குமரிக்கண்ட நிலப்பரப்பில் தென் திசையிலிருந்த மலையாகும்.

மேருமலையைச் சுற்றி 'நாகர் உலகம்' இருந்ததென இராஜாவளிய நூல் கூறியிருப்பதிலுள்ள மறைபொருள் என்ன?

இராஜாவளிய நூல் குறிப்பிட்டிருக்கும் மேற்படி அம்சம் வடமொழி இதிகாசங்களிலிருந்து பெறப்பட்டு, அவ்வாறே இதிகாசப் பின்னணியில் சொல்லப்பட்டிருப்பினும் கூட 'நாகர் உலகம்' என்பது முன்னரும் பின்னரும் நாகரின் வாழ்விடங்களையே குறிப்பதன்றி வேறு இடங்களையன்று!

(11ஆம் பக்கம் பார்க்க)

## 18 மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

பல கொடிய குற்றங்களைப் புரிந்தவர்கள் நிலையே இதுவென்றால், செய்யாத குற்றத்திற்காக சிறையில் வாடுவதோடு மரண தண்டனையும் விதிக்கப்பட்டு, மேல் முறையீட்டிலாவது தங்களுக்கு நியாயம் கிட்டாதா என்ற ஏக்கத்துடன் வாழும் அவர்களின் மனநிலையை நினைத்தாலே அற்புதத்திற்கு பகீரென்றது. அற்புதம் தன் மகன் ஒருவனுக்காக மட்டும் கவலைப்படவில்லை. 26 பேரைப் பற்றியும் இந்த 8 வருடத்தில் நன்கு அறிந்தவர். ஆதலால் ஒவ்வொருவரும் எப்படியெல்லாம் வேதனைப்படுவார்கள் என்பதை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. அதிலும் 26 பேரில் பெரும்பாலோர் 30 வயதிற்கும் குறைவான இளைஞர்கள். வாழ்வின் வசந்த காலத்தை அனுபவிக்க இயலாது போனவர்கள். அதிலும் பெரும்பாலோர் திருமணம் கூட ஆகாதோர். ஆனால், திருமணமான இளைஞர்களின் நிலை அதைவிட கொடியது. ஆம். கணவன் - மனைவி இருவருமே கைது செய்யப்பட்டு குழந்தைகளை அதிலும் விவரம் அறியாத சின்னஞ்சிறு பருவத்திலேயே பிரிந்து உறவினர்களிடம் வளரவிட்டு அவர்களை அடிக்கடி பார்க்கும் மகிழ்ச்சியைக்கூட இழந்தவர்கள். அப்படிப்பட்ட தம்பதிகள் மட்டுமே மூன்று பேர் இருந்தனர். இவர்களோடு திருமணம் ஆகாமல் காதலிக்கும் நிலையில் இருந்த இணை ஒன்று.

இனி வாழ்வில் என்றாவது சேர்ந்து வாழ்வோமா, நாம் இல்லையெனில் நம் பிள்ளைகளின் கதி என்னாவது என்ற சிந்தனையிலேயே அவர்கள் உழன்று வருவதை அற்புதம் அறிந்திருந்தார். அந்த வேதனையே அவர்களைச் சிறுகச் சிறுகச் கொல்வதையும் அவர் புரிந்திருந்தார். பூந்தமல்லி தீர்ப்பு வந்த நாளிலிருந்து இன்றுவரை 26 பேருமே நித்தமும் அவர்கள் மனதில் மரணதண்டனைக்கு ஒப்பானதை, சொல்லப்போனால் அதைவிட அதிகமான வேதனையை அனுபவித்து வந்தனர் என்பதும் அதைவெளிக்காட்டி பிறரை வருத்தமடையச் செய்யக்கூடாது என்பதிலும் கவனமாக இருந்தனர் என்பதும் அவருக்குத் தெரிந்துதான் இருந்தது.

அனைவருமே அற்புதம்மீது மிகுந்த பற்றும், மரியாதையும் வைத்திருந்ததால், வெவ்வேறு சிறைகளில் இருந்தபோதும் அவ்வப்போது எழுதும் கடிதங்களின் மூலம் தொடர்பு கொண்டவாறே இருந்தனர். அதிலும் சங்கர்... அற்புதத்திற்கு மற்றொரு மகனேதான். 26 பேரிலும் மிகுந்த வித்தியாசமானவனாக அவனை அற்புதம் கருதினார். எல்லோருமே ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தங்கள் தேவைகளை அற்புதத்திடம் கூறி உள்ளனர். அற்புதமும் மன மகிழ்வோடு செய்திருக்கிறார். ஆனால், சங்கர் மட்டும் ஒருமுறை கூட எதுவும் கேட்டதில்லை.

அறிவாகப் பார்த்து அவனது தேவைகளைப்புரிந்துகொண்டு அம்மா மூலமாக நிறைவேற்றினால் உண்டு. எப்போதும் சிரித்த முகம்! எதற்குமே பதிலாக ஒரு புன்னகை. அதுதான் அற்புதத்தை மிகவும் கவர்ந்தது. அறிவும் சங்கரை அறிமுகப்படுத்தும்போதே 'ரொம்ப நல்ல பையன்மா.... நீங்கதான் அவனையும் கவனிச்சுக்கனும்' என்றே கூறினான்.

அறிவும், சங்கரும் சம வயதினர். சங்கர், அறிவைவிட ஒரிரு மாதங்களே பெரியவன். அதனாலேயோ என்னவோ இருவரும் மிகவிரைவில் நெருங்கிய நண்பர்களாகி விட்டனர்.

அறிவுக்கும், அற்புதத்திற்கும் மட்டுமல்ல, உள்ளே இருந்த அனைவருக்குமே சங்கர் பிரியமானவனாகத்தான் இருந்தான். அது மட்டுமா அன்பும், அருளும் அவனை தங்கள் உடன் பிறந்தவனாகவே கருதினார்கள். குழந்தைகள் செவ்வையும் அகரனும்கூட அப்படித்தான். அறிவைக் காண்பதற்கு பூந்தமல்லி சிறைக்குக் குழந்தைகளை எடுத்துச் செல்லும்போதெல்லாம் சங்கரும், பாக்கியநாதனும் குழந்தைகளைத் தங்களுடன் விளையாட எடுத்துச் சென்று விடுவார்கள்.

இப்படியெல்லாம் இருந்த சங்கரை பூந்தமல்லி தீர்ப்பிற்குப்பின் சிறைகள் மாற்றியபோது பிரித்து வேறு சிறையில் அடைத்தபோது அறிவு மிகுந்த மனவேதனைக்குள்ளானான். மனம்விட்டுப் பேச உடனிருந்த துணையும் பிரிந்தது அறிவை மிகவும் பாதித்தது.

சங்கர் அப்படி வேறு சிறைக்குச் சென்றபோதும் தவறாது அற்புதத்திற்கு கடிதம் எழுதுவதை ஒரு பழக்கமாகவே கொண்டிருந்தான். அந்த அன்பு அற்புதத்திற்கு மிகுந்த மன நிறைவைத் தந்தது.

அதுபோலவே, ஆதிரை! 26 பேரில் மிகவும் இளையவள், பிறருக்கு உதவும் நல்ல குணம் கொண்டவள். மிகச் சிறிய வயதிலேயே பெரும் துன்பத்திற்கு ஆளானபோதும் பாசமாய் பழகும் அந்தப் பாங்கு அற்புதத்தை நெகிழச் செய்தது. உறவினர்கள் எல்லாம் வெளிநாடுகளில். அவரை வந்து காண்பதற்கு யாரும் இல்லை. இதை அறிந்தவுடன் தானே மனுபோட்டு அவளைப் பார்த்துப் பேசினார் அற்புதம்.



தங்களுக்கென்று ஒரு தனி உலகை எழுப்பி.... தங்களுக்குள்ளாகவே சிரித்து, பேசி விளையாடி

அடுத்து நளினி. கைதான பெண்களிலேயே மிகவும் அதிகமான சித்ரவதைகளுக்கு உள்ளானவர். அதிலும் கர்ப்பிணியாய் இருந்த நிலையில்... அதனாலேயே அற்புதத்திற்கு நளினி மீது கருணை உண்டு. அவரும் ஒரு தாய் தானே. கர்ப்ப காலத்தில் ஒரு பெண் இத்தகு கொடிய சூழலில் எத்தகு வேதனைகளை அனுபவித்திருப்பார் என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியும்தானே. குழந்தை பிறந்த பிறகு அதை வளர்ப்பதற்கும், பின் ஒரு கட்டத்தில் குழந்தையைச் சிறைக்கு வெளியே அனுப்பவேண்டிய நிலையில் அக்குழந்தையைப் பிரிந்து அவர்பட்ட வேதனையும் அவர் பார்த்திருக்கிறார். அந்தப் பெண் இன்று தனக்கும் தன் கணவனுக்கும் ஒருசேர மரணதண்டனை விதிக்கப்பட்ட நிலையில் என்ன மாதிரி ஒரு மன பாதிப்புக்குள்ளாகி இருப்பார் என்பதை நினைக்கையிலேயே அற்புதத்திற்கு அழுகை வந்தது. அதோடு நளினியின் தாய் பத்மா, தம்பி பாக்யநாதன், கணவர் முருகன்; அவர்களுக்கும் அதே மரண தண்டனை. செல்வலெட்சுமியும், சாந்தியும் கூட அப்படித்தான், செல்வலெட்சுமி கணவர் விஜயன், தந்தை பாஸ்கரன் இருவருடனும் மரணதண்டனையை எதிர்நோக்கியபடி, சாந்திக்கு கணவர் ஜெயக்குமாருடன். இப்படி குடும்பம் குடும்பமாக மரணதண்டனைக் கைதிகளாக.

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைந்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

பத்மா அம்மாள்.... தான் மட்டும் அல்லாது மகள், மகன், மாப்பிள்ளை என அனைவருமே மரணத்தின் பிடியில்.....

தனசேகர்.... மேட்டூரைச் சேர்ந்த இவருக்கு 3 பெண் குழந்தைகள். 15, 13, 11 வயதுகளில் இருந்த அவர்களை விட்டுவிட்டு சிறைக்கு வந்து இதோ 8 வருடங்களாகி விட்டன. அவரது உயிர் பறிக்கப்பட்டுவிட்டால் அவரது மகள்களின் நிலை? நினைக்கும் போதே பகீரென்றது அற்புதத்திற்கு... அவரு இரண்டு பெண்களை பெற்றவராயிற்றே.

தன் மகள்களைப் பற்றிய கவலையோ அல்லது அவரது இயல்பே அப்படித்தானோ, தனசேகர் யாரிடமும் அதிகம் பேசி பார்த்ததில்லை அற்புதம். அமைதியான ஒரு புன்னகை, நலம் விசாரிப்பு.... அதற்கு மேல் அவர் பேசியதில்லை.

சாந்தன் கூட அப்படித்தான். ஈழத்தைச் சேர்ந்த அவருக்கு இங்கு உறவினர்கள் என்று யாரும் கிடையாது. தான் உண்டு, தான் படிக்கும் புத்தகங்கள் உண்டு என்று வாழும் இளைஞர்.

கனகசபாபதிக்கு.... வயது எழுபத்துக்கு மேல். அவரது மகன் விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து நாட்டுக்காகப் போராடி வீர மரணம் அடைந்தவர். அவரது மகள் லண்டனில் இருக்கிறார். வயதான காலத்தில் தன் மகளுடன் வாழ எண்ணி லண்டன் செல்வதற்காக டெல்லி வந்திருந்தார். அவரது ஊரைச் சேர்ந்த ஆதிரையும் தனது அண்ணன் வீட்டிற்கு லண்டன் செல்ல இருந்தார். சின்னப் பெண் தக்க துணையுடன் அனுப்பலாமே என்ற நினைப்பில் கனகசபாபதியுடன் அவரை அனுப்பி இருந்தனர் அவரது குடும்பத்தினர். இந்த நிலையில்தான் அவர்கள் இருவரையும் தில்லியில் கைது செய்தது சி.பி.ஐ. வயது முதிர்ந்த நிலையில்... இத்தனை வயதிற்கு மேல் இப்படி ஒரு அனுபவம்... வாழ்வா, சாவா போராட்டம்.

இப்படி ஒவ்வொருவரைப் பற்றியும் அவர்களுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் குறித்தும் அவர்கள் இன்று எப்படியெல்லாம் வேதனைப்படுகிறார்களோ என்ற எண்ணமும் அற்புதத்திற்கு அவ்வப்போது வந்த வண்ணம் இருந்தது.

# தொடரும் தவிப்பு

இதுதான் அற்புதத்தின் குணம். தனக்கே, தன் வாழ்விலேயே பிரச்சினைகளும், மனவேதனைகளும் மிகுந்து இருக்கையில், பிறரின் வேதனைகளை நினைத்து உளம் உருகி, வருந்தப்படுவதும் அவரால்மட்டுமே முடியும். தன் கவலை மட்டுமே பெரிதென நினைக்காது பிறரது துன்பங்களிலும் பங்கு கொண்டு, அவர்களுக்குத் தன்னாலான உதவிகள் செய்வதுமான பரந்த உள்ளம் கொண்டவர். தன்னலமற்ற அவரது இந்தத் தொண்டு உள்ளத்திற்காகத்தானே அறிவைப் போலவே மற்ற 25 பேரும் அவர் மீது பாசமும், அன்பும் கொண்டுள்ளனர்.

அற்புதமும் தன்பிள்ளை மட்டும் காப்பாற்றப்படவேண்டும் என எண்ணவில்லை. அப்படிப் பிறரைப் பற்றி அவர் கவலைப்படாமல் இருந்த காலமும் உண்டுதான். ஆனால், என்று அவர் அனைவரின் கதைகளையும், அவர்கள் எப்படி அநியாயமாக இவ்வழக்கில் சிக்கவைக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் கேட்டறிந்தாரோ அன்றே அவர் அனைவரைப் பற்றியும் கவலைப்படத் துவங்கிவிட்டார். அனைவருமே காப்பாற்றப்படவேண்டும் என்று உளமாற நினைக்கத் தொடங்கிவிட்டார். அதனால்தான் தொடர்ந்து அனைவருக்காவும் உழைத்தார்; உழைத்துக்கொண்டும் இருக்கிறார்.

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

(தவிப்பு தொடரும்.....)

# கடல்கொண்ட குமரிக்கண்டத்தில்.....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

நன்னூல் எனும் இலக்கண நூலை இயற்றிய நாகரான பவணந்தி முனிவரின் வாழ்விடம் 'நாகர் உலகம்' என பாயிரத்தில் சொல்லப்பட்டிருப்பது மேற்கூறிய கருத்துக்குச் சான்றாக அமையும். பவணந்தி முனிவர் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

ஆழியின் கடற்கோள்களுக்கு முன்னும், பின்னும் நாகர் வாழ்ந்த இடங்களே நாகர் உலகம், நாகநாடு, நாகதீவு, நாகபட்டினம், நாகபுரம், நாக ஊர் (நாகூர்) என்று வழங்கப்பட்டன; வழங்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு ஊரும், உலகும் நாகர் என்ற சாதியின் பெயரால் தொன்று தொட்டு பெயர்வழங்கப்பட்டு வந்திருக்கிறதெனில் பூர்வகாலம் முதலாக அவர்கள் பண்பாடும் பல்வேறு செயற்காரியங்களில் கீர்த்தியும் பெற்று தனித்துவமாக விளங்கியிருக்கிறார்களென்ற முடிவுக்குத்தான் வரமுடியும்.

நாகர்கள் மலையைக் குடைந்தார்கள்; அலை கடலுள் புகுந்தார்கள்; நிலத்தை அகழ்ந்தார்கள்; தமிழை வளர்த்தார்கள்; செங்கோல் கொண்டார்கள்.

நாகர் நாகரிகமான சாதியினரென்றும், சீரான அரசாட்சியை கொண்டிருந்தார்களென்றும் ஆங்கிலேயரான எச்.பார்க்கர் கூறுகிறார் ( H.PARKER, 'ANCIENT CEYLON' 1909, LONDON)

**முடிநாகராயர்**

பண்டைய குமரிக்கண்டம் கடற்கோள்களால் தாக்குண்ட சேதிகளை கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ்ப்பெரும் நூல்களின்வாயிலாக யாவரும் அறியமுடியும்.

அது மட்டுமன்றி 3500 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பெற்ற ஸ்கொட் எலியட் எனும் பழம் பெரும் வரலாற்றறிஞரால் எடுத்துக்காட்டப்பட்டதுமான லண்டன் அரும்பொருட் காட்சிச்சாலையில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் 'த்ரோனோ' கையெழுத்துப் படியிலிருந்தும் அதை அறிந்து கொள்ளமுடியும். அதில் 'மு' நாடு என்ற பெயர் சொல்லப்பட்டிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

''.... பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக்குமரிக்
கோடுங் கொடுங் கடல் கொள்ள வடதிசை கங் கையு மிமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி''

என்று தென்திசையாண்ட தென்னவனாம் தமிழ் மன்னவனை வாழ்த்தும் சிலப்பதிகாரச் செய்யுளில் பஃறுளி ஆற்றுப்பிரதேசமும், குமரிமலையும் முதற்கடற் கோளில் மூழ்கியமை சொல்லப்படுகிறது.

அக்கடற்கோளுக்கு முன்னர் குமரிக்கண்டத்து ஏழ் மதுரையில் நிறுவப்பெற்றிருந்த முதற்றமிழ் சங்கத்தில் அங்கம் வகித்த நிதியின் கிழவன், குமரவேள் முதலாய புகழ்சேர் பெரும் புலவர்களுள் முரஞ்சியூர் முடிநாகராயர் எனும் புலவரும் ஒருவர். அவர் ஒரு நாகர்.

பூர்வகாலத்தில் இப்பூவுலகில் முதன் முதலாக மொழியின் பெயரால் நிறுவப்பெற்ற தமிழ்ச் சங்கத்தில் அங்கம் வகித்த பெரும் புலவர்களுள் நாகரும் ஒருவரெனில், அவர் பெயர் முடிநாகராயரெனில், நாகர்களை மனிதரல்ல எனப்பசப்பும் ஏடுகள் முக்காடு தான் போடவேண்டும்.

நாகர்களில் முடிநாகர், ஒளிநாகர், முகுளிநாகர், சங்குநாகர் என பல பிரிவினர் இருந்தனர்.

தமிழ் நாட்டில், பிற்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல் வெட்டுகளில் 'ஒளி நாகன் அழகிய சோழன்', 'ஒளி நாகன் சந்திரசேகரன்', இந்துப் புரவலன் சங்கநாகன்' போன்ற பெயர்கள் பொறிக்கப்பட்டிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

பாண்டி நாட்டிலும் சோழ நாட்டிலும் நாகர் வாழ்ந்த சில இடங்கள் 'உரக புரம்' எனவும் வழங்கப்பட்டு வந்துள்ளன. உரகம் என்றால் நாகம்.!


நாகர் வாழ்ந்த பிரதேச சூழல்களுக்கேற்பவும், அவர்களின் பெயர்கள் மாறுபடுவதுண்டு. கற்றோர் ஏத்தும் கலித்தொகைக்கு மருதக்கலி இயற்றிய புலவரின் பெயர் மருதனில நாகன் என்பதாம். அப்பெயர் மருத நிலத்து இளம் யானை என்று பொருள் பெறும்.

நாகம் என்ற சொல் யானைக்கும் பொருந்துமென்பதை தமிழ் அகராதிப்படி ஆங்கிலேயரான எச்.பார்க்கர் தனது ஏன்சன்ற் சிலோன் எனும் நூலில் குறிப்பிடுகிறார் (பக்.15).

ஆழியின் ஆதியில் குமரிக்கண்டத்தின் பூர்வகால மக்களாகிய நாகர் – கடற்கோள்களுக்குப்பின் இந்தியாவினதும், இலங்கையினதும் பழங்காலக் குடிமக்களாகிய நாகர் மனிதரென்பதும், திராவிடரென்பதும், தமிழரென்பதும் யாராலும் மறுக்க முடியாத, மறைக்க இயலாத பேருண்மையாகும்.

(வளரும்)

# பாலு மகேந்திராவின் அது ஒரு கனாக்காலம்



-பாலுமகேந்திரா-

'அது ஒரு கனாக்காலம் படத்தின் தலைப்பு, பப்ளிசிட்டிக்காக கொடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகியவற்றையும் பார்த்தால் பட்டவர்த்தமாகத் தெரிகிற விஷயம்—தனக்கே உரிய ஸ்டைலில் இளமை கொப்பளிக்கும் காதல் கதையோடு களம் இறங்கியிருக்கிறார் பாலுமகேந்திரா!

தவிர.... தனுஷ், ப்ரியாமணி மாதிரியான இளமை ராக்கெட்டுகள் ஜோடி சேர்ந்திருப்பது கூடுதல் கவன ஈர்ப்பைக் கொடுக்கிறது.

''ரொம்பச் சரியா சொல்றதுன்னா 16 வயதிலிருந்து 21 வயசுங்கிறது மனித வாழ்க்கையில் மறக்க முடியாத காலகட்டங்கள். அந்த வயசில் எதைப்பத்தியும் கவலை இருக்காது. ஆசைகளுக்கும், கனவுகளுக்கும் எல்லை கிடையாது. அந்த வயதைத் தாண்டி வரும் போதுதான் வாழ்க்கையின் யதார்த்தம் புரியும். யதார்த்தம் கொஞ்சம் கரடு முரடானது. அதுக்காக அந்தப் பருவத்துக்கான கொடுப்பினையைத் தொலைத்திடக் கூடாது. கனவு காணறதுக்கு எந்தக் கஞ்சத்தனம். அப்பா, பையன், காதலி என ஒரு முக்கோணத்திற்குள் இந்தக் கதைக் களத்தைக் கொண்டு வந்திருக்கேன். உலகத்தில் எந்த அப்பாவும் தன் புள்ள கெட்டுப் போகணும்னு நினைக்கிறது கிடையாது. பையன் நல்லா வரணும்கிறதுக்காக எடுக்கிற முயற்சி தப்பானதால் ஏற்படற விளைவுகள் ப்ளாஸ்டு தேவதை.

தனுஷ் மாதிரி ஒரு ஹீரோவை வைத்துக் கொண்ட அது ஒரு கனாக்காலம் எனச் சொல்வது சரியா வருமா என்றால் சிரிக்கிறார் பாலுமகேந்திரா.

''நம்ம நடப்பு சினிமாவைப் பொறுத்த வரை பெண்மை கலந்த ஆண்மையுள்ள ஹீரோவைத்தான் எதிர்பார்க்கிறாங்க.

துள்ளுவதோ இளமை படத்தோட ட்ரெய்லர் பார்த்தப்போ பளிச்னு மனசுக்குள்ள வந்து



'அது ஒரு கனாக்காலம்'
-தனுஷ், ப்ரியாமணி-

தான்'' படம் என்று சின்னதாக கதைச்சுருக்கத்தைச் சொல்கிறார் பாலுமகேந்திரா.

உடலில் காலவேகத்துக்கான தளர்வு தெரிந்தாலும், மனசும் மூளையும் அப்படியே இருபத்தைந்து வயது இளைஞனை ஞாபகப் படுத்துவதுபோல் இருந்தது பாலுமகேந்திராவின் பேச்சு.

தனுஷ் கல்லூரி முடித்துவிட்டு வேலைக்காக அலைகிற இளைஞன். ப்ரியாமணி இந்தப் பையன் ஓட்டிக்கிட்டான். பார்த்தால் பக்கத்து வீட்டுப் பையன் மாதிரி இருக்கிறதுதான் தனுசோட ப்ளஸ். நேர்ல பார்த்தப்போ அப்படியே ஆடிப்போயிட்டேன். கண்ல இருக்கிற ஷார்ப்நஸ் தோற்றம், அத்தனையும் இன்டர்நேஷனல் அண்மாட்டனுக்காக அத்தனை தகுதியும் இருக்குங்கறதுக்கான அடையாளம்.

கஸ்தூரிராஜா கிட்டப்போன் பண்ணிப் பேசினேன். சந்தோஷமா ஒத்துக்கிட்டார். சில காரணங்களால் வருஷக் கணக்கில் தள்ளிப் போகிற சூழல் ஏற்பட்டிருச்சு. தமிழில் ஒரு ஹீரோவோட முதல் படத்தோட வெற்றி தோல்விதான் அடுத்த படத்துக்கான வியாபாரத்தைத் தீர்மானிக்குங்கிறது துரதிஷ்டம். மே மாதத்துக்கு அப்புறம் ரிலீஸ் தேதி ப்ளான் பண்ணியிருக்கோம்'' என்றார். இப்படிச் சொன்னவர் சட்டென்று ஞாபகம் வந்தவராக இந்தக் கதை தனுஷுக்கு எப்படிப் பொருந்தும் என்று கேட்டிங் அல்லவா என்றபடி சொல்ல ஆரம்பித்தார்.

''சில நேரங்களில் வியாபார சமரசங்கள் தவிர்க்க முடியாதவை. மூன்றாம் பிறையில், பொன்மேனி உருகுதே பாட்டு வைக்கலாமா வேணாமாங்கிறதை முடிவெடுக்க எனக்கு ஒரு மாசம் ஆச்சு.

இதுவரை 19 படங்கள் பண்ணியிருக்கேன். எல்லாமே 35 எம்.எம். பிலிமில்தான் பண்ணியிருந்தேன். முதல் முறையாக இதுல 70 எம்.எம். பிலிம்ல பண்ணுறேன். இரண்டு பேரு உட்கார்ந்து பேசறதைப் படமாக்கும் போது 70 எம்.எம். அந்த ஃபிரேமை அழகாகக் காட்ட காட்சிக்கு அவசியம் இல்லாத திணிப்புகளைப் புகுத்த வேண்டியிருக்கும். எனக்கான களத்தில் கம்ஃபர்டபிளா ட்ரவல் பண்ணியிருக்கேன்கிற சந்தோஷம் இந்தப் படத்தில் இருக்கு.

இப்படத்தில் எனது கதைக்கு ஏற்ற ஆளைத்தான் தெரிவுசெய்திருக்கின்றேன். அதேபோல் நாயகி ப்ரியாமணியும் தனுஷுக்கு ஏற்றாற்போல் அமைந்துள்ளார். நிச்சயம் இப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தும்'' என்றார்.



'அது ஒரு கனாக்காலம்'
-தனுஷ், ப்ரியாமணி-

# வயதான நாயகர்களுடன் நடிக்கும் நயன்தாரா



திரையில் என்னை பார்ப்பவர்கள் நான் வயதுக்கு மீறிய தோற்றத்தில் இருப்பதாக சொல்லுகிறார்கள். அந்த தோற்றம் தான் எனக்கு....

ஐயா படத்தில் சரத்குமாருக்கு ஜோடியாக நடித்து தமிழில் அறிமுகமானார் நயன்தாரா. தற்போது ரஜினிகாந்த் ஜோடியாக 'சந்திரமுகி'யில் நடித்து வருகிறார்.

கேரளாவைச் சேர்ந்த இவர் ஏற்கனவே 'மனஸினக்கரை' படத்தில் ஜெயராம் ஜோடியாக நடித்தார். இப் படம் மூலம்தான் திரையுலகில் அறிமுகமானார்.

ரஜினிகாந்த், சரத்குமார், மோகன் லால், ஜெயராம் போன்ற மூத்த நடிகர்களுடன் ஜோடியாக நடிப்பது ஏன்? என்று நயன்தாராவிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

திரையில் என்னைப் பார்ப்பவர்கள் நான் வயதுக்கு மீறிய தோற்றத்தில் இருப்பதாக சொல்கிறார்கள். அந்த தோற்றம்தான் எனக்கு மூத்த நடிகர்களுடன் நடிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி தருகிறது.

வயதில் மூத்த நடிகர்களுடன் நடிப்பதால் எனக்கு கொஞ்சமும் வருத்தம் இல்லை. சந்தோஷம்தான். மூத்த நடிகர்கள் எல்லோருமே பெரிய நடிகர்கள்தான். 'ஐயா' படத்திலும் 'சந்திரமுகி' படத்திலும் எனக்கு கவர்ச்சியாக நடிக்கும் நிலைமை ஏற்படவில்லை.

வேறு படங்களில் நான் நடிக்கப் போகும் வேடங்களுக்கு கவர்ச்சி அவசியம் என்றால் ஓரளவுக்கு கவர்ச்சியோடு நடிப்பேன். நான் ரஜினிகாந்தின் ரசிகை. அவர் நடித்த பல படங்களைப் பார்த்து உள்ளேன். அவருடன் சேர்ந்து நடிக்க வாய்ப்பக் கிடைத்தது பெரிய அதிஷ்டம். இவ்வாறு கூறினார் நயன்.

# கவி முத்துவும் இசை

'மண்ணிலே மண்ணிலே
வந்து உடையுதே வானம்
மழையிலே கரையுதே



-கவிப்பேரரசு வைரமுத்து-

ரெண்டு மனங்களின் தூரம்'

பாடல்களின் அட்சய பாத்திரம் வைரமுத்து. 'மழை' படத்திற்காக அவர் எழுதிய பாடல்வரி நிஜத்திலும் பொருந்தும். இளையராஜாவோடு இசையுத்தம் நடத்திப் பிரிந்தவர், தங்கள் பழைய நட்புக்கு புதிதாக பாலம் போட முயல்கிறார்.

''என் மீதான மதிப்பு அங்கே (இளையராஜாவிடம்) குண்டுமணி அளவு குறைவதாகக் கருதிய போது நான் வெளியே வந்துவிட்டேன். ஆனால் செய்வது இன்னதென்று அறியாமல் நானும் அவரைக் காயப்படுத்தியிருப்பேனோ என்று இப்போது கருதிப் பார்க்கிறேன். வருத்தத்துக்குப் பக்கத்தில் அவர் மீதான அன்பும் அக்கறையும் ஒரு போதும் குறைந்ததில்லை.''

இளையராஜாவிடம் வைரமுத்து 'காய்' விட்டு வருடங்கள் இருபது ஓடி விட்டன. ஆனாலும், இந்த காம்பினேஷனின் அட்ராக்ஷன் இன்னும் தமிழ் சினிமாவை விட்டு விலகவில்லை. இதை வைரமுத்துவும் உணர்ந்திருக்கிறார். இளையராஜாவுக்கு சமீபத்தில் ஒரு பிரச்சினை வந்தபோது அதற்கான தீர்வை ரஜினிமூலம் சொல்லியனுப்பியவர் வைரமுத்து.

கார்த்திக்ராஜாவின் திருமணத்திலும் இவர் கலந்து கொண்டார். இவையெல்லாம் மீண்டும் இணைவதற்கான சமிக்ஞைகளா?

''இப்போது மனது கனிந்திருக்கிறது. வாழ்வு நிறைந்திருக்கிறது. போகம் குறைந்திருக்கிறது. இனிமேல் தொழில் ரீதியாக என்பதிருக்கட்டும் நட்பு ரீதியாக அன்பு பாராட்ட வேண்டும் என்றே ஆசைப்படுகிறேன்'' என்று சொல்லும் வைரமுத்து தனது இன்னொரு நண்பர் ரஜினியின் 'சந்திரமுகி'யில் பாடல் எழுதவில்லை. வைரமுத்து இல்லாத ரஜினி படமா?

# பைக்கில் சாகஸம் -கமல்

ரிஸ்க் எடுப்பது கமலுக்கு 'ரஸ்க்' சாப்பிடுவது போல. புன்னகை மன்னன் படத்தில் சாப்ளின் மாதிரி 'பைவ்' அடித்ததில் கமலுக்கு நேர்ந்தது எலும்பு முறிவு. ஆனாலும், 'மும்பை எக்ஸ்பிரஸ்' வரை தொடர்கிறது கமலின் சாகஸ உறவு!

'மும்பை எக்ஸ்பிரஸ்' படத்தில் குழந்தை ஹார்த்திக்கை கமல் மோட்டார் சைக்கிளில் வைத்து வேகமாக ஓட்டிச்செல்லும் காட்சி. த்ரில்லான சேஸிங் சீன். வழக்கம் போல கமல் டூப் போடாமல் தானே மோட்டார் சைக்கிளை எண்பது கிலோமீட்டர் வேகத்தில் கிளப்புகிறார். திடீரென்று மோட்டார் சைக்கிள் உள்ளூர் அரசியல்வாதிகளைப் போல் முரண்டு பிடிக்க, ஆறடி உயரத்திற்கு கமலும் குழந்தை ஹார்திக்கும் தூக்கி வீசப்படுகின்றனர். அந்தரத்தில் பல்டியடித்து கமலும் குழந்தையும் சுவரில் மோதி கீழே விழ, பார்த்திருந்த யூனிட் அலறிக்கொண்டு ஓடி வருகிறது.

குழந்தையை கமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டதால், குழந்தை காயம் எதுவுமின்றி தப்பித்தது. கமலுக்கு மட்டும் அங்கங்கே வீரத்தழும்பு!

சரித்திரம் படைக்க வேண்டிய கமலுக்கு இது போன்ற சாகஸங்கள் தேவைதானா?

இந்தக் கேள்விக்கு கமலின் பதில் சின்ன தலையாட்டலும் பெரிய புன்னகையும்.

''பொதுவாக உண்மையிலேயே ஆபத்தான காட்சிகளில் நடிக்கும்போது எந்த விபத்தும் ஏற்படுவதில்லை. ஆனால், எதிர்பாராத காட்சிகளில்தான் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதுதான் வேடிக்கை. நாங்கள் நடிகர்கள். இதெல்லாம் சகஜம் எங்களுக்கு என்று கூறிவிட்டு அடுத்த 'ஷாட்'டுக்கு தயாராகிவிட்டார் கமல்.

'ரிஸ்க்'கான காட்சிகளில் நடிப்பதற்கு கமல் 'ஸ்டீவ் மெக்கியூன்'சின் கொள்கையை சுட்டிக்காட்டுகிறார்.



-கமல்-

''நல்ல ஆரோக்கியமான வலிமையான உடற்கட்டு இருக்கும்போது அவருக்காக இன்னொருவர் நடிக்கத் தேவையில்லை.''

# இயக்குனராகிறார் நடிகர் பிரபுதேவா



டான்ஸ் சொல்லி கொடுக்கும் போதே காட்சிகளை பிரிப்பது எப்படி, உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதுஎப்படி என்றெல்லாம் பாதி டைரக்டர் வேலைகளை செய்தார் பிரபுதேவா.

டைரக்டர் ஆகணும்கிற நீண்ட நாள் ஆசை. அதுக்காக பயிற்சி எதுவும் எடுக்காமல் டான்ஸ் மாஸ்டராக இருந்தபோதே நிறைய அங்க அசைவுக ளைக் கற்றுக் கொண்டேன் என்கிறார்.

தான் டைரக்டு பண்ண வாய்ப்பு தேடினபோது தெலுங்கில் கிடைத்தது. ஊன் உறக்கம் இல்லாமல் உழைச்சு இந்தப் படத்தை எடுக்கிறேன். ரசிகர்கள்தான் படத்தைப் பார்த்து விட்டு எப்படி இருக்கிறது என்னு சொல்லனும்.

இது ஒரு காதல் கதை. லண்டனில் வசிக்கும் சித்தார்த் ஒரு கல்யாணத்துல கலந்து கொள்ள ஆந்திரா வருகிறார். அங்கு அவர் த்ரிஷாவை பார்த்து காதல் வசப்படுகிறார். இதுதான் கதை. அடுத்து தமிழில் ஒரு படம் டைரக்டு செய்ய முடிவு பண்ணி இருக்கேன் என்றார் பிரவுதேவா.

ரசிகர்களின் கையில்தான் இவரின் எதிர்காலமோ?



'திருடிய இதயத்தை' ரொஹான், சுபபான்ஜா-

# ...ைச ராஜாவும்

...முயல்கிறார்.

...க (இளையராஜா ...றுவதாகக் கருதிய ...ிட்டேன். ஆனால் ...மல் நானும் அவ ...என்று இப்போது ...ுக்குப் பக்கத்தில் ...யும் ஒரு போதும்

...த்து 'காய்' விட்டு ... ஆனாலும், இந்த ...ன்னும் தமிழ் சினி ...இதை வைரமுத்து ...ளையராஜாவுக்கு சமீ ...போது அதற்கான ...னுப்பியவர் வைர

...னத்திலும் இவர் ...ல்லாம் மீண்டும் ...?

...க்கிறது. வாழ்வு ...றைந்திருக்கிறது. ...ன்பதிருக்கட்டும் ...வண்டும் என்றே ...சொல்லும் வைர ...பர் ரஜினியின் ...லை. வைரமுத்து

வைரமுத்து நிதானமாகவே பதிலளிக்கிறார். ''சந்திரமுகியின் தேவை வேறாக இருக்கலாம். ஆனால், ரஜினிக்கும் எனக்குமுள்ள நட்பு, பட



-இசைஞானி இளையராஜா-

உறவுகளையும் தாண்டிப் புனிதமானது.''

சந்திரமுகியில் இல்லாவிட்டால் என்ன, 'மழை', 'கனாக்கண்டேன்', 'காட்பாதர்' என அடுத்தடுத்து பாடல் மழை பொழிய இருக்கிறார் வைரமுத்து. குடை இல்லாமல் நனைவோம்!

# மணியின் ஆசைநாயகி மும்தாஜ்

'லண்டன்' படத்தில், சட்ட விரோதமான வேலைகளைச் செய்யும் தாதாவாக மணிவண்ணனும், அவருடைய ஆசை நாயகியாக மும்தாஜும் நடிக்கிறார்கள்.

ஆசை நாயகி வேடம் என்பதால் மும்தாஜ் படம் முழுக்க கவர்ச்சியாக வருகிறார்.

படத்தில் அவர் அணிவதற்கான உடைகளை, அவரே வடிவமைத்து இருக்கிறார்.

பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கும் இந்தப் படத்தில், அவருக்கு ஜோடியாக அங்கிதா நடிக்கிறார்.

கதை சம்பவங்கள் முழுவதும் லண்டனிலேயே நடைபெறுவது போல், திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது.

கதாநாயகன் தனது குடும்பப் பிரச்சினையை சமாளிக்கும் பொருட்டு பணம் சம்பாதிப்பதற்காக லண்டன் செல்கிறார். அங்கே பல்வேறு குணாதிசயங்களைக் கொண்ட மனிதர்களைச் சந்திக்கிறான்.

வேலை வெட்டி இல்லாத வக்கீல், பணத்துக்காக எதையும் செய்யத் தயங்காத டுபாக்கூர் ஆசாமி, சட்டவிரோத வேலைகளைச் செய்யும் தாதா, அவருடைய ஆசை நாயகி, முதலாளிக்காக உயிரை விடவும் தயங்காத விசுவாசமான வேலைக்காரர் ஆகிய பல தரப்பட்ட மனிதர்களால் கதாநாயகனின் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளே படத்தின் கதை.

இப் படத்துக்கு வித்தியாசாகர் இசையமைக்க, அனைவரும் ரசிக்கும் வகையில் திரைக்கதை எழுதி இருக்கிறார் டைரக்டர் சுந்தர்சி.

# பரத் - சந்தியா நட்பு

பதினாறு பிளஸ்சில் இருக்கும் இளமை காட்டாறுகளுக்கு மத்தியில் 'காதல்' படநாயகி சந்தியாவை நீந்த விட்டால் எப்படி இருக்கும்? கோவை வேளாண்மை பல்கலைக்கழக நூற்றாண்டு விழாவையொட்டி நடந்த முத்தமிழ் மன்றத்தில் கலந்து கொண்டவர்களுக்கு அதைக் காணும் பாக்கியம் கிடைத்தது.

'காதல்'படத்தை கண்ணியமாகத் தந்ததற்கு தமிழ்நாடு முழுக்க இயக்குநர் பாலாஜி சக்திவேலுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு கொடுத்து அசத்திவருகிறார்கள். முத்தமிழ் மன்றத்தின் சிறப்பு விருந்தினர்களாக இயக்குநர் பாலாஜியும், நடிகை சந்தியாவும் வந்திருந்தனர். மாணவர்கள் காதல் முதல் கனவு நாயகன் வரை சந்தியாவிடம் கேள்விக்கணை தொடுத்தனர்.



'காதல்' -சந்தியா-

**'காதல்' பட அம்மா, அப்பாவுக்கும், நிஜ அம்மா, அப்பாவுக்கும் என்ன வித்தியாம்?**

''நிஜ அம்மா, அப்பா காதல் திருமணம் செய்து கொண்டவர்கள். அமைதியானவர்கள். காதல் பட அம்மா, அப்பா பயங்கரமானவர்கள்.''

**உங்கள் குறிக்கோள்?**

''நல்ல நடிகையாக பெயர் எடுப்பதே என் லட்சியம்''

**நடிகர் பரத்தைப் பற்றி?**

''நல்ல நண்பர். காதல் பட சூட்டிங்கில் எனக்கு நடிப்பு, நடனங்கள் சொல்லிக் கொடுத்தார்.''

**நீங்கள் உண்மையாகவே அடக்கம், ஒடுக்கமான பெண்ணா, அடாவடிப்பெண்ணா?**

''இரண்டுமே உள்ள பெண். காலத்துக்கு தகுந்தாற்போல் மாற்றிக் கொள்வேன்.''

**பிடித்த நடிகர், நடிகை?**

''நடிகர் கமல்ஹாசன், நடிகைகள் அனைவரையும் பிடிக்கும்.''

**ஆண் நண்பர்கள் உண்டா?**

''இதுவரை இல்லை. பெண்கள் படித்த பள்ளியில் படித்ததால் அதற்கு சான்ஸ் இல்லை. தற்போது நீங்கள் தான் என் பாய்பிரண்ட்.''

**நடிக்க வந்ததால் கல்லூரி வாழ்க்கையை இழந்ததாக எண்ணுகிறீர்களா?**

''கல்லூரி வாழ்க்கையை இழந்ததாக நான் கருதவில்லை. நடிக்க வந்ததன் மூலம் நல்ல விஷயத்துக்காகத் தானே இழந்து உள்ளோன்.''

**காதல் பட சூட்டிங்கில் டைரக்டரிடம் திட்டுவாங்கினீர்களா?**

''கிறுகிறு என்ற பாட்டு சூட்டிங் நடந்த போது டைரக்டர் திட்டினார். பின்னர் என்னை சமாதானப்படுத்த சாக்லெட், பிஸ்கட் வாங்கிக் கொடுத்தார்.''

**அஜித், விஜய், விக்ரம் இவர்கள் மூவரில் யாருடன் நடிக்க விரும்புகிறீர்கள்?**

''எந்தப் படத்தில் கதை நன்றாக இருக்குமோ அந்தப் படத்தில் நடிக்க விரும்புவேன்.''

# குட்டிக்காக பாடியது எனது பாக்கியம்!

''மயூரி என்ற படத்தில் கால் ஊனமான பெண் ஒருவர் ஹீரோயினாக நடித்தார். 'டான்ஸர்' படத்தில் குட்டி நடித்திருக்கிறார். மயூரி படத்துக்கு நான்தான் இசையமைத்தேன். அதற்கு இசையமைத்ததும் குட்டிக்காக டான்ஸர் படத்தில் பாடியதும் நான் செய்த பாக்கியங்கள்'' என்றார் எஸ்.பி.பாலசுப்பிரமணியம்.

சிவா பவுண்டேஷன் சார்பில் சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில்தான் இப்படிக் கூறினார் எஸ்.பி.பி.

அவர் கூறியதில் அர்த்தம்இருந்தது என்பதை நிகழ்ச்சியில் நிருபித்துக் காட்டினார் குட்டி. ஒரு கால் ஊனமான குட்டியின் அந்த டான்ஸ், புதிதாய் பார்ப்பவர்களின் புருவங்களை உயர்த்தச் செய்தது.

'குட்டி ஒரு டான்ஸர் என்பது தெரியும். எவ்வளவு நல்ல டான்ஸர் என்பது இன்று பலருக்குத் தெரிந்துவிட்டது. தம்பி (குட்டியை நோக்கி) நீ நல்லா வருவே' என ஆசீர்வதித்தார் எஸ்.பி.பி.

# சதாவின் திருமணம் எப்படி?

பெற்றோர் ஆசியுடன், ஆதரவுடன் இருந்தால்தான் இல்வாழ்க்கை நன்றாக இருக்கும். திருமணத்தில் அவர்கள் விருப்பம்தான். காதல் திருமணத்தில் நம்பிக்கை இல்லை. பெற்றோருக்கு நான் ஒரே பெண்.

அம்மா, அப்பாபார்க்கிற மாப்பிள்ளையை காட்டிக்கிட்டாத் தான் பிரச்சினை இருக்காது.

அவர்கள் பார்க்கிற நபரைத்தான் திருமணம் செய்வேன். காதல் திருமணத்தில் நிறையப் பிரச்சினைகள் இருக்கும். பெற்றோர் ஆசியுடன், ஆதரவுடன் இருந்தால் இல்வாழ்க்கை சிறப்பாக அமையும் என நம்புகிறேன் என்றார் சதா.

# பித்தன் பதில்கள்

*சின்னத்தம்பி—தவசிக்குளம்.*

கேள்வி:- அன்பின் பித்தன் அண்ணா! இந்தக் காலத்துப் பெண்கள் எல்லாம் திருமணம் முடித்து பிள்ளை குட்டி என்று ஆன பிறகும் கணவன்மாரின் கட்டுப்பாடுகளை மீறித் தங்களை அழகுபடுத்துகிறார்களே! ஏன்?கணவன்மாரைத் திருப்திப்படுத்தவா? அல்லது...?



*பதில்:*—கணவன் இரத்தத்தை வியர்வையாக்கிச் சேர்க்கும் பணத்தில் சாறிக்கேற்ற செருப்பு, செருப்புக்கேற்ற பொட்டு, பொட்டுக்கேற்ற கைப்பை, கைப்பைக்கேற்ற குடை என்று எல்லாம் வாங்கி தங்களை அழகுபடுத்தினால் எந்தக் கணவனும் எந்த நாளிலும் திருப்திப்பட மாட்டான். நீர் அல்லது என்றுவிட்டு அடுத்ததாக என்ன நினைக்கிறீரோ அநேகமாக அதற்காகத்தான் இந்த அலங்காரங்களாக இருக்கலாம்.

*க.தர்ஷிகா—இத்தாவில்.*

***கேள்வி:- அன்புள்ள பித்துமாமா! ஒருவர் நல்ல பணம் வைத்துக்கொண்டு சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து பொறாமைப்படும் மனிதரைப்பற்றி என்ன நினைக்கிறீர்?***

*பதில்:*—மனிதனுக்கு இருக்கும் அடிப்படைக் குணாதிசயங்களில் அதுவும் ஒன்று. பணம் மட்டுமல்ல காணி—பூமி,கார்—மோட்டார் சைக்கிள், கடை கண்ணி ஏன் அதிகமான பெண்களை வைத்திருப்பவர்களையும் பார்த்துப் பொறாமைப்படுவார்கள்.ஆனால், அதற்குப் பின்னால் உள்ள சோகத்தை அறிந்திருக்கமாட்டார்கள்.

*இ.யோகன்—புதுக்குடியிருப்பு.*

***கேள்வி:-பித்துக்குட்டி எனது வணக்கம். அரச ஊடகங்களைப் பயன்படுத்தி சில அலட்டல் நிகழ்ச்சிகளை நடத்துபவர்களைப் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?***

*பதில்:*— தங்கள் எதிரியை விமர்சிக்க வேண்டும் என்பதற்காக தப்பான—தவறான தகவல்களை எல்லாம் சொல்லித் தங்கள் தப்புகளை மறைத்துத் தப்பிக்கப் பார்ப்பவர்கள் மீட்டும் தப்பான ராகம் அது. தப்புக்கள் நடந்தால் அவைகளைத் தப்பாமல் ஒப்பிக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் அவைகளை விட மோசமான தப்புக்கள் செய்பவர்கள் தங்கள் தரப்புத் தப்புக்களை பதுக்கிவிட்டு மற்றவர்களின் தப்புக்களை தப்புத்தவறாக ஒப்புவிப்பது என்பது மகா தப்பு.

*பிரதீபன்—லண்டன்.*

***கேள்வி:-அன்பின் பித்தனே! இலங்கையில் இன்று கடன் இல்லை என்று கடைகளில் எழுதி ஒட்டியிருக்கிறார்களே... அது ஏன் பித்தா?இதை லண்டனில் எழுதி ஒட்டினால் எப்படி இருக்கும்?***

*பதில்:*—ஐயா...குண்டூசி வாங்கினாலும் கடனுக்கு வாங்கும் ஆட்கள் உள்ள நாடு இது. கடன் வாங்கி கணக்கை ஏற்றிவிட்டு கம்பி நீட்டிவிடும் ஆட்கள் அதிகம். அதனால் அப்படி எழுதி ஒட்ட வேண்டி இருக்கிறது. ஆனால், உங்கள் லண்டன் கடன் அட்டைகள்(கிரடிட் கார்ட்) பாவிப்பவர்கள் உள்ள நாடு.எனவே,அங்கே அப்படி ஒட்டத் தேவையில்லை. ஆனால், அங்கேயும் இப்போ கள்ளக் கார்ட் அடிப்பவர்கள் மலிந்துவிட்டதால் இனிமேல் அங்கேயும் ‘‘இன்று கடன் அட்டை வியாபாரம் இல்லை’’ என்று எழுதி ஒட்ட வேண்டி வரலாம்.(அப்பாடா... உமது 13 கடிதங்களுக்கும் கிடைக்காத பதில்...14ஆவது கடிதத்துக்கு கிடைத்துவிட்டதே சந்தோஷம் தானே!)

*விருகி—மண்மூர்*

***கேள்வி:- பித்து! எனக்கு குழந்தையில்லை என்பதற்காக மலையேறி மாவிளக்கு எடுத்தேன். அதுவும் பயனில்லை இனி என்ன செய்யலாம்?***

*பதில்:*— அம்மா.. நான் பித்தன். கேள்விக்கு பதில் மட்டும்தான் தருவேன். அதற்கு அப்பால் எதுவும் என்னிடம் எதிர்பார்க்காதேயும். sorry

*கு.பிரகாஸ்—கற்சிலைமடு.*

***கேள்வி:- பித்தா! சுனாமியின் தாக்கம் காரணமாக புலிகளும் இராணுவமும் ஒற்றுமையாக சேர்ந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டார்களே... இப்படியே தொடர்ந்தும் இருப்பார்களா?***

*பதில்:*— அவர்களுக்கென்னவோ சேர்ந்து பணியாற்ற விருப்பம்தான். ஆனால், ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற சில இனவாத அரசியல்வாதிகள் சிண்டு முடிவதில் தீவிரமாக இருக்கிறார்களே பிறகெப்படி.

*நா.அச்சுதன்—திருநகர்.*

***கேள்வி:- அன்பான பித்தன் மாமா களுத்துறைச் சிறைச்சாலையில் இருந்து கண்ணீர்க் கவிதை வழங்கும் அண்ணாக்களை நினைத்து கவலைப்பதில்லையா?***

*பதில்:*— இல்லாமல் எனக்கு! அவர்களின் வேதனை கொஞ்சம் அதிகமாகவே புரியும். நவீன உலகில் ஏராளமான சந்தோஷங்களையெல்லாம் தொலைத்துவிட்டு நான்கு சுவர்களுக்கு பின்னால் வாடும் அவர்களின் சோகம் என்னாலும் உணரப்பட்டது. மணித்தியாலங்கள் ஒவ்வொன்றும் மாதங்களாக தெரிய வலையடித்த அறையில் நின்று தேடிவரும் உறவுகளுடன் உரையாடும் அந்த கொடுமை என்னாலும் உணரப்பட்டது.



உலகிலே பேசுவதற்கு எவ்வளவோ விடயங்கள் இருக்க... பயங்கரவாத தடைச்சட்டம், அவசர காலச்சட்டம், நீதிமன்றம், வக்கீல் என்று ஒரு குறுகிய வட்டத்தை பற்றியே பேசி... சிந்தித்து வாழும் அந்தக் கொடுமையான வாழ்க்கையை நன்றாவே உணர்ந்தவன் நான். கொலை செய்தவன் – கொள்ளை அடித்தவன் எல்லாம் வந்தது போனது. அடுத்த முறையும் வந்தது ஜனாதிபதியிடம் மன்னிப்பு கிடைத்தது எல்லாம் திகதிவாரியாகச் சொல்லும்போது....இவர்கள் மட்டும் என்ன தப்புச் செய்தோம் ஏன் வந்தோம், எப்போ போவோம் என்று தெரியாமல் சூனியத்தில் வாழும் வாழ்க்கை நான் கடந்தும் வந்தது..... எனவே எனக்கும் அவர்களை பற்றி நிறையவே கவலைகள் உண்டு.

*பொன்னம்பலம் கோகிலா—மீசாலை கிழக்கு*

***கேள்வி:- பித்தா! தமிழீழ மக்களுக்கு எப்போது இராணுவ ஒடுக்குமுறைகளற்ற காலம் வரும்?***

*பதில்:*— நமக்கென்று ஒரு நாடு உருவாகிய பின்.

*மு.வாசுமிரா, புளியங்குளம்.*

***கேள்வி:- பித்தா! உமது வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் ஏதும் உண்டா?***

*பதில்:*— ஒருவனுடைய வாழ்க்கையில் முதல் காதல் – முதல் முத்தம் என்பன மறக்க முடியாதவை என்பார்கள். என்னைப் பொறுத்த மட்டில் மனைவியிடம் முதல் முதல் வாங்கிய அடிதான் மறக்கவே முடியாது.

*க.காசினி—கரந்தாய்—பளை.*

***கேள்வி:-பித்தா!மழுப்பாமல் சொல்லும்.கடந்த 26ஆம் திகதி நடந்த இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கபட்ட மக்களுக்கு நீர் என்ன உதவி செய்தீர்?***



*பதில்:*— ஏராளமாகச் செய்தேன். எனது மனதுக்கு ஆறுதல் ஏற்படும் வரை. அது போதும். அவைகளைப்போய் தண்டோரா போட்டு தம்பட்டம் அடிக்க நான் ஒன்றும் அரசியல்வாதியும் அல்ல. அதிரடித் திரைப்பட நடிகனும் அல்ல. அப்பாவித்தமிழன்.

*ச.வைகுந்தன், வத்தளை.*

***கேள்வி:- உமது மனைவியின் கொடுமை தாங்க முடியவில்லை என்கிறீரே.... பேசாமல் எங்காவது கடற்கரைக்குப் பக்கத்தில் வீடெடுத்து இரும்...சுனாமி மறுபடி வரும்போது மனைவியை பிடித்து தள்ளிவிடலாம்?***

*பதில்:*— ஐயா அவள் சரியான அலேட்பேர்வழி.... என்னை தள்ளி விட்டு தான் தப்பிக்கொள்வாள்.

*செ.அர்ச்சனா— கல்லுண்டாய்.*

***கேள்வி:- பித்தா.... உண்மையை சொல்லும் அரைகுறை ஆடை போடுபவர்களையும்,வெட்டு வைத்து சட்டை போடுபவர்களையும் இந்த திட்டு திட்டுகிறீரே...அவர்களை ஜொள்ளு விட்டுப்பார்ப்பதில்லையா?***

*பதில்:*— ஹி.... ஹி.... ஹி..... பார்க்காமல் ஹி..... ஹி...... என்னடா. நாங்கள் இவ்வளவு கவர்ச்சியாக உடை உடுத்திக் கொண்டு செல்கிறோமே இவன் பார்க்காமல் போகிறானே. இவனிலே ஏதோ குறைபாடு இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைத்து எனது ஆண்மையைக் கொச்சைப்படுத்தக் கூடாதே என்ற ஆதங்கத்தில்.....கொஞ்சம் ஜொள்ளு கலந்து பார்ப்பதுண்டு ஹி..... ஹி.... ஹி... (அப்பாடா தப்பிச்சேன்)



*ப.புஷ்பவல்லி—நாவல்காடு.*


***கேள்வி:- பித்தா! உமது மனைவி உம்மை அடித்துத் துரத்தினால் நீர் எங்கு செல்வீர்?***

*பதில்:*—வீட்டைவிட்டு மனைவி துரத்தினால் நான் பேசாமல்அனாதை இல்லத்தில் ஒதுங்கிக்கொள்ள நான் ஒன்றும் கோழை அல்ல.என்னை வீட்டைவிட்டு விரட்டிய மனைவியைப் பழிவாங்க அவள் என்னைத்தேடி வந்து ‘ஐயோ வாருங்கள் வீட்டுக்கு என்று கூப்பிடும்வரை ஓய மாட்டேன்.எனது மாமியார் அதாவது மனைவியின் தாய் வீட்டில் போய் இருந்துவிடுவேன்.அங்கே எனது லொள்ளு தாங்க முடியாமல் எனது மாமி தனது மகளுக்கு அதாவது எனது மனைவிக்கு ரெலிபோன் எடுத்து உனது கணவரை வந்து கூட்டிக்கொண்டு போ அல்லது நான் தற்கொலை செய்துவிடுவேன் என்று சொல்லும் வரை லொள்ளு பண்ணுவேன்.நிலைமை சுமுகமாகத் தீர்ந்துவிடும்.எப்படி எனது எதிர்காலத்திட்டம்? ஓ.கேயா?

*செ.கோபால கிருஷ்ணன்—கல்விளான்.*

***கேள்வி:-பெட்டிப்பாம்பாக பேசும் ஆண்களில் சிலர் கல்யாணத்துக்குப்பின் கறையான் புற்றுக்குள் கருநாகம் புகுந்ததுபோல் எந்த நேரமும் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கிறார்களே ஏன் பித்தா?***

*பதில்:* —கல்யாணத்துக்கு பிறகு எங்கே கலகலப்பு இருக்கப்போகிறது. எனவே புகுந்து கொள்ள கிடைத்த இடத்தில் பெட்டிப்பாம்பாக அடங்கி – கறையான் புற்றே கதி என்று கிடக்கிறார்கள். ஒதுங்கக்கிடைத்த இடத்தில் ஒழுங்காக இருக்க வேண்டுமோ இல்லையோ.... கொம்பேறி மூக்கன்கள் அல்லது உடும்பு– ஓணான், போன்ற ...... குடிபுகுந்துவிட்டால். கஷ்டம் அல்லவா?



*நி.நிசாந்தி— கல்லோயா.*

கேள்வி:-அன்பின் பித்துக்குட்டி! உங்கள் மனைவியை மீறி நீர் எந்தக் காரியத்தையும் செய்ய மாட்டீராம் என்று உமது மனைவியின் தோழியாக இருப்பவள் என்னிடம் வந்து கூறினாள். உண்மையாகவே அவள் உமது மனைவியின் தோழி தானா? அவள் சொல்வது எல்லாம் உண்மைதானா?

*பதில்:*— சும்மா போவோர் வருவோர் எல்லாம் என்னைத்தெரியும்— என் மனைவியைத் தெரியும் என்று றீல் விடுவார்கள். அதையெல்லாம்போய் நீர் நம்பலாமா...?

---

**பித்தனின் கேள்வி**

*கேள்வி:-பேனாக்கள் பேசும் என்பதைப்பற்றி என்ன நினைக்கிறீர் பித்தா?*

**வாசகர்கள் பதில்கள்**

*சுஜித்ரா— சங்கானை.*

மனிதர்களின் நாக்கை விட பேனாக்களின் முனை மிகவும் கூர்மையானது என்று சொல்லக்கேள்விப்பட்டிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரை அதுவே எனது கருத்தும்.

*பாலாஜி—திருநெல்வேலி.*

மனிதர்கள் எதைப் பேச நினைக்கிறார்களோ அதனையேதான் பேனா பேசுகின்றதே ஒழிய பேனா ஒருநாளும் தானாகப் பேசாது.

*மஹறா— நல்லூர்.*

இந்தக்காலத்தில் மனிதர்களே வாய் திறந்து பேசப் பயப்படுகிறார்கள். பிறகெப்படி பேனா பேசும்?

*சுரேஷ்—கல்முனை.*

பேனாக்கள் பேசுவதனால்தானே இங்கே எவ்வளவோ நல்ல காரியங்கள் நடக்கின்றன. அதனால் பேனா தானாகப் பேசாவிட்டாலும் அது பேசுகிறது என்பது உண்மை!

*சாலபன்— சாவகச்சேரி.*

உண்மை,பொய் என்பதைப் பகுத்தறியத் தெரியாவிட்டாலும் பேனா பேசும்.


---

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான —குறும்பான யதார்த்தமான— பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை பெப் 13 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.





***கேள்வி:— அன்பின் பித்தா! வேஷம் போடும் மனிதர்கள் பற்றி உமது கருத்து என்ன?***

*பதில்:*—நாம் வாழும் உலகமே ஒரு நாடக மேடை தானே?இங்கு எல்லோரும் அவரவர் சுய நலத்துக்காக பல்வேறு முகமூடிகளைப் போட்டு நடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு- 14.

# குழந்தையின் பேச்சை வைத்து அதன் ஆரோக்கியத்தை மதிப்பிடலாமா?



'குழல் இனிது யாழ் இனிது என்பர் மழலை சொற் கேளாதவர்'.

பொதுவாகக் குழந்தைகளைப் பொறுத்தவரை சிலர் வெகு விரைவிலேயே பேச ஆரம்பித்துவிடுகிறார்கள். ஆனால், சில குழந்தைகளுக்கோ பேச்சு வர சிறிது காலம் எடுக்கும். அதே போன்று குழந்தைகள் பேச ஆரம்பித்ததும் அட்சர சுத்தமாக வார்த்தைகள் வந்துவிடாது. சில குழந்தைகளுக்கு வார்த்தைகளே வராது. மழலைப் பாசையிலேயே சில காலம் பேசிக்கொண்டிருப்பார்கள். இது இயற்கையானது. ஆனால், சில பெற்றோர் இது குறித்து மிகவும் கவலைப்படுவது இயல்பு.இந்த வயதில் மற்றவர்களின் குழந்தைகள் மட்டும் தெளிவாகப் பேசுகின்றனவே?எமது குழந்தை மட்டும் ஏன் இப்படி இருக்கிறது? என்று நினைக்கிறார்கள். இது தேவையற்ற ஒன்று.

பொதுவாகக் குழந்தைகளின் முதல் வார்த்தைகள் மிகச்சுருக்கமாக இருக்கும். அது ஓரளவு அர்த்தம் உள்ளதாகவும் இருக்கலாம். அதேவேளை, அர்த்தமே இல்லாமலும் இருக்கலாம். குழந்தைகள் குறைந்த பட்சம் 9 மாதத்தில் இருந்து அதிகபட்சம் 18 மாதங்கள் வரை பேச ஆரம்பித்துவிடுவார்கள்.இதில் காலம் சிறிது மாறுபடலாம். அதற்காக குழந்தை எப்படிப் பேசுகிறது என்பதை வைத்து அதனுடைய ஆரோக்கியத்தைச் சொல்ல முடியாது. இருப்பினும் குழந்தைகளின் பேசும் திறன் எவ்வளவுக்கு இருக்கிறது என்பதைக் கண்டறிய உங்களை நீங்களே கீழ்க்கண்டவாறு கேட்டுக் கொள்ளுங்கள்.

* உங்கள் குழந்தை பேசும் தனி வார்த்தையை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா?

* வெவ்வேறு விதமான உணர்வுகளில் குழந்தைகள் வெளிப்படுத்தும் வெவ்வேறு விதமான ஒலிகளைப் பகுத்தறிய முடியுமா?

*குழந்தையின் கேட்கும் திறனில் ஏதாவது பாதிப்பு இருக்கும் என நீங்கள் சந்தேகப்படுகிறீர்களா?

*குழந்தையிடம் நிறையப் பேசுகிறீர்களா? அல்லது கொஞ்சமாகப் பேசுகிறீர்களா?

*குடும்பத்தில் இதற்கு முன்பு யாராவது தாமதமாகப் பேசியதாகத் தெரிய வருகிறதா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் முதலில் விடை தேடிப்பிடியுங்கள். அப்படியும் குழந்தைக்குப்பிரச்சினை இருப்பதாக நினைத்தால் மேலும் ஐந்து மாதங்கள் பொறுத்துப் பாருங்கள். அதன்பிறகும் குழ்ந்தை பேசவில்லை என்றால் உடனடியாக ஒரு குழந்தை மருத்துவரைப் பார்த்து ஆலோசனை பெறுவது சிறந்தது.

# டிப்ஸ்

கற்கண்டை வெண்ணெயுடன் சேர்த்து நாற்பது நாட்கள் சாப்பிட மெலிந்த உடல் பெருக்கும்.

தொண்டை கட்டிக்கொண்டு குரல் எழாமல் சிரமப்படுபவர்கள் கற்பூரவள்ளியை சாறெடுத்து பனங்கற்கண்டு சேர்த்துப் பருகச் சரியாகும்.

வெள்ளை வெங்காயத்தை நெய்யில் வதக்கி, பனங்கற்கண்டு சேர்த்து காலை, மாலை ஒரு தேக்கரண்டி. சாப்பிட, வயிறு சிறிதாகும்.

மிளகாயுடன் பத்துத் துளசி இலைகளை சேர்த்துச் சாப்பிட பூச்சிகள் வெளியேறும்.

கருணைக்கிழங்கை தொடர்ந்து வாராவாரம் இருமுறை உணவுடன் சாப்பிட மூலம் சரியாகும்.

நல்ல மிளகுடன் சிறிது சீரகம் சேர்த்து, தண்ணீரில் போட்டு நன்றாக அவித்த நீரை வடிகட்டி தினமும் காலையில் பருகி வந்தால் உடலில் உள்ள கெட்ட நீர் வெளியேறி உடல் ஆரோக்கியமாக மாறும்.

# சமையல் குறிப்பு

## வெஜிடேபிள் ஆம்லெட்

### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| முட்டை | – 3 |
| கரெட் துண்டு | – 1/4 கப் |
| குட மிளகாய் | –1/4 கப் |
| காளான் | – 1/4 கப் |
| பாலாடைக்கட்டி (சீஸ்) | – 1/4 கப் |
| வெண்ணெய் | –1 தேக்கரண்டி |
| உப்பு | – தேவையான அளவு |
| மிளகு தூள் | –2 தேக்கரண்டி |
| பால் | – 2 மேசைக்கரண்டி |
| எண்ணெய் | –தேவையான அளவு |

### செய்முறை

முட்டை உப்பு, மிளகு, வெண்ணெய், பால், ஆகியவற்றுடன் சேர்த்து நன்றாக மிக்சியில் போட்டுக்கலக்கவும். மறுபுறம் காளான்களை கொதிக்கும் தண்ணீரில் 5 நிமிடம் போட்டு வைக்கவும். கரட், குடமிளகாய், காளான், முட்டைக்கோஸ் ஆகியவற்றைமிகச்சிறிய நீளமான துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும். இந்தக் காய்கறிகளையும் அடித்து வைத்திருக்கும் முட்டைக் கலவையில் சேர்த்து பாலாடைக்கட்டித்தூள் போட்டுக்கலக்கவும். பின் புதாச்சிச்சட்டியில் சிறிதளவு எண்ணெய் தடவி இந்தக் கலவையைக் கொட்டவும். ஒரு புறம் சற்று வெந்ததும், திருப்பிப் போடக்கூடிய பதம் வந்ததும் திருப்பிப்போட்டு வேக வையுங்கள். ஆம்லெட் ரெடி!

# புதிதாக வேலைக்குச் செல்லும்போது...

பொதுவாக இன்றைய காலகட்டத்தில் பெண்களும் வேலைக்குப்போகும் கட்டாயம் வந்துவிட்டது. ஒவ்வொரு பெண்ணும் தனது கவலையில்லாத கல்லூரி வாழ்க்கையை முடித்து அடுத்த கட்டமாக



ஒரு வேலையைத் தேடுகிறாள். பொதுவாக வேலை கிடைப்பது சிரமமாக இருக்கும். கிடைத்தாலும் அவள் கண்ட கனவுகளுக்கு மாறாக குறைந்த சம்பளம், குறைந்த சலுகைகள் மற்றும் வேலையில் குறைவான வசதிகள் ஆகியவைதான் நிஜ வாழ்க்கையில் பெற முடிகிறது. அதனால் அவள் கனவுகளும் தகர்கின்றன.

ஆனால், இவ்வாறான சூழ்நிலையிலும் உங்களது கடின உழைப்பையும் முழுத்திறமையையும் காட்ட முயற்சி செய்தால் உங்கள் எதிர்காலம் நிச்சயம் பிரகாசமாக இருக்கும். வாழ்க்கையை நன்றாக வாழக் கற்றுக்கொள்ளும் காலமாக இதை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கல்லூரி, தொழில்நுட்பப் பயிற்சி என்று படிப்புகள் எல்லாவற்றையும் முடித்துவிட்டு முதன்முதலாக வேலைக்குச் சேருபவருக்கு இருக்க வேண்டிய முதல் தகுதி, அது எப்படிப்பட்ட கடினமான வேலையாக இருந்தாலும் சரி, அந்த வேலையைச் செய்யும் நல்லதொரு மனோபாவம்.

பொதுவாக வேலை கொடுக்கும் நிறுவனங்கள் புதிதாக வேலைக்குச் சேருபவர்களின் எதிர்பார்ப்புகளை உணர்ந்து மதித்தாலும், பெரும்பாலும் அந்நிறுவனங்கள் அவர்களது விருப்புகளை முற்றுமுழுதாக நிறைவேற்றுவதில்லை.

பொதுவாக முதன்முதலில் வேலைக்குச் சேருபவர்களிடம் நிறுவனம் எதிர்பார்ப்பது நேரம் பார்க்காமல் கொடுத்த வேலையை முடிக்க விருப்பம் உள்ளவரா, தேவைப்படும்போது அதிக வேலை செய்யத் தயாராக உள்ளவரா என்பதைத்தான். இதனால் ஆரம்ப கட்ட வேலைகளில் சேருபவர்கள் பரந்த மனப்பான்மையுள்ளவராக இருத்தல் அவசியம். இது அவர்களுக்கு உலகம் என்பது என்ன? வேலை என்பது என்ன? என்பதுபற்றியும் அறிந்துகொள்ள உதவியாக இருக்கும். இம்மாதிரி வேலைகளில் நீங்கள் சேரும்போது அது நீங்கள் அந்தக் கம்பனி பற்றியும், அதில் வேலை செய்வது பற்றியும் தெரிந்துகொள்ள உதவும். முதல் வேலையை பளுவாகக் கருதாமல் அதை உங்கள் திறமையை வெளிப்படுத்தக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகக் கருதுங்கள்.

முதல் வேலை ஒருவரை எந்த வேலையையும் சிறப்பாகச் செய்ய பயிற்சி அளிக்கிறது. ஆகவே, அதில் உண்மையாகவும், திறமையாகவும் உழைத்தால் உங்களுக்கு, எந்த நிறுவனத்திலும் எளிதாக வேலை கிடைக்கும். ஆரம்ப கட்ட வேலையிலேயே நீங்கள் மற்றவரின் மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றால், நீங்கள் முன்னேறுவது எளிதாக இருக்கும்.

வேலையில் சேர்ந்த பிறகு அலுவலகம் உங்களுக்கு எல்லா வேலையையும் செய்து கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்காமல், நீங்களே உங்களுக்குப் பயிற்சி கொடுப்பவராக எண்ணி வேலை நுணுக்கங்களை கற்றுக்கொள்ளுங்கள். பிரச்சினை என்று வரும்போது அதை அமைதியுடன் எதிர்கொள்ளக்கற்றுக்கொள்ளுங்கள்.

எமது முயற்சியே எம்மை உயர்த்தும் படிக்கற்கள். எவ்வளவு தடைகள் எம் முயற்சிகளுக்கு இடையூறாக இருந்தாலும் அதையும் தாண்டி நாம் பாதம் பதித்தால் வெற்றி எம் கையில் என்பது நிச்சயம்!

# ஆரோக்கியம் தரும் மாதுளை

நோயுற்ற மனிதனுக்கு ஒரு மாதுளம்பழமே மருந்து என்று இந்தியில் ஒரு பழமொழி உள்ளது. இது தற்போது லண்டன் ஆராய்ச்சிக்கூடத்தில், உண்மை என நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆரோக்கியமான இதயத்துக்கு ஒரு கிளாஸ் மாதுளம்பழச்சாறு போதுமானது என்று இந்த ஆய்வில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் உறுதிபடக் கூறி உள்ளனர்.

கொழுப்பு மற்றும் குறை இரத்த அழுத்தம் போன்ற பிரச்சினைகளால் இதயத் தசைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தாமதப்படுத்தும் அபார ஆற்றல் மாதுளம்பழத்துக்குள் ஒளிந்திருக்கிறது. மேலும், இரத்த நாளங்களை குறுகலாக்கி ஆபத்தை விளைவிக்கும் கொழுப்பு ஆக்ஸிஜனேற்றம் அடைவதற்கு எதிராகப் போராடும் மாதுளம்பழத்தில் இதய ஆரோக்கியத்தைப் பலப்படுத்தும் ஆற்றல் அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

* * *




# நாம் நாமாகவே இருப்போம்

புராணங்கள், இதிகாசங்கள் முதல் விக்கிரமாதித்தன் கதைகள் வரை பெண்களைப் பற்றிய பல்வேறு விமர்சனங்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

பெண் என்பவள் ஆண்களைப்போல் ஒரு சாதாரண பிறவிதான்.

ஓர் ஆணின் மனதை எவ்வாறு ஒரு பெண்ணின் அழகு கவர்ந்துகொள்கிறதோ அவ்வாறேதான் ஓர் ஆணின் அழகும் பெண்ணைக்கவரும் – அவளது மன உணர்வுகளைத்தட்டி எழுப்பும் என்பது அழகாய் மறைக்கப்பட்ட உண்மை. ஆனால், நாகரிகம் கருதி காலங்காலமாய் பெண் தனது உணர்வுகளை அடக்கிக் கொள்ளப்



பழகிவிட்டாள். அதையும் மீறி வெளிப்படுத்திக்கொண்டால் சமூகம் அவளுக்குத் தவறான பட்டம் தருகிறது. அதேநேரத்தில் ஆண்கள் எவ்வளவுதான் தவறு செய்தாலும் கூடக் கண்டுகொள்வதில்லை.

அழகான முகம், நிறம், போன்றன சில பெண்களுக்கு தன்னியல்பாய் அமைவது இயற்கையின் கொடை. ஆனால், இது போன்று சிலருக்கு சரியாய் அமையாவிட்டால் அது அவர்களது தப்பில்லையே?

நாம் அணியும் உடையிலேயே எமது கண்ணியம் வெளிப்படுகிறது என்று சொல்லப்படும்பொழுது, நாட்டுக்கு நாடு வித்தியாசப்படும் உடையைவிட சரீர பாஷையும், பேச்சும்தான் ஒருவன் அல்லது ஒருத்தியின் மன உணர்வுகளை சரியாக வெளிப்படுத்தும்.

பொதுவாக ஒரு ஆண் பார்க்கும் பார்வையிலேயே அந்த ஆணின் மன விகாரத்தை பெண்களால் உணர்ந்துகொள்ள முடியும். இது ஆணுக்கும் பொருந்தும். சுடிதாரோ, புடைவையோ நாம் எப்படி அணிகிறோம் என்பதில்தான் தங்கி இருக்கிறது.

ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ உடை என்பது 'ஸ்மார்ட்' என்று சொல்லப்படும் தன்நம்பிக்கையுடன் கூடிய அழகை வெளிப்படுத்தும் விடயம். ரசிப்பது தவறில்லை. அதைத் தடுக்கவும் முடியாது. தடுக்கவும் வேண்டியதில்லை. ஆனால், அருவருப்பான தங்கள் பேச்சுகளால் எல்லா ஆண்களும் அவர்களது உணர்வுகளை வெளிப்படுத்துவதில்லை. குழுவாய் நாலு பேருடன் சேர்ந்து வம்பு செய்வதும், எவள் ஏமாந்த அப்பாவியோ அவளைச் சீண்டிப் பார்ப்பதும்தான் சில ஆண்களின் கோழைத்தனமான வீரத்தனம்.

வீட்டில் பெண் குழந்தைகளுக்கு எப்படி நல்லது, கெட்டது சொல்லிக்கொடுக்கிறோமோ அதேபோன்று, ஆண் பிள்ளைகளுக்கும் பெண்களை மதிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாது, ஆண்கள் கேலி பண்ணும் அளவுக்கு எமது பெண்கள் நடந்துகொள்ளாமல் இருந்தால், தேவையில்லாத பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய தேவையும் ஏற்படாது அல்லவா?

எனவே, எப்போதும் நாம் நாமாக இருக்கக் கற்றுக்கொள்வோம். மற்றவர்களின் கலாசார நடைமுறைகளைப் பார்த்து ஆசைப்பட்டு எமது கலாசாரத்தை நாம் சீர்குலைப்பது மட்டுமல்லாமல், எமது நற்பெயரையும் கூட இதனால் நாம் இழந்துவிடுகிறோம்.

ஒழுக்கமான ஆடையே நாம் எப்படிப்பட்டவர் என்பதைத் தீர்மானிக்குமென்றால், நாம் அணியும் ஆடையில் எமது கண்ணியத்தை வெளிப்படுத்துவதில் தவறில்லையே?



## டேஸ்ட்கடை தணிகாசலம்

# நல்ல நோக்குடன் செய்யும் பணிகளுக்கு நமது ஆதரவு

வெள்ளிக்கிழமை. 4ஆம் திகதி. இலங்கையின் சுதந்திரதினம். ஆழிப் பேரலை அனர்த்தத்தால் ஏற்பட்ட சோகம் இன்னும் தணியவில்லை. அதனால் சுதந்திரதினத்தைப்பற்றிப் பெரிதாக எவரும் அலட்டிக் கொள்ளவில்லை. அரச வைபவங்கள்கூட எளிமையாகவே நடைபெற்றன.

நற்பணிமன்றத்தில் இளைஞர், யுவதிகள் கூடிவிட்டனர். முன்னால் அமைந்திருந்த மைதானத்தில் சிவலிங்கம் தலைமையிலான குழுவினர் வொலிபோல் பிரக்டிஸ் செய்து கொண்டிருந்தனர்.

கோயிலுக்குச் சென்றிருந்த தணி அண்ணன் அவசர அவசரமாக வந்து சேர்ந்தார். சிவாவும் தோழர்களும் பந்தைக் கையில் எடுத்துக்கொண்டே தணி அண்ணனிடம் வந்தனர்.

''வணக்கம் அண்ணே''

''வணக்கம் வணக்கம். என்ன இன்னும் நீங்க புறப்படவில்லையா?'' என்றார் தணி அண்ணன்.

''நாங்கஅப்பவே ரெடியாகிவிட்டோம். உங்களிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு போகத்தான் நிற்கிறோம்'' என்றான் நடராசன்.

''அப்படியா? இந்த அண்ணனின் ஆசீர்வாதம் எப்போதும் உங்களுக்கு உண்டு. சென்றுவாருங்கள் – வென்று வாருங்கள்'' என ஆசீர்வதித்தார்.

அப்போது அங்கே வந்த பள்ளிக்கூட வாத்தியார் ''தம்பிமார் எல்லாம் வெள்ளையும் சொள்ளையுமா கிளம்பிட்டீங்க. மிச்சம் தூர போறாப்புல இருக்கு'' என்று இழுத்தார்.

''அடடே நம்ப வாத்தியார் ஐயாவா! நல்ல நேரத்தில நீங்களும் சேர்ந்துட்டீங்க. நம்ப தம்பிமாரோட நீங்களும் வட்டகொடைக்குப் போயிட்டு வாங்க'' இது தணி அண்ணன்.

''என்னங்க இது திடீர்னு வட்டகொடைக்குப் போயிட்டு வாங்கன்னா எப்படி என்ன அங்க விசேஷம்'' என்று நீட்டினார் வாத்தியார்.

''என்ன ஐயா இது! நீங்க எல்லாம் ஒரு வாத்தியார் – ஊர்ல உலகத்தில என்ன நடக்குதுன்னு தெரிஞ்சிக்கவே மாட்டீங்க போல''

''அண்ணன் மன்னிச்சிக்கோணும். ஒரு வாரமா ஊர்ல இல்ல. பேப்பரும் படிக்கக் கிடைக்கல. தயவு செய்து கொஞ்சம் விவரமா சொன்னீங்கனா நல்லா இருக்கும்.''

''அதுசரி, இந்த நாட்டில சுனாமிப் பேரலை அடிச்சி 40 ஆயிரத்துக்கும் மேல் உயிர் இழந்துபோனாங்க. பல லட்சம் பேர் அகதிகளாக இருக்காங்க. பல ஆயிரக்கணக்கானோர் விதவைகளாகவும் இருக்காங்களே அதாவது தெரியுமா?''

''என்னங்க அண்ணே! இந்தமாதிரி கேட்டுப்புட்டீங்க. நாம எல்லாம் கூட நிவாரணப் பொருட்களைச் சேர்த்து கொண்டு போய் கொடுத்தோம். இடையில ஆமிகாரனுங்க நம்பகிட்ட ரொம்பக் கெடுபிடியா பயமுறுத்திப் பார்த்தானே! அது கூடவா மறந்து போச்சி.''



''ரொம்ப சந்தோசம். அதையாவது மறக்காம இருக்கீங்களே? இப்ப சொல்றேன் கேட்டுக்கங்க''

''சொல்லுங்க அண்ணன்'''

''வட்டகொடையில் ஒரு கரப்பந்தாட்டப் போட்டி நடத்துராங்க – அதுல நம்ப நற்பணி மன்றக் குழுவிரும் கலந்துக்கப் போறாங்க''

''அடடே... நல்ல சங்கதியா இருக்கே! அப்படியோ வெற்றி நம்ப பக்கம்தான்!'' என்றார் வாத்தியார் உற்சாகமாக.

''ஐயா, இந்தப் போட்டியில வெற்றிதோல்வி முக்கியம் இல்ல. எத்தனை டீம்கள் கலந்து கொள்ளுதோ அவ்வளவு கூடுதலா வேணும்.

அதாவது இந்த மெட்ச் வைக்கிறதே சுனாமி அலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி சேகரிக்கிறதுக்குத்தான். அந்த நல்ல நோக்கத்துடன்தான் நடத்துராங்க. அதுனால எல்லா டீம்களும் தவறாம கலந்து கொள்ள வேணும்.''

''இப்பதானுங்கோ அண்ணன் புரியுது. அப்படீன்னா நம்ப மன்றத்தில உள்ள ஏ.பி.சீ. மூணு டீம்களைக் கலந்துக்க வைக்கணும். அந்த டீம்களுக்கான நுழைவுக்கட்டணம் 1500 ரூபாவையும் நானே தாரேன்'' என்றார் வாத்தியார் ஆர்வத்துடன்.

''ரொம்ப நன்றிங்க சார். அண்ணன் ஏற்கனவே மொத்தப்பணத்தையும் கட்டிப்புட்டார்'' என்றான் சிவா.

''எங்க நல்லது நடந்தாலும் அங்கே தணி அண்ணன் முதலில் நிற்பார் என்பது சரியாகத்தான் போச்சு.

பாருங்க வாத்தியாரே! ஒரு சிலர் என்னமோ நம்ப மலையகத்தைப் பற்றி கொஞ்சம் மட்டமாத்தான் கணக்குப் போட்டு வச்சி இருக்காங்க.

கொழுந்து எடுப்பதும் கூலி வேலை செய்வதும்தான் மலையக சமுதாயம் என்ற காலம் மலையேறிவிட்டது. இப்போ தேசிய நீரோட்டத்தில் கலந்து விட்டார்கள். வடக்கு கிழக்கு என்றால் என்ன? கொழும்பு மலையகம் என்றால் என்ன? எல்லாரும் தமிழர்கள் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இங்கேயும் டாக்டர்கள், லோயர்கள், அதிகாரிகள், கல்விமான்கள் என சமூகமாற்றம் ஏற்பட்டுவிட்டது. தமிழன் என்ற ஐக்கிய உணர்வை எவராலும் அழித்து விடமுடியாது'' எனப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டார்வாத்தியார்.

''வாத்தியார் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை. அதே உணர்வுகளுடன்தான் வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்காக நிதி சேகரிக்கும் வகையில் இந்தப் போட்டியை ஏற்பாடு செய்து இருக்காங்க.

ஒரு நல்ல நோக்குத்தோட செய்யும் எந்த வேலைகளுக்கும் நாம் கை கொடுக்க வேண்டும். இந்த விளையாட்டுக்கழகம் மேற்கொண்டுள்ள முயற்சி பாராட்டத் தக்கது. அதனால்தான் எம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்கின்றோம். இதே மாதிரி எல்லா நெஞ்சங்களும் உதவ முன்வர வேண்டும்'' என்று நிறுத்தினார் தணி அண்ணன்.

''அண்ணன் இந்த டீம் கட்டணத்தைத் தவிர வேறு எந்தவழியில் உதவமுடியும். நமக்குக் கிடைக்கும் பரிசுத் தொகையை நிதிக்கு வழங்கலாம். அதற்கும் மேலாக நம்மால் முடிந்த தொகையை தனிப்பட்ட முறையிலும் வழங்கலாம்.''

''அப்படியா சங்கதி? நானும் நம்ப தம்பிமாரோட போயிட்டவாரன்'' என்று கூறிய வாத்தியாரும், இளம் பெடியளைப் போல் துள்ளிக் குதித்துக் கொண்டு கிளம்பி விட்டார்.

---

## மலையகக் கண்ணோட்டம்



இரா. புத்திரசிகாமணி

# ஸ்ரீ பாத கல்லூரியின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டது

மலையக மக்களின், குறிப்பாக இந்திய வம்சாவளி மக்களின் கல்வி அபிவிருத்திக்காகவும், கல்வி மேம்பாட்டுக்காகவும் உருவாக்கப்பட்டது தான் பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி.

இதை மீண்டும் மீண்டும் எழுதுவதாலோ அல்லது திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பதாலோ எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை என்று புத்திஜீவிகளும், ஆர்வலர்களும் அலுத்துப்போய்விட்டனர்.

எமக்காகவே கட்டி எழுப்பப்பட்ட உயர் கல்வி நிறுவனம் எமது கையை விட்டுப் பறிபோகும் நிலைமை ஏற்பட்டுவிட்டதே என்று ஏக்கப் பெருமூச்சு விடுகின்றனர் மலையக மாணவர்கள்.

இவற்றை எல்லாம் கேட்டுக் கேட்டு புளித்துப் போய் விட்டது. ஆனால் இன்று அவற்றை எல்லாம் விட அதி பயங்கரமான ஒருநிலை ஏற்பட்டுவிட்டது.

தலையை மட்டும் நுழைத்துக் கொள்கிறேன் என்று தலையை நுழைத்து முழு கூடாரத்தையுமே ஆக்கிரமித்துக் கொண்ட ஒட்டகத்தின் கதைபோல் ஆகிவிட்டது இன்று ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியின் நிலைமை. 25 வீதம் சிங்களவர்களுக்கான இட ஒதுக்கீடு, பின் பதிவாளரும், கணக்காளரும் சிங்களவர்கள் என்ற நிலைமையும் தாண்டி இப்போது ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியின் அதிபரும் பீடாதிபதியுமே சிங்களவர்கள் தான் என்ற நிலைக்கு வந்துவிட்டது. சிரேஷ்ட மாணவர்கள் ஊழல் மோசடிகளைத்தட்டிக் கேட்டபோதும், சத்தியாக்கிரகம் நடத்திய போதும் பெரும்பான்மை இனமாணவர்களின் சாட்சியங்களைக்கொண்டு மடக்கியடிக்கப்பட்டது.

விளையாட்டு மைதானத்தில் வலிப்பு வந்து விழுந்த மாணவனை, தமிழ் மாணவர்கள் தாக்கியதால் வருத்தம் ஏற்பட்டது எனக் கதைகட்டிப் பழிவாங்கினர்.

நிர்வாகத்தின் அடாவடித்தனங்களையும் அடக்கு முறைகளையும் கண்டித்து அட்டனிலிருந்து அமைதிப் பேரணி நடத்திய தமிழ் மாணவர்கள்மீது காடையர்களை ஏவி விட்டும், பொலிஸார் குண்டாந் தடிப்பிரயோகம் செய்தும் அடித்துக் கலைத்தனர். இளம் யுவதிகளும் அல்லோல கல்லோலப்பட்டனர்.

அப்போதெல்லாம் கூட ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரிக்கு அதிபராக ஒரு தமிழரே இருந்தார். அதிபரும் பீடாதிபதியும் தமிழர்களாக இருந்தபோதே இந்த அவல நிலை என்றால் இப்போது நிர்வாகப் பொறுப்பே ஒரு பெரும்பான்மை இனத்தவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இனிமேல் அங்கு கல்வி பயிலும் தமிழ் மாணவர்களின் பாதுகாப்புக்கு என்ன உத்தரவாதம்?

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விட்டது.

இதற்குத் தீர்வு காண்பது எப்படி?

மத்திய மாகாணத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும், மாகாணசபை, பிரதேசசபை ஆகியனவற்றின் அங்கத்தவர்களாகவும் இருப்போரில் பெரும்பான்மையானவர்கள் மலையக குறிப்பாக இந்திய வம்சா வளியினரே!

ஆனால், இவர்களிடத்தில் ஒரு ஐக்கியமும், ஒருமைப்பாடும், சமுதாய உணர்வும் இல்லை. இவர்கள் கட்சி அரசியல் நடத்துகின்றனரேயன்றி சமுக உணர்வுடன் மலையக அபிவிருத்திக்கான வேலைத்திட்டத்துடன் செயற்படுவதில்லை.

ஒருவர் மேட்டுக்கு என்றால் மற்றவர் பள்ளத்துக்கு என்பார். இன்னொருவர் வடக்கே என்றால் அடுத்தவர் தெற்கே என்பார். இப்படிக் குரங்கின் கை பூமாலையாகி சீரழிக்கப் பட்டுவிட்டது ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி.

இன்றைய சூழ்நிலையிலாவது இந்த மலையகத் தலைவர்கள் யதார்த்தம் புரிந்து சமூக உணர்வுடன் ஒரே குரலில் போராடமுன்வரவேண்டும்.

ஸ்ரீபாத கல்லூரிக்கு ஒரு தமிழரை அதிபராக நியமிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அதனை ஒரு போராட்டமாகவே நடத்தி வெற்றிபெற அனைத்து அரசியல் வாதிகளும் ஒன்றுபடவேண்டும். உங்களை சமூகம் கௌரவிக்கும்.

இதேபோன்று இப்பொழுது எழுப்பப்பட்டிருப்பது ஊவா பல்கலைக்கழகம். பதுளையில் இந்தப்பல்கலைக் கழகம் அமையும் போது இப்பிரதேச மலையக மாணவர்களுக்கும் வாய்ப்புகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இதனை ஒரு வாய்ப்பாகவும் கூடக்கருதலாம். ஆனால், அங்கேயும் கூட இந்த மலையக தொழிற்சங்கங்கள் தமது மோதல்களை ஆரம்பித்துவிட்டன. இடம் பொருத்தமில்லை என்கிறது ஒரு கட்சி. ஏரியாவே சரியில்லை என்கிறது மறுகட்சி.

இப்படியான போட்டியினால் தமிழர்களே இல்லாத பிரதேசத்தில் கொண்டுபோய் ஊவா பல்கலைக்கழகத்தை அமைத்துவிட்டாலும் ஆச்சரியம் ஏற்படப்போவதில்லை.

பத்தனை ஸ்ரீபாத கல்லூரியைப் படிப்படியாக இழந்து வரும் நிலையில் ஊவா பல்கலைக்கழகத்துக்கும் முட்டுக் கட்டையாகி விடக்கூடாது.

உங்களுடைய அரசியல் தொழிற்சங்கப் போட்டியும் மோதல்களும் மலையகத்தின் கல்விஅபிவிருத்தியையே குட்டிச்சுவராக்கி விடும்.

சற்று சமுதாய உணர்வுடன் செயற்படத் தயாராகுங்கள். அதுவே மலையகத்துக்கு நீங்கள் செய்யும் ஒரு பெரும் தொண்டாகும்.

# மடகொம்பர அமர்நாத் விளையாட்டுக் கழகத்தின்

# பொன்விழா சிறப்பிதழ்

## எழில் கொஞ்சும் மலையகத்தில் பொன்விழா காணும் அமர்நாத் விளையாட்டுக்கழகம்

மத்திய மாகாணம் என்றவுடன் எல்லோருடைய கண்களின் முன்னும் வருவது அழகிய நீர் வீழ்ச்சிகளும், அதி உயர் மலைகளும் மற்றும் பச்சைப் பசேலென்ற தேயிலைச் செடிகளும், நிமிர்ந்து நிற்கும் தொழிற்சாலைகளும்தான்.


மலையகத்தில் இவை எல்லாவற்றையும் உள்ளடக்கி மங்களத் திலகமிட்டது போல் மிளிர்வது தலவாக்கலை நகரம்.



வளைந்து நெளிந்து செல்லும் ரயில் பாதைகளும், அதிநீளமான சுரங்க வழிகளும், மலைகளைச்சுற்றிப்பிடித்திருக்கும் பாம்பு போல் ஊர்ந்துசெல்லும் தார்ப்பாதைகளும் தலவாக்கலைக்கு மேலும் மெருகூட்டுகின்றன. உல்லாசப் பயணிகளை மட்டுமல்ல அனைவரின் கவனத்தையும் தன்பால் இழுக்கும் டெவன் நீர்வீழ்ச்சியும், சென்கிளையர் நீர்விழ்ச்சியும் இயற்கை அன்னையின் கொடையாக இங்கே அள்ளி வீசப்பட்டுள்ளன. இவ்வளவு பெருமைகளையும் கொண்ட தலவாக்கலையின் அதிமுக்கிய கேந்திர நிலையம் தான் வட்டகொடை மடகொம்பர.

வட்டகொடை, மடகொம்பர அன்று பின்தங்கிய சாதாரண தோட்டமாக இருந்தது. ஆனால், காலப்போக்கில் மலையகத்தின் பல பெரும் தலைவர்களை உருவாக்கியதும் இந்த மடகொம்பரதான்.

பிரபல கவிஞரும், எழுத்தாளரும், இலக்கியப் படைப்பாளியும், அதிசிறந்த தொழிற்சங்கவாதியுமான அமரர்.சி.வி. வேலுப்பிள்ளை, இத்தோட்ட லயன் அறையில் பிறந்து இன்று நாடாளுமன்றத்தில் பிரதி அமைச்சராக இருப்பவரான எம்.எஸ்.செல்



லச்சாமி, மாகாண சபை உறுப்பினராக விருந்த அமரர் வி.டி.தர்மலிங்கம். இவர்களோடு நிற்கவில்லை, இளைஞர் சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக இன்று விளங்கும் மத்திய மாகாணசபை (ம.ம.மு) உறுப்பினர் பி.திகாம்பரம் போன்ற அரசியல் தலைவர்களையும் உருவாக்கியது வட்டகொடை மடகொம்பர தான். பிரதேச நகரசபை உறுப்பினர்கள் பலரையும் உருவாக்கி அரசியலிலும் பிரபல்யம் பெற்றுவிட்டது.

அதேபோன்று கல்வி,கலை, கலாசாரம், இலக்கியம், விளையாட்டுத்துறை என்பனவற்றிலும் இப்பகுதி சோடைபோய்விடவில்லை.

இப்பணியில் பெரும் பங்காற்றிவருகிறது அமர்நாத் விளையாட்டுக்கழகம். தனிப்பட்ட முறையில் ஒரு விளையாட்டுக் கழகமாக மட்டுமன்றி பல்வேறு தரப்பட்ட சமூகப் பணிகளிலும் அமர்நாத் விளையாட்டுக்கழகம் தடம்பதித்து பெரும் பணியாற்றிவருகிறது.

ஐம்பதாண்டுகளாக அளப்பெரும் சேவையாற்றிய அமர்நாத் விளையாட்டுக் கழகம் இன்று பொன் விழாக்கண்டுவிட்டது. இக்கால எல்லைக்கும், மாவட்ட, மாகாண மட்டத்தில் விளையாடும் அணிகளில் பங்கேற்கும் வகையில் பக்குவமான பயிற்சிகளை வழங்கி வருகின்றது. இக்கழகத்தின் வீரரான நடராசா செந்தில்குமார் இம்முறை மத்திய மாகாண அணிக்காக விளையாடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொன் விழாக்காணும் அமர்நாத் விளையாட்டுக்கழகத்தின் வளர்ச்சிக்குப் பங்களித்தோர் பலர். அவர்கள்எல்லோருடைய பெயர்களையும் குறிப்பிடுவதானால் அதற்கு இடமும், காலமும் போதாது. மடக்கொம்பர வாழ் மக்கள், வர்த்தகப் பிரமுகர்கள் அனைவருக்குமே இக்கழக வளர்ச்சியில் சம பங்குண்டு. என்றாலும் கூட இக்கழகத்தை வழிநடத்திச்செல்லும் தலைவர் எம்.சிவஞானம், போஷகர்களான பி.திகாம்பரம் (மத்திய மாகாண சபை உறுப்பினர்) டி.சுவேந்திர ராஜா, அமைப்பாளர் எம்.திலகராஜா ஆகியோரின்பங்களிப்பும், வழிகாட்டலும் அனைவராலும் கௌரவிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இவ்வளவுசிறப்புமிக்கஅமர்நாத்விளையாட்டுக்கழகம் தேசிய ரீதியாகவும் தனது பணியை விஸ்தரித்துள்ளது வரவேற்கத்தக்கது.

ஆம்! டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப் பேரலையால் ஏற்பட்ட பாதிப்புக்கள் உயிர் இழப்புகள் இனி எப்போதுமே ஈடு செய்யமுடியாதவை. ஆறுதல்கூறுவதையோ, அரவணைப்பதையோ அங்கே துயர சாகரத்தில் துன்பத்தால் துடித்துக்கொண்டிருக்கும் நெஞ்சங்களை ஒருபோதும் திருப்திப்படுத்திவிட முடியாது.

ஆனாலும், அவர்களுடைய துயரத்தில் பங்குகொள்ள வேண்டிய நமது தலையாய கடமை என்ற உணர்வுடன் கழகத்தின் போஷகர் பி.திகாம்பரத்தின் தலைமையில் வர்த்தக நண்பர்களின் உதவியுடன் வடக்கு - கிழக்கு வாழ் மக்களுக்கு அவசியமான பொருட்களைக்கொண்டுசென்று கையளித்தார். இக்கழக நண்பர்களின் பணி மேலும் தொடர்கிறது. இராமர் அணை கட்டுவதற்கு சிறு அணிலும் மணல் கொண்டுவந்து போட்டது போல், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதி திரட்டும் வகையில் மாபெரும் கரப்பந்தாட்டச்சுற்றுப்போட்டி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர். பெப்ரவரி 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் வட்டகொடை மடகொம்பர விளை

## வாழ்த்துச் செய்திகள்

### போசகரின் வாழ்த்துச் செய்தி



பி.திகாம்பரம்

அமர்நாத் விளையாட்டுக்கழகத்தின் போட்டிகள் என்ற வகையில் அமர்நாத் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படவிருக்கும் 'சுனாமி' மீட்புநிதி திரட்டலுக்கான கரப்பந்தாட்டப் போட்டித் தொடருக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

எமது உறவுகள் உறவிழந்து, உடமையிழந்து தவிக்கையில் அவர்களுக்கான நிவாரணப் பணிகள் பாரபட்சத்துடன் மேற்கொள்ளப்படுகையில் துடித்துப்போன இளைஞர்கள் துடிப்பாக செயற்பட்டு தமது உறவுகளுக்காக தம் இரத்தத்தையே தானம் செய்யும் அளவுக்கு முன்வந்து தர்மத்தின் உயரத்தை எட்டியுள்ளனர்.

அதற்கமைய இந்தப் போட்டித் தொடரானது சுடர் ஒளி பத்திரிகையின் ஊடக அனுசரணையோடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏற்பாட்டுக் குழுவுக்கும், ஊடக நிறுவனங்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் போட்டித் தொடர் சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

மத்திய மாகாண சபை உறுப்பினர்

### போட்டித்தொடர் அமைப்பாளரின் செய்தி

இலங்கைக்கு என்றுமில்லா இழப்பு ஒன்று ஏற்பட்டு எமது உறவுகள் எல்லாம் தவித்து நிற்கையில் அவர்களுக்குக் கைகொடுத்து உதவுவதற்காய் நாமெல்லாம் கரம் கோத்து நின்று ஒவ்வொருவரும் எம்மால் இயலுமான உதவிகளைச் செய்து மீளவும் எமது உறவுகள் உரம் பெற வேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் இத்தகைய கரப்பந்தாட்டப் போட்டித்தொடர் ஒன்றினை நடத்தி நிதி திரட்டுவதற்கு முன் வந்துள்ளோம்.

எமது தொழிலாளர் மற்றும் ஆசிரியர்களும் தமது ஒருநாள் வேதனத்தை பாதிப்புற்ற மக்களுக்கு வழங்கி மகத்தான பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.



ம.திலகராஜா

அதுபோல் மலையக இளைஞர்கள் மனமுவந்து தமது உதவிகளை வழங்கும் எண்ணத்தோடு இத்தகைய நிதிதிரட்டல் போட்டித்தொடர் ஒன்றினை நடத்துவதற்கு அமர்நாத் விளையாட்டுக் கழகத்தின் ஊடாக முன்வந்துள்ளனர். இதற்கு முன் பல ஆண்டுகளாக சிறப்பான கரப்பந்தாட்ட போட்டித் தொடர்களை நடத்திய அனுபவம் எமக்கிருப்பதால் இதில் வெற்றியீட்ட முடியும் என்ற நம்பிக்கையோடு களம் இறங்குகின்றோம். கடந்த காலத்தைப் போன்றே மலையகக் கரப்பந்தாட்டக் குழுக்களும், பொது மக்களும், ஊடகங்களும் எமது முயற்சிக்கு ஒத்துழைக்க வேண்டும் என வேண்டுகிறோம்.

### ஆலய பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்து

'சுனாமி' ஆழிப்பேரலை அனர்த்தத்தில் ஆதரவற்றுத் தவிக்கும் எமது உறவுகளை மீளவும் கட்டியெழுப்பும் உயரிய எண்ணத்தோடு அமர்நாத் விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்து நடத்தும் மலையக விளையாட்டுக் கழகத்துக்கிடையேயான கரப்பந்தாட்டப் போட்டித்தொடர் வெற்றிகரமாக நிறைவுபெற வேண்டுமென வட்டகொடை மடகும்பர மேற்பிரிவு ஸ்ரீ முத்துமாரி அம்மனை வேண்டுகிறேன்.



டீ.சுவேந்திரராஜா

மலையகத்தில் பெருந்தோட்ட சமூகம் முன்னேற வேண்டும் என்ற இலட்சியத்தோடு அதற்கு முன்மாதிரியாக நாம் இருக்கவேண்டும் என்ற இலக்குடன் செயற்படும் மடகும்பர மக்களும் குறிப்பாக இளைஞர்களும் ஆன்மீகப் பணியிலும் ஈடுபட்டு வருவதுடன் விளையாட்டுத் துறையிலும் கடந்த பல வருடங்களாக ஈடுபட்டுவருகிறார்கள்.

விளையாட்டினை விளையாட்டாக எடுத்துக்கொள்ளாமல் இதுபோன்ற உன்னதமான பணிக்காக கையாளும் விதம் எனக்கு மகிழ்ச்சியளி[illegible]ன்றது. இவர்களது முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

### தலைவரின் வாழ்த்துச் செய்[illegible]



எம்.சிவ[illegible]

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதி[illegible] வா
ரண நிதிக்காக, ஏற்பாடு செ[illegible]
தாட்ட சுற்றுப்போ[illegible]
கழகம் நட[illegible]

## ஜோக்

இரண்டு தோழிகளில் ஒருத்தி மற்ற வளைப்பார்த்து கண்டிப்புடன் கேட்டாள்.

''என்ன மாலதி இந்த பொது இடத்தில் உன்னுடைய பிளவ்ஸுக்குள் ஒருவன் கையை வைக்கிறானே; நீ சும்மா பார்த்துக் கொண்டு நிற்கிறாயே. செருப்பை கழட்டி அடிக்க வேண்டாமோ''

மற்றத்தோழி சொன்னாள், ''நான்தான் எனது பேர்ஸை பிளவ்ஸுக்குள் வைப்ப தில்லையே! இது தெரியாமல் அவன் கையை விட்டுப்பார்க்கிறான். என்னத்தை




எடுக்கப் போகிறான், ஏமாந்து போகட்டும்.''

# நெட் குறும்பு



அருகேயுள்ள படத்தைப்பாருங்கள். தாய்லாந்தின் தெற்குப்புறக் கிராமம் ஒன்றில் ஒற்றைக் கண்ணுடன் பிறந்த குழந்தை ஒன்று நல்ல ஆரோக்கியமாக இருக்கிறது. தற்போது அதற்கு வயது 5 என்று கப்ஸாவாக செய்தி ஒன்றை வெளியிட நாம் விரும்பவில்லை. சும்மா.... சும்மா.... வேலை வெட்டி இல்லாது வெட்டி வேலை பார்க்கும் ஒருவர், கம்பியூட்டரில் பண்ணிய சித்து விளையாட்டுத்தான் இந்தப் படம்.

# விந்தை உலகம்

*உலகில் எல்லா நாடுகளிலும் உள்ள மக்களுக்கு உடம்பில் எங்கோ ஒரு இடத்தில் மச்சம் இருக்கும். ஆனால், அமெரிக்காவின் வடகிழக்கு நகரமான சியாட்டில் உள்ள மக்களுக்கு மச்சத்துக்கு நடுவே எங்கோ ஒரு இடத்தில் உடம்பு இருக்கிறது.*

*வேறென்ன.... அங்கே ஒரு ஹோட்டல் ஒன்றில் பெண்கள்தான் உணவு பரிமாறுபவர்களாகக் கடமையாற்றுகிறார்களாம்.*

*இதில் விசேஷம் என்னவென்றால், அந்தப் பெண்கள் அந்த ஹோட்டலுக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு நிர்வாணமாகத்தான் உணவு பரிமாறுகிறார்களாம். இவர்களை பார்க்கவென்று அந்த ஹோட்டலில் கூட்டம் அம்முகிறதாம்.*

*இது மனிதனை அவமானப்படுத்தும் செயல் என்று ஆசிய பசுபிக் பெண்கள் அமைப்பின் இயக்குனர் நர்மா திம்பால், கத்தோ கத்தென்று கத்தி எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார். ஆயினும் யார் இதனைக் கேட்டார்கள்? உரித்துப்போட்ட கோழிகளை சுவைத்தபடி இந்த நிர்வாண அழகிகளை கண்ணால் சுவைக்கிறார்களாம். கொடுத்து வைத்தவர்கள்.*

*நம்ம ஊரிலேயும்தான் சப்ளையர்கள் அரை நிர்வாணமாக உணவு பரிமாறுகிறார்கள். ஆம்....ம்... அவர்களெல்லாம் ஆண்களாகவல்லவா இருக்கிறார்கள்.*

# இப்படியிருந்த பமீலா!

...ம் ரசிகர்களை கிறங்கடித்த 'கவர்ச்சிப் புயல்' பமீலா ஆண்டர்சன்

'... அகற்றிவிட்டார். அதன் பிறகு, தனது 'அழகை'

... பமீலா கூறி இருக்கிறார்.

...முடிந்ததே என்பதில்

# ஓவியச் சிரிப்பு





சில ஆண்கள் அவசரம்... ஆபத்துக்கு இப்படி ஒதுங்குவது வழக்கம்தான். அதற்காக நானும் இப்படித்தான் ஒண்டுக்கு அடிப்பேன் என்று கரடியார் அழிச்சாட்டியம் பண்ணுவது மகா அநியாயம்.

# கண்ணாமூச்சி



அருகேயுள்ள படத்தைப் பாருங்கள். குதிரை ஒன்றின் முகம் தெரிகிறது. ஆனால், படத்தை உருட்டிப்புரட்டி, கவிழ்த்து நிமிர்த்தி பார்த்தீர்கள் என்றால் தவளை ஒன்று தெரியும்.

# குறும்பு




இந்த சின்னப் பயலுக்கு இந்தப் பெட்டியில் என்ன வேலை! பெட்டியில் விளையாட்டுப்பொம்மைகள் ஏற்றுமதி செய்து வருவதை பார்த்துவிட்டு தானும் அப்படி இருக்க வேண்டும் என்று விரும்பிவிட்டார் போலும்.

**முன்கதைச் சுருக்கம்**

இது முதலிரவு. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு தடவை வருகின்ற அற்புதமான, ஆனந்தமான நாள். எல்லோரும் போல் நினைவுகள் நிஜங்களாகின்ற இரவுக்கே உரிய பதட்டத்துடனும், இனம்தெரியாத பயத்துடன், அதீத கற்பனையுடனும், எதிர்பார்ப்புடனும் மாலா கையில் பாலுடன் தனியறையுள் நுழைகின்றாள். இளங்கோ உள்ளே அவளை வரவேற்று உட்காரவைத்தான். நிறைய எதிர்பார்ப்புடன் வந்த மாலாவுக்கு அதிர்ச்சி. என்னால் முடியலையே என்று இளங்கோ கூறியபோது, என்ன காரணம் என்று அவள் மனதை குடைய நேரடியாகவே இளங்கோவிடம் கேட்டுவிட்டாள். அவன் கூறிய காரணத்தை அவளால் மனதளவில் ஏற்கமுடியவில்லை. எனினும் விட்டுக்கொடுப்புடன் இருக்க முடிவெடுத்தாள். மனதுள் போராட்டம். என்னதான் முடிவு? தற்கொலைதான் என முடிவெடுக்கிறாள். அதற்கும் இளங்கோவை திட்டிவிட்டு தீ மூட்டிகொள்கிறாள் அவள். அணைக்கச் சென்று போராடுகிறான். அப்போது அவனுக்கு சில வருடங்களுக்கு முன்னைய சிறை வாழ்வு நினைவுக்கு வருகிறது.

# நெருப்பாறு

## குறு நாவல்

**6**

ச.முருகானந்தன்

இவன் கண் விழித்த போது ஒரு அழகான இளம் பெண்ணை விசாரித்துக் கொண்டிருந்தார்கள். "நீ பயங்கரவாதி தானே?"

"இல்லை.... நான் ஒரு தமிழ்ப் பெண், மற்றும்படி எனக்கும் தீவிரவாதத்திற்கும் எதுவித தொடர்புமில்லை."

"அப்படியானால் மாறனுடன் சிநேகிதமாக இருந்தாயே?.... அவன் ஒரு புலியல்லவா?"

"மாறன் என்னுடைய உறவினன். எனது மச்சான் அவ்வளவுதான்...."

"காதலன்.... அப்படித்தானே?" என்றபடி அவளது ஆடைகளை ஒருவன் பலவந்தமாகக் களைய சித்திரவதைகள் தொடர்கின்றன. இளங்கோவுக்குப் பொறுக்க முடியவில்லை. அதனால் தனது கண்களை இறுக மூடிக் கொண்டான். "இவளை உனக்குத் தெரியுமா?" பிடரியில் விழுந்த அறையில் துடித்துக் கண்திறந்தான் இளங்கோ.

இளங்கோ அவளை ஆழமாக நோக்கினான். உண்மையிலேயே அவனுக்குத் தெரியாத ஒருத்தி. எனவே "தெரியாது" என்றான்.

"பொய் சொல்லுறே. தெரியாது?" மீண்டும் அவனது பிடரியை அவனது முரட்டுக்கை பதம் பார்க்கிற.


அவன் மௌனமாகத் தலைவிதியை எண்ணியபடி துயரில் கலங்கினான்.

அந்த யுவதி அழுது விசும்பிக் கொண்டிருந்தாள். ஆறுதலாகக் கனிவோடு பார்ப்பதைத் தவிர ஒரு வார்த்தையால் கூட அவளுக்கு ஒத்தடம் கொடுக்கும் வாய்ப்பில்லை. அவனது அன்புச் சகோதரிகள் மனத்திரையில் வந்து போயினர். அந்தப் பெண்ணின் விசும்பல் அவன் நெஞ்சைத் துளையிட்டுக் குருதி பாய்ச்சி கண்ணீரைப் பெருக வைத்தது.

அவளது ஆடைகள் அழுக்கேறிப் போயிருந்தன. தலைமுடி கலைந்து போயிருந்தது. முகம் அழுது அழுது வீங்கிப் போயிருந்தது. உடலிலும் ஆங்காங்கே உராய்வும், கண்டலும், சிராய்ப்பும் தென்பட்டன. இளமஞ்சல் நிறமேற்சட்டை உதிரத்தில் ஊறி ஆங்காங்கே செம்மை பரவியிருந்தது. முகத்திலும், கழுத்திலும் சிகரட் சூட்டுக் காயங்கள் துருத்திக் கொண்டிருந்தன. அவளது உதடுகளில் கடித்துக் கிழித்த பல்லின் அடையாளம் தெரிந்தது. இன்னமும் இரத்தம் கசிந்தபடி இருப்பதைப் பார்க்கையில் இளங்கோவின் உள்ளம் கொதித்தது.

மறுபடியும் ஒருவன் துச்சாதனனின் படலத்தை ஆரம்பித்தான். அவள் கையெடுத்துக் கும்பிட்ட படி குளறி அழுதாள். எந்தக் கண்ணபரமாத்மாவும் அவளைக் காத்திடவரவில்லை. தாங்க முடியாமல் இளங்கே கண்களை மூடிக்கொள்கிறான்.

"மாறன் இப்ப எங்கே ஒளிஞ்சிருக்கிறான்?" அவளது மேலாடை கிழிந்து தொங்குகிறது. "உனக்குத் தெரியும் சொல்லு.." எஞ்சியிருந்த உள்ளாடைகளும் கிழித்தெடுக்கப்பட்டுகிறது. "ஐயோ அண்ணை... உங்கட தங்கைச்சி என என்னை நினையுங்கோ...." அவளது இரங்கல் அவர்களைக் கசிய வைக்கவில்லை.



எஞ்சிய ஆடைகளும் கிழித்தெறியப்படுகின்றன.

இறுக மூடிய இளங்கோவின் கண்களுக்குள் உலகம் இருண்டு கொண்டு வருகிறது.

இளங்கோ அவளது அலறலில் கண்விழித்தான். அவளது வெற்றுடலின் மென்மையான பகுதிகளில் சிகரட்டினால் சுட்டுக் கொண்டிருக்கிறார்கள். இளங்கோவின் இரத்தம் கொதிக்கிறது. பற்களை நறநற என்று கடித்தபடி எதுவும் செய்ய முடியாதிருக்கும் தனது நிலையை எண்ணிக் கண்கள் சொரிகின்றன.

அவளது நிர்வாண உடல் துடிதுடிக்கிறது. அவளை விட்டுவிடுங்க பாவம்,.. இளங்கோ கெஞ்சுகிறான். பயனில்லை.

ஒரு பெண்ணின் நிர்வாண உடலை இப்படியா முதன்முறையாகக் காணவேண்டும்? இளங்கோ அழுகையுடன் ஆற்றாமையுமாக கைகளை அடித்துக் குளறினான்.

"சொல்லு... மாறன் எங்கே?" அவளது கைவிரல்களுக்குள் குண்டூசி செலுத்தப்படுகிறது. விசாரணை செய்து கொண்டு இருந்தவர்களில் ஒருவன் நிறைந்த மது போதையில் இருப்பது தெரிந்தது.

தொடரும்......

# கொலையின் பின்னணி என்ன?

-எம்.ஐ.முபாறக்-

இது அண்மையில் மெக்ஸிகோ நகரில் இடம் பெற்ற கோரமான கொலைச் சம்பவம் ஆகும்.

அன்று மாலை 4 மணியளவில் ஜோனின் வருகைக்காக ரீட்டா காத்துக் கொண்டிருந்தாள். பாடசாலை மாணவியான ரீட்டா பாடசாலை முடிந்தும் வீடு செல்லவில்லை. தனது காதலன் ஜோனுடன் சேர்ந்து சுற்றுலா ஒன்றுக்கு செல்லத் திட்டமிட்டிருந்தாள்.

பாடசாலை முடிந்ததும் இரண்டு நாள் விடுமுறையைக் கழிக்க அயல் ஊரில் உள்ள தனது தோழியின் வீட்டுக்குச் செல்வதாகப் பெற்றோரிடம் பொய் கூறியிருந்தாள் ரீட்டா.

மாலை 5 மணியளவில் ரீட்டா காத்துக் கொண்டு நின்ற இடத்திற்கு ஜோன் வந்து அவளை அழைத்துச் சென்றான். முதலில் கடற்கரை ஒன்றுக்குச் சென்று இருவரும் நன்கு குளித்தனர். இரவானதும் ரீட்டாவை ஜோன் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அது ஒரு பெரிய மாளிகை. அந்த மாளிகையில் எவருமே இல்லை. அவ்வப்போது தனது ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்காக ஜோன் வந்து போவான். ஆனால், ரீட்டாவுடன் வருவது ஜோனுக்கு இதுதான் முதல் தடவை.

ஜோன் தனது மாளிகைபற்றி ஏற்கனவே ரீட்டாவிடம் கூறியிருந்தான். இரு நாள் ஓய்வை ரீட்டாவுடன் இந்த மாளிகையிலேயே கழிப்பதற்கு திட்டமிட்டிருந்தான். ரீட்டா இந்த மாளிகையைப் பார்த்து திகைத்துப் போய் நின்றாள். இருவரும் உள்ளே போய் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்தனர்.

ரீட்டாவை ஜோன் சமயலறைப் பக்கம் அழைத்துச் சென்றான். சமயலறையில் சமைப்பதற்குத் தேவையான அனைத்துச் சாமான்களும் இருந்தன. ரீட்டா சமையல் வேலையில் இறங்கினாள்.

ரீட்டா வீட்டை விட்டுச் சென்று நான்கு நாட்கள் ஆகின. இன்னும் வரவில்லை. ரீட்டாவின் பெற்றோர் கோடமடைந்தனர்.

ரீட்டாவின் பெற்றோர் தோழியின் வீட்டுக்குச் சென்றனர். அங்கு ரீட்டா வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. ரீட்டாவின் பெற்றோர் அதிர்ச்சியடைந்தனர். பல இடங்களிலும் ரீட்டாவைத் தேடினர். எங்கும் கிடைக்கவில்லை.

ரீட்டா யாருடனாவது காதல் தொடர்பு வைத்திருப்பாளா? எவருடனாவது எங்கயாவது சென்றிருப்பாளா? எனப் பெற்றோர் யோசித்தனர்.

அதுபற்றி விசாரித்தனர். எந்த விபரமும் கிடைக்கவில்லை. இவ்வாறு 15 நாட்கள் கழிந்துவிட்டன. எங்கு தேடியும் ரீட்டா கிடைக்கவில்லை. இறுதியில் ரீட்டாவின் பெற்றோர் மெக்ஸிகோ பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

மெக்ஸிக்கோ பொலிஸில் இவ்வாறு ஐந்து முறைப்பாடுகள் பதியப்பட்டிருந்தன. அதில் மூன்று பெண்களும் இரண்டு ஆண்களும் அடங்கியிருந்தனர். இவர்கள் அண்மையில் திடீர் திடீரென காணாமல் போயிருந்தனர். ரீட்டா பற்றிய முறைப்பாட்டையும் உள்ளடக்கிப் பொலிஸார் தேடுதலை மேற்கொண்டனர். பல கோணங்களிலும் விசாரணைகளை முடுக்கிவிட்டனர்.

காணாமல் போனவர்கள் யார் யாருடன் தொடர்பு வைத்திருந்தார்கள், காதல்வயப்பட்டிருந்தார்கள், எனப் பொலிஸார் விசாரணை நடத்தினர். அவ்விசாரணையில் கிடைத்த ஒரு விடயத்தில் பொலிஸார் கவனம் செலுத்தினர்.



காணாமல் போன ஸ்டிம் என்ற இளைஞன் ஜோன் என்ற ஒரு வி.ஐ.பியுடன் நட்பு கொண்டிருந்தான். அதேபோல் காணாமல் போன ரொக்ஸி என்ற ஒரு யுவதியும் ஜோனுடன் நட்பு கொண்டிருந்தாள்.

இவர்கள் காணாமல் போனதற்கும் ஜோனுக்கும் இடையில் தொடர்பு இருக்க வேண்டும் என பொலிஸார் ஊகித்தனர். இதேவேளை காணாமல் போன ரீட்டா பல தடவைகள் ஜோனுடன் சுற்றியதை அறிந்த



ரீட்டாவின் சக மாணவிகள் பொலிஸாரிடம் கூறினர். ஆனால், அது காதலா? நட்பா? எனத் தெரியாது எனவும் தெரிவித்துவிட்டனர்.

இதேபோல் மீதி இரண்டுபேருக்கும் ஜோனுடன் தொடர்புகள் இருந்தனவா எனவும் பொலிஸார் விசாரித்தனர். அது பற்றித் தகவல்கள் கிடைக்கவில்லை.

ஜோனை அழைத்து விசாரிக்காமல் ஜோனின் நடவடிக்கைகளை அவதானிக்கத் தொடங்கினர். இப்படி இருக்கையில் ஒரு நாள் இரவு வீதியில் நின்ற ஒரு இளம் பெண்ணை இனந்தெரியாத நபர் ஒருவர் பலவந்தமாகக் காரில் கடத்திக் கொண்டு செல்வதாக மெக்ஸிகோ பொலிஸ் நிலையத்துக்குத் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. கடத்திச் செல்வதை நேரில் பார்த்த ஒரு வயோதிபரே இதைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர். தவறாமல் அந்தக் கார் இலக்கங்களையும் அந்தக் கார் செல்லுகின்ற பாதையையும் அந்த வயோதிபர் குறிப்பிட்டார்.

அந்த வயோதிபர் கொடுத்த கார் இலக்கங்கள் ஜோனின் கார் இலக்கங்கள் என்பதை ஜோன் பற்றிய தகவல் வழங்கிய பைலைப் புரட்டிப் பார்த்து பொலிஸார் அறிந்து கொண்டனர். அதேவேளை ஜோனின் பிரத்தியேக மாளிகையையும் பொலிஸார் அறிந்திருந்தனர்.

உடனே ஜோனின் மாளிகையை நோக்கிப் பொலிஸார் விரைந்தனர். அந்த மாளிகையின் முன் கதவு சாத்தப்பட்டிருந்தது. பொலிஸார் சுவரின் மேலே ஏறி உள்ளே குதித்தனர். ஜோனின் கார் நிறுத்தப்பட்டிருந்தது. வீட்டுக் கதவும் பூட்டப்பட்டிருந்தது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

# புத்தெழில் கண்காட்சி

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் முகமாக மாதர் – சக்தி மங்கையர் நற்பணி இயக்கமும், வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகமும் இணைந்து புத்தெழில் கண்காட்சி (Fashion Show) ஒன்றினை நடத்த உள்ளன.

'சுயம்பு' எனும் பெயரில் தென்னிந்திய பிரபல சினிமா நட்சத்திரம் திருமதி குஷ்பு சுந்தரின் தயாரிப்பில் இந்திய மொடல்கள் இந்த கண் காட்சியில் கலந்து கொள்ள உள்ளனர்.

பெப்ரவரி 12 ஆம் 13ஆம் திகதிகளில் ஹொட்டேல் ஹெலிடே இன் லிபர்ட்டி நடன அறையில் சுயம்பு புத்தெழில் கண்காட்சி நடை பெறும்.

செல்வி சிம்ரன் (மொடல் அழகி), திருமதி மாலா சிவேந்திரன் (திட்டமிடல் இணைப்பாளர்), திருமதி குஷ்பு சுந்தர் (நடிகை, தயாரிப்பாளர்), திருமதி. அனுஷா சுந்தரேசன் (நிர்வாக பணிப்பாளர் அனுஷா அழகுக்கலை நிறுவனம்) ஆகியோரை படத்தில் காணலாம்.



இந்தக் கட்காட்சியினை ஒழுங்கு செய்துள்ள மாதர் சக்தி அமைப்பானது சேவை நிறுவனமாக பதிவு செய்யப் பட்டு பெண்களினால் பெண்களுக்காக நடத்தப்படும் ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பின் பிரதான நோக்கம் பெண்களுக்கு நற்பணி செய்வதாகும். மாதர் சக்திஅமைப்பின் இந்த ஆண்டுக்கு முன்மொழியப்பட்ட செயற்திட்டம் அங்கவீன பெண்களுக்கான 'ஷில் பா' இல்லம் ஆகும்.



மகாராஜா கூட்டு நிறுவன சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி ஆதித்தா ராய் சுனாமிக்கான நிதி வழங்கும் போது

இந்த திட்டத்தின் கீழ் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களையும், மாதர் சக்தி இயக்கத்தினர் உள்ளடக்க இருக்கின்றனர்.

இந்த புத்தெழில் கண்காட்சியானது (Fashion Show) 'அங்கவீனர்களது உரிமைகளையும், கௌரவத்தையும் பாதுகாப்போம்' என்ற மாதர் இயக்கத்தினரின் குறிக்கோளுக்கு உதவும் முகமாக நடத்தப்படுகிறது.

# மகாத்மா காந்தி மேடை நாடகத்தில் பங்கேற்கும் வாய்ப்பு

நாடகக் கலையைச் சமூகக் கருவியாகப் பயன்படுத்தி வருகிற சக்தி கலைக் கல்லூரி ஒன்றரைத் தசாப்த காலமாகப் பெற்ற அனுபவங்களைக் கொண்டு 2005 ஆம் ஆண்டில் புதிய நாடகக் கலையை இலங்கை ரசிகர்களின் முன் கொண்டுவருகின்றது.

இலங்கையில் நாடகக் கலை தொடர்ந்தும் களியாட்டக் கலையூடகமாக மட்டும் இருக்காது.


அவ்வாறாயின் அது சமகால சமூக அரசியலை பிரதிபலிக்கக் கூடிய கண்ணாடியாகும். வரலாற்றில் முன்னொருபோதுமில்லாதவாறு நாடகக்கலைக்கு உள்ள சமூக அரசியல் பொறுப்புக்கள் மகத்தானவை.

இவ்வாறான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மாயா சக்தி கலைக் கல்லூரி தேசிய ஒருமைப்பாட்டு வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தும் பாரிய பணியொன்றை முன்னெடுத்துள்ளது.

மகாத்மா காந்தி என்றழைக்கப்படும் இம்மேடை நாடகத்தை மாயா சக்தி கலைக் கல்லூரியும், ஜெர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு அமைப்பும், சர்வதேச அபிவிருத்திக்கான நிறுவனமும் இணைந்து தயார் செய்கின்றன. தர்மஜித் புனர்ஜீவ இதனை இயக்குகிறார்.

இதில் கலந்து கொள்ள ஆர்வமுடைய நாடு முழுவதிலுமுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் இளைஞர் யுவதிகள் (வயது 18 - 25) 2811195 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் அனோமாவைத் தொடர்பு கொள்ளுமாறு, மாயா சக்தி கலைக் கல்லூரி கோரிக்கை விடுக்கிறது.

மேலதிக தகவல்களை www.mayasakthitheatre.lk என்ற வெப் தளத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.




முகவரி. மாயா சக்தி கலைக்கல்லூரி 69, 1/1, ஸ்டான்லி திலக்கரத்ன மாவத்தை, நுகேகொடை.

தொலைபேசி: 281195, பெக்ஸ்: 2813574, ஈ.மெயில்: mayashakthi@sltnet.lk



கொழும்பு மகளிர் இந்து மன்றம் நடத்திய 'சுதன குதூகலம்' நிகழ்ச்சியின் போது பங்கு கொண்ட சிவக்குமாரி ஞானச்சந்திரனின் அபிநய நடனபள்ளி மாணவர்களை படத்தில் காணலாம்.

# வெள்ளிவிழா கண்ட ஸ்ரீசங்கரின் நினைவுநாள்

ஈழத்துத் திரைப்படத்துறையிலும், மேடை நாடகத்துறையிலும் முத்திரை பதித்த கலைஞர் ஸ்ரீ சங்கரின் நினைவுநாள் விழா கடந்த வாரம் கொழும்பு 14 இல் அமைந்துள்ள நாராயண குரு மண்டபத்தில் நடைபெற்றது.

ஈழத்து கலை உலகில் மறைந்த ஒரு கலைஞருக்கு தொடர்ச்சியாக 25 வருடங்கள் நினைவு நாள் நிகழ்வு நடத்தப்பட்டு வருகின்றது என்றால் அது கலைஞர் ஸ்ரீ சங்கர் ஒருவருக்கு மட்டுமே என்பது நிதர்சனம்.

அவரது நண்பராகவும், கலைத்துறையின் சகாவாகவும் இந்த சண்முகநாதன் என்ற கலை ஆர்வலர் இந்தப் பணியை தொடர்ந்து 25 வருடங்களாக நடத்தி வருகின்றமை பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

25 ஆவது முறையாக நடைபெற்ற இந்த வெள்ளி விழா நினைவுநாள் நிகழ்வுக்கு மூத்த பத்திரிகையாளர் டேவிட்ராஜ் தலைமை தாங்கினார். சிறப்பு அதிதிகளாக, கலைஞர் கலைச்செல்வன், திரைப்பட இயக்குனர் எம்.பி.பாலன், கலைஞர் உதயகுமார், கலைஞர் எஸ்.என். நடராஜா மற்றும் பாடகர் கணபதிப்பிள்ளை ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த கலைஞர் கலைச்செல்வன் பேசும் போது கூறியதாவது:

காலத்தால் ஒரு கலைஞன் நினைவு கூரப்படுகிறான் என்றால் அந்தப் பெரும் பாக்கியம் ஸ்ரீசங்கருக்கே கிடைத்துள்ளது.

எத்தனையோ திறமை மிக்க கலைஞர்கள் நம்மை விட்டு மறைந்திருக்கின்றனர். அவர்களை இப்போது நாம் நினைத்துப் பார்ப்பதில்லை.

ஆனால், ஸ்ரீசங்கர் இறந்த காலம் முதல் 25 ஆண்டுகள் தொடர்ச்சியாக நினைவு கூரப்படுகின்றார் என்றால் அவர் கலைத்துறைமீது வைத்திருந்த ஆழ்ந்த பற்றே இதற்கு காரணமெனலாம்.

நல்லதொரு இதயத்தை அவர் கலைத்துறைக்கு அறிமுகம் செய்துள்ளார். அந்த நன்றிமிக்க கலைஞன் தனது குருவுக்கு 25 ஆண்டுகளாக இந்தப் பணியைத் திறம்பட நடத்திவருகிறார்.

இந்தப் பாக்கியம் வேறு எவருக்கும் இதுவரை கிடைக்கவில்லை என்றே சொல்லலாம். ஸ்ரீசங்கருக்கு ஒரு சிலையை நிறுவவேண்டும் என்ற ஆதங்கம் இவரிடம் இருக்கிறது.

இதற்கான முயற்சிகளை அவர் இம்முறை மேற்கொண்ட போதும் அதனை எங்கே நிறுவுவது என்ற நிலைப்பாட்டின் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

நான் தேசிய நாடக கலைக்குழுவின் அங்கத்தவன் என்ற முறையில் இங்கு ஒரு உத்தரவாதத்தை அளிக்கலாம் என நினைக்கிறேன்.

அடுத்த ஆண்டில் மலரும் ஸ்ரீசங்கரின் நினைவு தினத்தில் கலாபவனத்தில் அவருக்கு ஒரு சிலை நாட்டப்படும் அதற்கான உத்தரவாதத்தை இங்கே அளிக்கிறேன் - என்றார்.

கலைஞர்கள் சார்பில் கம்பளை தாசன் மோகன்குமார், உதயகுமார், எஸ்.என்.நடராஜா, எம்.பி.பாலன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். தம்பிஐயா தேவதாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

சிறப்பு நிகழ்வாக, பாடகர் கணபதிப்பிள்ளை பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார். பாடசாலை பிள்ளைகளுக்கு இலவசமாக பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

-ராகவி-

# இரும்பு மாபிள்கள்

கோபால் பன்னிரெண்டு வயதுச் சிறுவன். அவன் ஒரு நாள் மாலை நேரம் தன் நண்பர்களோடு காட்டுப் பகுதியில் விளையாடிக்கொண்டிருந்தான்.

அப்போது அவன் முன்னால் ஒரு முயல் குட்டி பாய்ந்து.... பாய்ந்து... ஓடியது. அதைக் கண்ட கோபால் முயலைப் பிடிக்க வெகு தூரம் காட்டுக்குள் ஓடிவிட்டான்.

சூரியன் மேற்கே மறையத் தொடங்கியது. எங்கும் இருள் சூழ்ந்திருக்க வீட்டுக்குத் திரும்பிப்போக வழி தெரியாமல் பயந்த நிலையில் பக்கத்தில் இருந்த ஒரு மரத்தில் ஏறி, மூன்று கிளைகள் இணைந்த ஒரு பகுதியில் அமர்ந்துக் கொண்டான்.

காடு பூராவும் அலைந்து திரிந்த அவன் களைப்பில் அப்படியே நித்திரையாகிப் போனான்.

நள்ளிரவில் யாரோ இருவருடைய பேச்சுக் குரல் கேட்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டான். மரத்துக்கு கீழே இரண்டு திருடர்கள்.

''ஆமாடா....! நாம பத்திரமாய் நடந்து கொள்ளவேண்டும். பொலிஸ் எங்களை கண்காணித்துக் கொண்டிருக்கும். இம்... சீக்கிரம் எல்லா நகைகளையும் மூட்டை கட்டு'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது அவர்கள் தலையில் ஏதோ கற்கள் போன்ற பொருள்கள் விழுந்தன. ஒருவன்... ''டேய்....! பொலிஸ்.... பொலிஸ்.... வாடா ஓடிப்போயிடலாம்.'' என்று கத்தி இருவரும் ஓட்டம் பிடித்தனர்.



காலை விடிந்ததும் மரத்தின் மேல் இருந்த கோபால் மெதுவாக கீழே இறங்கி வந்தான், மரத்தடியின் கீழ் அந்தத் திருடர்கள் விட்டுச் சென்ற அத்தனை நகைகளும், அந்த ஊர் முதலாளி வீட்டு நகைகள். பக்கத்தில் இரண்டு இரும்பு மாபிள்கள் கிடந்தன. கோபால் தன் கால்சட்டை பொக்கட்டுக்குள் போட்டு வைத்திருந்த இருப்பு மாபிள்களே அவை. மரத்துக்குக் கீழே இருந்த இரண்டு திருடர்கள் தலையிலும் அவை விழுந்திருக்கின்றன.

அதனால் தான் திருடர்கள் பயந்து ஓடி இருக்கிறார்கள் என்று நினைத்த அவனுக்கு சிரிப்பு வந்தது. அவன் தனது மேல் சேர்ட்டை கழற்றி அங்கு கிடந்த நகைகள் அனைத்தையும் கட்டி எடுத்துக் கொண்டு நேரே முதலாளியின் வீட்டில் கொண்டுப்போய் கொடுத்தான்.

அங்கு முதலாளி கோபாலை பாராட்டியதோடு, அவன் படிப்புக்கான எல்லாச் செலவுகளையும் தானே பார்த்துக்கொள்வதாகக் கூறி, அவனுடைய பெற்றோருக்கும் பெரும் தொகை பணம் கொடுத்து உதவினார்.

# சிறார்களின் கைவண்ணம்


யேமயானா, தரம் 07
கிளி.பாரதி வித்தியாலயம்.


ச.பாக்கியநாதன் வினோஜன்
கொந்தக்காரன் குளம்
மைந்தை, வவுனியா.


ஜே.ஜனகா, தரம் 5
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை
வெள்ளவத்தை.


மே.அனற் நிலோஷனா, தரம் 10
யா.இளவாலை க.ம.ம.வி


அ.சஜந்தன், தரம் 9
கிளி.இராமநாதபுரம் ம.வி
கிளிநொச்சி.

## தெரிந்து கொள்ளுங்கள்

1. பித்தப்பை அற்ற பிராணி எது?

*எலி*

2. இதயம் கிடையாத ஜந்து எது?

*அட்டை*

3. அதிக நேரம் தூங்கும் விலங்கு எது?

*பூனை*

4. நீந்தத் தெரியாத விலங்கு எது?

*பன்றி, ஒட்டகம்*

5. சாகும்வரை வளர்ந்து கொண்டே இருக்கும் விலங்கு எது?

*மீன்*

6. உணவு கிடைக்காத போது தன் இனத்தையே கொன்று தின்னக்கூடிய இனம்?

*தேள்*

7. உலகின் மிகப் பழமையான மரம் எது?

பேரீச்சை

*ர.மொறின்சலா*
*ஆ/ம/வித்தியாலயம், தரம் 6A*

## உங்கள் சிந்தனைக்கு

மிக நல்ல நாள் – இன்று
மிக பெரிய வெகுமதி – மன்னிப்பு
மிகவும் வேண்டாதது – வெறுப்பு
மிகக் கொடிய நோய் – பேராசை
கீழ்த்தரமான விசயம் – பொறாமை
மிகவும் சுலபமானது – குற்றம்காணல்
நம்பக் கூடாதது – வதந்தி
ஆபத்தை விளைவிப்பது – அதிக பேச்சு
செய்யக்கூடாதது – உபதேசம்
செய்ய வேண்டியது – விவாதம்
உயர்வுக்கு வழி – உழைப்பு
நழுவவிடக்கூடாதது – வாய்ப்பு

*பிருந்தா ஜெகராசா,தரம் 9A*
*கிளி.வட்டக்கச்சி ம.வி.*

## சரித்திரப் புகழ் பெற்றவர்கள்

* கர்ணன் – கொடை
* வசிட்டர் – வதம்
* கம்பர் – கவிதை
* கண்ணகி – கற்பு
* அரிச்சந்திரன் – வாய்மை

*ஜீ.கெசிகா, தரம் 5*
*கி.ச.பா, கல்கிசை.*

## கைவரும் சொற்கள்


1. நெருப்பில் வரும் கை – *புகை*
2. ஆதிமனிதன் வசித்த கை – *குகை*
3. எதிரியிடம் வளர்க்கும் கை – *பகை*
4. பெண்கள் அணியும் கை – *நகை*
5. வீரர்கள் அணியும் கை – *வாகை*
6. தலையில் வளரும் கை – *சிகை*
7. முகத்தில் தவளும் கை – *புன்னகை*
8. நாடகத்தில் வரும் கை – *ஒத்திகை*
9. மயிலிடம் உள்ள கை – *தோகை*
10. அக்காவிற்கு உதவும் கை – *தங்கை*
11. வாகனத்தில் வசதிதரும் கை – *இருக்கை*
12. சிவனின் சடையில் இருக்கும் கை – *கங்கை*
13. செய்திகளை பரப்பும் கை – *பத்திரிகை*
14. அறிவை வளர்க்கும் கை – *சஞ்சிகை*
15. மருந்து தரும் கை – *மந்திகை*

*த.பத்மநாபன், ஆண்டு 9A*
*யா/ வே.ம.வி, பருத்தித்துறை.*

## நாடுகளின் தேசிய விளையாட்டுக்கள்

இலங்கை – கரப்பந்தாட்டம், எல்லே
இந்தியா – கபடி, ஹொக்கி
பாகிஸ்தான் – ஹொக்கி
அமெரிக்கா – பேஸ்போல்
கனடா – ஹொக்கி
அவுஸ்திரேலியா – கிரிக்கெட்
ஸ்பெயின் – ஜல்லிக்கட்டு
இத்தாலி – உதைபந்து
ஜப்பான் – ஜூடோ

*மகேந்திராஜா சுமங்கலா, தரம் 9*
*கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி*



இந்த இரண்டு படங்களுக்கும் இடையே குறைந்த பட்சம் 7 வித்தியாசங்கள் உண்டு. எங்கே விரைவாகக் கண்டுபிடியுங்கள்.

விடைகள்
1. மின் விசிறி
2. மின்விளக்கு
3. தொலைக்காட்சி
4. டி.வி.ஸ்டாண்ட்
5. நாற்காலி
6. கைத்தடி
7. புத்தகம்

## சர்வதேச தினங்கள்

பெப்ரவரி 14 – உலக காதலர் தினம்
பெப்ரவரி 25 – உலக காசநோய் தடுப்பு தினம்
பெப்ரவரி 28 – தேசிய அறிவியல் தினம்
மார்ச் 08 – உலக மகளிர் தினம்
மார்ச் 15 – உலக ஊனமுற்றோர் தினம்
மார்ச் 21 – உலக வன தினம்
மார்ச் 22 – உலக தண்ணீர் தினம்
ஏப்பிரல் 01 – உலக முட்டாள் தினம்
மே 01 – உலக தொழிலாளர் தினம்
மே 08 – உலக செஞ்சிலுவை தினம்
மே 09 – உலக அன்னையர் தினம்
மே 15 – உலக குடும்ப தினம்
மே 17 – உலக தொலைத்தொடர்பு தினம்
மே 31 – உலக புகையிலை எதிர்ப்பு தினம்
ஜூன் 26 – உலக போதைப்பொருள் தடுப்பு தினம்
ஜூன் 27 – உலக நீரிழிவு தினம்
செப்டெம்பர் 26 – உலக காதுகேளாதோர் தினம்
செப்டெம்பர் 27 – உலக சுற்றுலாதினம்
அக்டோபர் 01 – உலக முதியோர் தினம்
அக்டோபர் 02 – உலக மது ஒழிப்பு தினம்
அக்டோபர் 06 – ஆசிரியர்கள் தினம்
அக்டோபர் 15 – உலக வெண்பிரம்பு தினம்
டிசம்பர் 01 – உலக எயிட்ஸ் தினம்
டிசம்பர் 23 – உலக விவசாயிகள் தினம்

*இராஜன் டக்ஷலா, தரம் 08*
*கிளி/கிளிநொச்சி ம.வி.*

# ஜனாதிபதியின் நரித்தந்திரம்! ரணில் முறியடிப்பாரா?...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பங்காளிக் கட்சியான ஜே.வி.பியினர் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து கூட எழவில்லை.

## ஜனாதிபதியின் திட்டம்

ஜனாதிபதியின் கருத்துக்குப் பிரதமர் முண்டுகொடுக்க முன்வரவில்லை. ஜே.வி.பி.கண்டனம் தெரிவித்தது. ஐ.தே.க. மடித்துக் கட்டிக் கொண்டு வீதிக்கு வரத் தொடங்கியது. இச் சூழ்நிலையில் தனது கருத்துக்கு வேறு அர்த்தம் கற்பித்துத் தலையைக் காப்பாற்ற முனைந்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார். எனினும் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்தாமல் ஏதோ ஒரு வகையில் அரியாசனத்தில் தொடர்ந்தும் அமர்ந்திருப்பதே அவரது திட்டமாகும்.

இவ்வருடம் டிசம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என ஐ.தே.க. வற்புறுத்தி – அழுத்தம் கொடுத்து வருகின்றபோதிலும், அரச தரப்பில் கூறப்பட்டு வருகின்ற 2006 டிசம்பரில் கூட தேர்தலை நடத்தும் எண்ணம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குக் கிடையாது என்பதே சில அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

ஜனாதிபதி சந்திரிகா தனது திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே சுனாமி அனர்த்தம் இடம்பெற்றது. இருந்த போதிலும் அந்த முயற்சிகள் கைவிடப்படவில்லை. இப்போது அந்த முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றி நடைமுறையில் இருந்து வருகின்ற அரசியலமைப்பை மாற்றுவதன் மூலம் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதே சந்திரிகா அம்மையாரின் திட்டமாகும்.

அரசின் கூட்டுக் கட்சிகளான சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்குமிடையில் எவ்வளவுதான் சண்டை சச்சரவுகள் – முரண்பாடுகள் இருக்கின்றபோதிலும் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்துவிடக்கூடாது என்பதில் இருகட்சிகளும் ஒருமித்து உறுதியாக இருந்து வருகின்றன. அதேவேளை, நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை இல்லாதொழிக்கப்பட்ட வேண்டும் என்பதே ஜே.வி.பியின் கொள்கையாக இருப்பதால் சந்திரிகா அம்மையாரின் திட்டத்திற்கு அக்கட்சி முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனினும், அரசில் அங்கம் வகிக்கும் இ.தொ.க., நாடாளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்படுவதையோ, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்படுவதையோ எதிர்க்கும் என்று கூறி வருவதால் ரோகித போகல்லாகம, ஹுஸைன் பைலா, றிஷாத் பதியுதீன், அமீரலி, நஜீப் ஏ.மஜீத் போன்றோரைப்போல் இன்னும் சிலரை ஐ.தே.க, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளில் இருந்து விலைக்கு வாங்குவதற்கு தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நரித்தந்திரத்தால் குறுக்கு வழியில் ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் மேற்கொண்டு வருகின்ற பிரயத்தனங்கள் அவருக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

## ரணில் தாக்குப்பிடிப்பாரா?

ஆனால், ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகளை ஐ.தே.க. தலைவர் ரணில் எப்படிச் சமாளிக்கப்போகிறார் என்று அரசியல் வட்டாரத்தில் கேள்வி எழுப்பப்படுகிறது. கடந்த நான்கு வருடகாலத்தில் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருடனான அரசியல் கயிறிழுப்பில் ரணில் விக்கிரமசிங்க மூக்குடைப்பட்டே வந்திருக்கிறார்.

2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பலத்த சவால்களுக்கு மத்தியில் ஐ.தே.கட்சி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியபோதிலும், இருவருடங்களிலேயே அதனை ரணில் விக்கிரமசிங்க, சந்திரிகா அம்மையாரிடம் பறிகொடுத்தார். அதற்கு முன்னதாக மூன்று முக்கிய அமைச்சுக்களை தனது அரசிடமிருந்து ஜனாதிபதி அடாத்தாகப் பிடுங்கி எடுத்த போதும் பிரதமராகப் பதவி வகித்த ரணில் வாளாவிருந்து விட்டார்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கமாட்டேன் என்று ஜனாதிபதி எழுத்தில் கொடுத்த வாக்குறுதியை நம்பி ஏமாந்தவர் ரணில் விக்கிரமசிங்க. அதனால் ஜனாதிபதிக்கெதிராக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருந்த குற்றப் பிரேரணையையும் அவர் கைவிட்டார்.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் எந்தக் கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காதிருந்தபோது ஐ.தே.கட்சியை அரசமைப்பதற்கு அவர் முயற்சிக்கவில்லை. இப்போது ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கும், இல்லாதொழிப்பதற்கும் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் மேற்கொண்டு வருகின்ற நரித்தந்திரங்களுக்கும், பித்தலாட்டங்களுக்கும் ரணில் ஈடுகொடுப்பார் என்பது சந்தேகமே. அதனால் ஐ.தே.க. சிரேஷ்ட உறுப்பினர்களின் எதிர்ப்புகளையும் அவர் சந்திக்க நேரிடும்.

தலைவர் ரணிலின் மிகவும் மென்மையான – ஜனநாயகப் போக்கே ஜனாதிபதியின் மேலாதிக்கத்திற்கும், ஐ.தே.க. பலமிழப்பதற்கும் காரணம் என ரவி கருணாநாயக்க, ராஜித சேனாரத்ன, ஜயலத் ஜயரத்ன, சிறையிலிருக்கும் எஸ.பி.திஸா நாயக்க போன்றோரின் குற்றச்சாட்டாகும்.

ஆகையினால் இனிமேலாவது, இவர்களின் வழியில் ரணில் விக்கிரமசிங்க செல்ல முற்படுவாரா? இல்லை தனது வழியிலே தான் போவாரா என்பது விரைவில் தெரியவரும். தனக்கு ஜனாதிபதியாகும் வாய்ப்பு நிறையவே இருக்கின்றபோது, அதனைத் தவறவிட்டு, கட்சித் தலைமைத்துவத்தையும் பறிகொடுப்பாரா அல்லது ஜெயிப்பரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# கொலையின் பின்னணி என்ன?.....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமயலறையில் மாத்திரம் வெளிச்சம் தெரிந்தது.

சமயலறைப் பக்கம் பொருத்தப்பட்டிருந்த சிறிய யன்னல்கள் வழியாக உள்ளே எட்டிப்பார்த்தனர். அவர்கள் கண்டகாட்சி அவர்களின் இரத்தத்தை உறைய வைத்தது. கடத்தி வந்த அந்த இளம் பெண்ணை ஜோன் கத்தியால் வெட்டித் துண்டு துண்டாக அரிந்து கொண்டிருந்தான்.

பொலிஸார் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே பாய்ந்தனர். பொலிஸாரைக் கண்ட ஜோன் தப்பி ஓட முற்பட்டான். பொலிஸார் அவனை மடக்கிப் பிடித்தனர். ஆனாலும் அப் பெண்ணின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அவளது உடல் துண்டாக்கப்பட்டு விட்டது. இதனால் கொதித்துப் போன பொலிஸார் ஜோனைக் கண்டபடி தாக்கினர்.

கொலை செய்யப்பட்ட அப் பெண்ணின் உடல் துண்டுகளுடன் ஜோனையும் பிடித்துக் கொண்டு பொலீஸ் நிலையத்துக்குச் சென்றனர். காணாமல் போன மீதிப் பேர் பற்றி ஜோனிடம் விசாரித்தனர். அவன் எல்லாவற்றையும் கூறினான்.

"ஏற்கனவே காணாமல் போன அந்த பேரையும் நானே கொலை செய்தேன்; இதுக் காரணம் காமமோ அல்லது தனிப்பட்ட கோபமோ அல்ல.

பெண்கள் மீது கொண்ட வெறுப்பு தான்" என்றான்.

"சிலரைக் காதலித்து அழைத்து வந்தேன், சிலருடன் நட்பாகி அழைத்து வந்தேன், சிலரைக் கடத்தி வந்தேன்'' என அவன் கூறினான். இதனையடுத்து அவனுக்கு மெக்ஸிகோ நீதிமன்றம் ஒன்று மரண தண்டனை விதித்தது.

---

இவ்வார 'ராசிபலன்' 07-02-2005 , 13-02-2005

பொ. சந்திரன்

# ராசி பலன்

### இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| புதன் | செவ்வாய் மூலம் கேது<br>சுக்கிரன் திருவோணம் சந்திரன்<br>புதன் அவிட்டம் + சதயம் சித்திரை<br>சூரியன் அவிட்டம் செவ்வாய்<br>குரு சித்திரை செவ்வாய்<br>சனி புனர் பூசம் குரு | | |
| சூரியன் சுக்கிரன் | | | |
| செவ் | | கேது | குரு |

தை25 முதல் மாசி 01 வரை

சந்திரன் மகரம் முதல் மீனம் வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை**

(1,8) உரிய செவ்வாய் ஒன்பதில் இருப்பதில் பலன் இல்லை. மேலும், கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் பாதகமான நிலை. எடுத்த முயற்சி தாமதமாகலாம். புகழுக்கும் பங்கம் உண்டு. ராசியில் ராகு இருப்பதும் பிரச்சினை தான். மன அமைதி இருக்காது. (2,7) உரிய சுக்கிரன் 10 இல் நன்மை செய்யாது. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். 7இல் கேது இருப்பது குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவாது. நாலாம் வீடு இரு தீய கிரகங்களால் பாதிக்கப்படுவதால் வாகனசுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது தொழில் துறை முன்னேறும். மூத்த சகோதரத்துக்கு நல்லது. நண்பர்களால் உதவியுண்டு. குரு மறைவது கூடாது.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் ஒன்பதில் இருப்பது சிறப்பானது. ஆனால், பகைக் கிரகமான சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது கூடாது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பகைவர்களால் தொல்லையுண்டு. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,5) உரிய புதன் பத்தில் நன்மை செய்யாது. கையில் பணம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். நாலுக்குரிய சூரியன் ஒன்பதில் நன்மை செய்யமாட்டான். வாகனசுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (7,12) உரிய செவ்வாய் எட்டில் நன்மை இல்லை. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். சயனசுகம் இருக்காது. (9,10) உரிய சனி இரண்டில் இருப்பது கூடாது. தொழில் துறையில் முன்னேற்றம் இல்லை.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் ஒன்பதில் பயன் இல்லை. இருப்பினும், செவ்வாயின் நட்சத்திரத்தில் இருந்து ராகுவின் நட்சத்திரத்துக்குப் போவது நல்லது. எடுக்கும் முயற்சிகள் தாமதமாகும். பிரயாண வாய்ப்பு உண்டு. வாகனசுகம் இருக்காது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. இரண்டாம் வீடு தீயகிரகங்களால் தாக்கப்படுவதால் கையில் பணம் இருக்காது. (7,10) உரிய குரு நாலில் இருப்பது தோசமான நிலை. மேலும், இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது சங்கடமான நிலை. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. மேலும், சனி, செவ்வாய் ஒன்றை ஒன்று நோக்குவது கலகம் உருவாக வழிவகுக்கும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசி நாதன் சந்திரன் ஏழு, எட்டு, ஒன்பது ஆகிய வீடுகளில் சஞ்சரிப்பது மத்திமமான பலனைக் கொடுக்கும். 7ஆம் வீட்டில் நல்ல பலனையும், மற்றைய வீடுகளில் நன்மை இல்லை. இரண்டுக்குரிய சூரியன் 7இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. (4,11) உரிய சுக்கிரன் 7இல் நன்மை இல்லை. வாகன சுகம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. தாய்க்கும் நல்லபலன் இல்லை. (5,10) உரிய செவ்வாய் ஆறில் இருப்பது விசேஷம். தொழில் துறை முன்னேறும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தரும். பூர்வீக சொத்துச் சேரும். (7,8) உரிய சனி 12இல் இருப்பது திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் ஆறில் இருப்பது விசேஷம். மேலும், செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. எடுக்கும் எந்த காரியமும் நல்ல பலனைத் தரும். சமூகத்தில் நல்ல மதிப்பும், புகழும் இருக்கும். (2,11) உரிய புதன் 7இல் நன்மை இல்லை. கையில் பணம் இருக்காது. நண்பர்களால் தொல்லையுண்டு. மூத்த சகோதரத்துக்குக் கூடாது. (3,10) உரிய சுக்கிரன் 6இல் நன்மை இல்லை. தொழில் துறையில் முன்னேற்றம் இல்லை. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (4,9) உரிய செவ்வாய் ஐந்தில் இருப்பதில் பயன் இல்லை. பெற்றோருக்குக் கூடாது. வாகன சுகம் இல்லை. (6,7) உரிய சனி 11 இல் இருப்பது சிறப்பானது. திருமணபலன் உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நண்பராவர்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10)உரிய புதன் ஆறில் இருப்பது சிறப்பானது. மேலும், செவ்வாயின் நட்சத்திரத்தில் இருந்து ராகுவின் நட்சத்திரத்திற்கு வருவது நல்லது. எடுத்த முயற்சி நல்ல பலனைத் தரும். தொழில் துறை முன்னேறும். (2,9) உரிய சுக்கிரன் ஐந்தில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கும் நல்லது. அதிஸ்டம் இருக்கும். (4,7) உரிய குரு ராசியில் இருப்பது தோசமானது. வாகன சுகம் இல்லை. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. மேலும், இவ்விரு வீடுகளைச் சனி பார்ப்பது கூடாது. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. சனி செவ்வாய் ஒன்றை ஒன்று நோக்குவது கூடாது.

**துலாம்: சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் நாலில் இருப்பது சிறப்பானது. ஆனால், பகைக்கிரகமான சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பில்லை. எடுத்த முயற்சி நல்ல பலனைத்தரும். சுகம் உண்டு. (2,7) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. 7இல் ராகு இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி ஒன்பதில் இருப்பதில் நன்மை இல்லை. வாகனசுகம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். தாய்க்கும் நல்ல பலன் இல்லை. பத்தாம் வீட்டைத் தீய கிரகங்கள் நோக்குவதால் தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. ராசியில் கேது இருப்பதும் 12இல் குரு இருப்பதும் குறை. குரு வழிபாடு நன்மை செய்யும்.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது தோசம். மேலும், கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் பயன் இல்லை. தொடங்கும் காரியங்கள் எல்லாவற்றுக்கும் தடையுண்டாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,5) உரிய குரு 11இல் இருப்பது சிறப்பானது. கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். பூர்வீக சொத்து சேரும். (3,4) உரிய சனி எட்டில் இருப்பது கூடாது. வாகன சுகம் இல்லை. தாய்க்கும் நல்லதல்ல. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,12) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது. திருமண பலன் உண்டு. சயன சுகம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழிலுக்குரிய சூரியன் மூன்றில் இருப்பது தொழில் துறை முன்னேறும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு பத்தில் இருப்பது கேந்திராதிபத்திய தோசம் உண்டு. இருப்பினும், செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (2,3) உரிய சனி 7இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,10)உரிய புதன் மூன்றில் நன்மை செய்யாது. திருமணவாய்ப்புத் தாமதமாகலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. ஒன்பதுக்குரிய சூரியன் இரண்டில் இருப்பதில் பயன் இல்லை. பிதாவுக்குக் கூடாது. ராசியையும் நாலாம் வீட்டையும் சனி பார்ப்பது கூடாது.

**மகரம்: உத்தராடம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி ஆறில் இருப்பது மிகவும் நல்லது. மேலும், குரு நட்சத்திரத்தில் இருப்பது நல்லபலனைச் செய்யும். தொடங்கும் முயற்சிகள் வெற்றி பெறும். கையில் பணம் இருக்கும். புகழ் பெறலாம். (4,11) உரிய செவ்வாய் 12இல் இருப்பது சிறப்பு இல்லை. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. நண்பர்களால் செலவு உண்டாகலாம். மூத்த சகோதரத்துக்குக் கூடாது. (5,10) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. தொழில் துறை முன்னேறும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 7ஆம் வீட்டைத் தீய கிரகங்கள் பார்ப்பது திருமணத்தடை உண்டாகலாம். இருப்பினும், குரு சுகம் இருப்பதால் ஆறுதல் உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பது கூடாது. இருப்பினும், குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். சயன சுகம் இருக்காது. பிரயாணத் தடையுண்டு. (2,11) உரிய குரு எட்டில் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. நண்பர்களால் தொல்லையுண்டு. மூத்த சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. (3,10) உரிய செவ்வாய் 11இல் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,9) உரிய சுக்கிரன் 12இல் இருப்பது நல்லது. பெற்றோருக்கு நல்ல பலன் உண்டு. வாகன சுகம் உண்டு. 7க்குரிய சூரியன் 12இல் இருப்பது கூடாது. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி**

(1,10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. மேலும், செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. ஆனால், இவ்விரு ராசிகளையும் சனி பார்ப்பது கூடாது. எடுக்கும் எந்தக் காரியமும் வெற்றி பெறும். தொழில் துறை முன்னேறும். (2,9) உரிய செவ்வாய் 10இல் மத்திம பலனைச் செய்யும். கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு சம சுகம். (4,7) உரிய புதன் 12இல் இருப்பது சிறப்பு இல்லை. வாகன சுகம் இல்லை. தாய்க்கும் கூடாது. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். இருப்பினும், குரு 7இல் இருந்து ராசியைப் பார்ப்பதால் தோச நிவர்த்தியுண்டு. 6க்குரிய சூரியன் 11இல் இருப்பதால் உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நட்பாகலாம். திருடர் பயம் இருக்காது.




## கூட்டத்தில கட்டுச் சோற்றை அவுத்துப் போட்டாங்களே பாவிகள்

அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலின் ஏஸி அறையிலும் பௌமியமானவருக்கு வேர்த் துக்கொட்டியது. எப்போதும் கோட்டும் சூட்டு மாக டிப் டொப்பாக வருபவர் அவர். ஆனால், அந்த ரம்மியமான மாலை வேளையிலும் டையையும், கோட்டையும் கழற்றி வீசி விட லாமா என்று தோன்றியது.

எவ்வளவு சங்கடமான நிலையிலும் அன்பாகப் பேசும் சுபாவமுடையவர். அழ காக ட்ரிம் செய்யப்பட்ட தாடியை தடவிக் கொண்டே எவ்வளவு பெரிய கோபக்காரர் களையும் தலையைத் தடவி சமாதானப்படுத் தும் வல்லமை படைத்தவர்.

அவருக்கு என்ன வந்தது? இப்படி ஆதங் கப்படுகிறார். முகத்தில் கடுகடுப்பு. காரணம் தெரியவில்லை. இதை அவதானித்த நண்பர் மெதுவாக மூக்கை நுழைத்தார்.

''குட் ஈவினிங் ஐயா, என்ன தனியாக வந்து நின்று விட்டீர்கள்'' என்றார்.

''குட் ஈவினிங்.. அதைத்தான் வெரிபேட் ஈவினிங் ஆக்கிப்புட்டாங்களே. இதுல ஒன் றும் குறைச்சல் இல்லை'' என்று திரும்பிய பௌமியமானவர் ''ஐயோ சார் சொரி... சொரி.. வேறு யாரோ என்று பேசிவிட்டேன். வாங்க வாங்க'' என்றார் நிலைமையை சமா ளித்துக்கொரண்டே.

''அதுக்கு என்ன? ஆத்திரமும் அவசரமும் யாருக்கும் வருவது சகஜம். அது சரி என்ன இன்று ஒரு நாளும் இல்லாம ரொம்ப சூடா இருக்கீங்க''

''அதை ஏன் சார் கேட்கிறீங்க. நம்ம நாட் டுக்கு, கோடி கோடியா கொட்டிக் கொடுக்கிற சவூதிக்காரவுங்க வந்திருக்காங்க. அவுங்கள எல்லாம் கிழக்கு மாகாணத்துக்கு அழைச்சிக் கிட்டுப்போய் காட்டி உதவி கேட்டேன். அவுங் களும் கொட்டிக் கொடுத்திட்டாங்க.''

''அது சரி. நீங்க பொதுவான அமைச்சர். தனியா முஸ்லிம்களுக்கு மட்டும் இல்லியே. நீங்களாவது வடக்கே தமி ழர்கள் படும் துன்பத்தை இந்த சவூதிகாரவுங்களுக் குக் காட்டக் கூடாதா? நீங்க ளும் சேர்ந்து சதி செய்யு றீங்களா?'' இது நண்பர்.

என்ன சார் நீங்க. என் னோட பதவிக்கே உலை வைக்கப் பார்த்தீங்க. ஐ.நா. செயலாளர் நாயகத்தையே அம்மா அந்தப் பக்கம் போக விடல. தப்பித் தவறி நான் போயிருந்தா என்னையும் அம்மா ஊட்டுக்கு அனுப்பி இருப்பா'', என்றார் பௌமியமான வர் மெதுவாக.

''அப்படீன்னா நீங்க எல்லாரும் நாற்கா லியை பாதுகாக்கத்தான் இருக்கீங்க. மக்க ளுக்காக இல்ல அப்படித்தானே'' என்று சீண் டினார் நண்பர்.

''என்னசார் நீங்க. உங்களுக்குத் தெரி யும்'' ஆரம்பத்திலேயே அம்மாவுக்கு தண்ணி காட்டியவன் நான். ஆனா, கூட்டாளிமார் காலை வாரிப்புட்டாங்க. காலியில் ரிச்சட், கம்பஹா வுல புள்ளே, எல்லாம் சரண்டர் ஆகிப்புட் டாங்க. அப்புறம் நான் மட்டும் என்ன. வய சும் போச்சு. இருக்கு மட்டும் இருப்போம் அவ் வளவுதான்'' என்றார்.

''அடடே நம்ப கதை வேறு எங்கயோ திசை மாறிப் போய்விட்டதே. உங்களை சூடாக்கின விடயத்தை சொல்லலியே'' என்னை இழுத் துப் பிடித்தார் நண்பரும்.

''என்ன சார் நீங்களும் விடமாட்டீங்க போல் இருக்கு. அந்த அசிங்கத்தை என்ன வெண்டு சொல்ல, சொல்லாட்டியும் நீங்க விடவா போறீங்க. சொல்றேன் கேளுங்க'' என ஆரம்பித்தார்.

''சுனாமி உதவிகள், பாதிக்கப்பட்ட ஆளுங்களுக்கெல்லாம் சரியா கிடைக்கல என்பது உண்மைதான். அரசாங்கம் அனுப்பி வச்சாலும் ஆமிக்காரனுங்களும், அதிகாரிங் களும் தில்லு முல்லு பண்ணிப்புடுவாங்க. போர இடம் எல்லாம் இதே கொம்ளயின்ட் தான். சவூதிக் காரங்களுக்கு பாசையா புரிய போவுது. எல்லாருக்கும் சந்தோசம். அரசாங்கம் எல்லாம் செய்யுது, குறை சொல்ல ஏலாது என்று சனங்கள் சொல்லுது என்று கூட்டிக் கிட்டு வந்திட்டோம்.

அந்த சந்தோஷத்தில ஆயிரம் ஊடு கட்டித்தாறோம் என்று சவூதிக்காரங்களும் உறுதி அளிச்சிட்டாங்க.

இந்த நேரத்தில பார்த்து ஒங்க கூட்டாளி மார்தான் கிழக்கில் இருந்து வந்தவங்க. குட்டை உடைச்சிப் புட்டாங்க. சவூதிக்காரங் களும் நம்பல ஒரு மாதிரிப் பார்க்க ஆரம்பிச் சிட்டாங்க.

நம்மலுக்குள்ள ஆயிரம் இருக்கலாம், இப் படியா கூட்டத்தில கட்டுச் சோற்றை அவிழ்ப்பது? சவூதிக் காரங்க முன்னுக்கே நம்ப மானத்தை வாங்கிப் புட்டாங்க. அதுதான் ஆத்திரமாப் போச்சி. அவுங்க வெளிப்படையா சொன் னதே உங்களுக்கு ஆத்திரம் என்றால் உயிர் களை இழந்து உம்மா, வாப்பாவை இழந்து பசியும் பட்டினியுமா இருப்பவங்களை ஏமாற் றினால் எப்படி ஆத்திரம் வரும். அவங்களு டைய ஆத்திரமும் நியாயம்தானே'' என்றார் நண்பர்.

பௌமியமானவரை காப்பாற்றுவதற்கே வந்தது போல் அவருடைய காரும் வந்து விட் டது. மெதுவாக நழுவிவிட்டார். பாவம் அவர் என்ன செய்ய முடியும்?

## ஒப்பரேசன் செய்யும் டாக்டரையே ஒப்பரேசன் செய்யப் பார்த்தாராம்

சுனாமி வந்ததும் வந்தது. அது இந்த அர சியல் தலைவர்களையும் படாத பாடு படுத்திக் கொண்டிருக்கிறது.

அண்மையில் களுத்துறை கடற்கரையோ ரத்திற்குச் சென்ற அமைச்சர் ஒருவர் சில அதி காரிகள் சகிதமாக கரையோரப் பகுதியில் சில அடையாளங்களைப் போட்டுத் தடிகளை யும் ஊண்டிக் கொண்டே போனாராம்.

ஆனால் அவர்கள் திரும்பி வரும்போது அடையாளமாக ஊன்றிவைத்த தடிகளைக் காணவில்லையாம்.

அவற்றிற்குப் பதிலாக கம்பு, தடி, கத்திக ளுடன் ஒரு கூட்டமே நின்றதாம். அடேய், இந்த சுனாமி வந்து ஒரு மாதத்துக்கும் மேல ஆச்சு, எங்கள ஒரு நாயும் வந்து பார்க்கல. இப்ப எங்கடா வந்தீங்க என்று சத்தம் போட ஆரம் பித்துவிட்டார்களாம்.

கூட்டம் அதிகமாக இருந்ததால் அதிகாரிக ளின் நிலை தர்மசங்கடமாகிவிட்டதாம். அந்த அமைச்சரோ சற்று தைரியமாகப் பேச ஆரம் பித்தாராம்.

''என்னப்பா இது நான் உங்களுக்கு உதவி செய்யத்தானே வந்தேன். நூறு மீற்ற ருக்கு அப்பால் வீடுகளைக் கட்டித்தரத்தானே அளந்தோம். அதுக்கு இடைஞ்சல் பண்ணு றீங்களே'' என்றாராம்.

''ஐயா நீங்க எல்லாம் யாரு? என்றைக்கு கடற்கரைக்கு வந்தீங்க. நாங்க தொழில் செய்து விட்டு கடற்கரையில் விடும் படகையும் வலைகளையும் ஒங்க அப்பரா வந்து காவல் காப்பான். இல்ல நூறு மீற்றருக்கு படகு களையும் வலைகளையும் கொண்டு சென்று பாதுகாக்க ஒங்க அம்மா ட்ரக்டர்தருவாங்களா?

எங்களுக்கு ஏதாவது நன்மை செய்ய ணும் என்றால் முதல்ல எங்களோட விருப் பத்தைக் கேக்கணும். எங்களுக்கு வேண்டி யதை செய்து தரணும். ஏ.ஸி.காருக்குள்ள இருந்து கொண்டு சொல்றவுங்க பேச்சைக் கேட்டுக்கிட்டு இங்கே வர வேண்டாம். மானம் மரியாதையா திரும்பிப் போங்க'' என்றனராம்.

அப்போது ஒருவர் ''இந்த ஆளுக்கு ஏது மானம்மாரியாதை எல்லாம். நேற்று பகல் வரை பச்சை கட்சியில் இருந்தார். மாலை யில் சிவப்பு நீலமாய் மாறிப் போனார். வழ மையா டாக்டர்மார்தான் ஒப்பரேசன் செய் வாங்க. ஆனால், இந்த ஆளோட நோனா கத்தி எடுத்துக்கிட்டு ஒரு டாக்டரையே ஒப்பரேசன் செய்யப் போனவர்தானே. அது தான் சந்தி சிரிக்குதே'' என்றாராம்.

நிலைமை மோசமாகப் போகவே கூட வந்த அதிகாரிகள் அமைச்சரை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனராம். கூ... பல்லா.... கோபல்லா என்று அமைச்சரை விரட்ட ஆரம்பித்து விட் டனராம்.

துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓட்டம் பிடித்தாராம் அந்தப் புதிய அமைச்சர். இது எப்படி இருக்கு?

## மரத்தின் கிளை ஒன்று முறிகிறது தேசியமாக இருந்தவர் விலை போவாரா

தனித்துவக் கட்சி, தன்மானக்கட்சி என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தவர்க ளுக்கு இப்போது சோதனைக் காலம் வந்து விட்டதாம். கிருமினல்களை எல்லாம் ஓர் கனைசர் என்றால் அமைப்பு என்ன ஆவது?

இப்படியான ஒரு கேள்வியை எழுப்பிக் கொண்டு தான் மரக்கட்சியின் தோழர்கள் ஒவ் வொரு கிளைகளாக முறித்துக் கொண்டு ஓடினார்களாம்.

காவலுக்கு எதையோ வாசல்ல கட்டி வச்ச மாதிரி தலைவரை சந்திக்கக் கூட முடிய வில்லை. இரும்புத் திரை போட்ட மாதிரி இந்த ஆளு இருந்து கொண்டு இந்தக் கயிறை கொடுத்துக் கொண்டிருந்தார்.

கதவு மூடி இருந்தா என்ன ஜன்னல் வழியா தப்பிப் போவோம் என்று அவர் ஏறிக் குதித்து அம்மாவிடம் போய் இப்போ அபிவி ருத்தி அமைச்சர்களாக மாறிவிட்டனராம்.

ஆனால், இப்ப நடந்தது என்ன தெரி யுமோ? அப்போது தலைமைக்குப் பக்கபல மாக இருந்தவர் இப்போ காலைவாரப் பாக் கின்றாராம்.

கண்டியான் என்றும், கட்சி இப்போ குடும் பச் சொத்தாகப் போச்சு, ஜனநாயகம் இல்லை என்றும் வெளிப்படையாகவே தாக்க ஆரம் பித்துவிட்டாராம். அப்படியானால் புத்தளம் மாவட்டத்தையும் தனியாக அபிவிருத்தி செய் யும் ஆசை வந்துவிட்டதோ என்று ஆதங்கப் படுகிறார் தனித்துவக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர்.

## சொற்சிலம்பம் போட்டி இல.146

சொற்சிலம்பம் 146 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் பெப்ரவரி13ஆம் திகதி ஆகும். விடைகள் பெப்ரவரி 20ஆம் திகதி சுடர் ஒளி யிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் பெப்ரவரி 27ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம் பம் போட்டி இல.144க்கான விடைகள் அருகே தரப்பட்டுள் ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக் காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங் கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக் கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'
85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14.

## சொற்சிலம்பம் போட்டி இல.144

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சு | 2 த | ந் | 3 தி | 4 ர | ம் | ■ | 5 ப |
| 6 வா | கு | ■ | 7 க | வி | ■ | 8 த | ண் |
| 9 ச | தி | 10 ப | தி | ■ | 11 க | ர | டி |
| ம் | ■ | ட் | ■ | 12 மா | ரி | ■ | த |
| ■ | 13 மு | ட | 14 வ | ன் | ■ | 15 உ | ன் |
| 16 அ | ரு | ண | ன் | ■ | 17 கா | டு | ■ |
| 18 நா | க | ம் | ■ | 19 செ | ல | ம் | 20 பு |
| 21 தி | ன் | ■ | 22 வ | ல | ம் | பு | ரி |

## சொற்சிலம்பம் போட்டி இல.146

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 | 6 | |
| 7 | | | | ■ | 8 | | ■ |
| | ■ | 9 | | 10 | | ■ | 11 |
| ■ | 12 | | ■ | | ■ | 13 | |
| 14 | | ■ | 15 | | 16 | | |
| 17 | | 18 | | ■ | | ■ | |
| | ■ | 19 | | 20 | ■ | 21 | |
| 22 | | | ■ | 23 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.146

### இடமிருந்து வலம்

1. இதை ஆழப்படுத்துவதால் சர்ச்சை.
7. கீறுதல்.
8. சோதிடத்தில் இது பன்னிரண்டு.
9. சரஸ்வதி.
12. பிரணவம்/ இணங்கச்சொல்.
13. கூட்டல் குறி.
14. இந்தியாவில் கால்ப்பணம் இது.
15. தாமரை.
17. கடும் வைராக்கியம்/ தீவிர வஞ்சகம்.
19. மீளாத் துயில் கொள்ளும் இடம்.
21. புதிய/நவீன/தற் போதைய.
22. திசை.
23. தயாரிப்பு ஏற்பாடு.

### மேலிருந்து கீழ்

1. காலையில் கூவி எழுப்பும்.
2. உயர் அதிகாரி/ மேன்மகன்.
3. நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம்.
4. காடும் காடு சார்ந்த இடமும்.
5. தகுதி/திடம்/பலம்.
6. உருசித்து அனுபவி/ தூய்.
10. ஏழு நாட்கள்.
11. செருக்கு/ நான் எனும் எண்ணம்.
12. வேலிக்கு இதுவா காவல்?
13. கழித்தல் குறி.
14. இழுக்குச் செய்/ அவமரியாதை செய்.
15. அன்னை.
16. நெருப்பில்லாமல் வராதாம்.
18. நிலத்தில் தோண்டி எடுக்கப்படும் எண்ணெய்யை இப்படி அழைப்பர்.
20. சிராத்த நாள்.
21. அடியெடுத்து வைத்து முன்னேற விடுக்கும் உத்தரவு.

## சொற்சிலம்பம் போட்டி இல. 143

1 . செல்வி.எம்.தாரணி,
டச்சு வீதி, சங்குவேலி,
மானிப்பாய்.

2 . த. துஷ்யந்தி,
கல்லுவம், கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

3 . நா.சிவலிங்கம்,
எம்.ஓ.எச். விடுதி ஒழுங்கை,
கல்முனை.

### பாராட்டுப் பெறுவோர்

1. வி.தர்ம துரை,
மணல் லேன்,
தும்பளை,
பருத்தித்துறை.
2. ஜெ.தனஞ்செயன்,
கனகபுரம்,
கிளிநொச்சி.
3. ந.பொன்னம்பலம்,
''தங்கவாசம்'',
மல்லாகம்.
4. ஆர்.காயத்திரி,
ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.
5. த.ரஜிதரன்,
பி.மா.சுகாதார சேவைகள் பணிமனை,
திருகோணமலை,
6. சி.பரிசுதன்,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
7. பொ.கோகிலா,
மீசாலை கிழக்கு,
மீசாலை.
8. சே.இந்திராணியம்மா,
துன்னாலை,
கரவெட்டி.
9. எஸ்.ஜோர்ஜ்,
இல.155/11,
ஜம்பட்டா வீதி,
கொழும்பு—13.
10. செல்வி.க.வத்ஷலா,
வ/இந்துக்கல்லூரி,
சித்தன்கேணி.

# இந்திய மருமகனாகும் முரளிதரன்!

**உலக சாதனை படைத்த இலங்கை சுழல் மன்னன் முத்தையா முரளிதரன் திருமண பந்தத்தில் இணைகிறார்.**

சென்னையில் பிரபலமான மலர் மருத்துவமனை உரிமையாளரின் மகளான மதிமலரை எதிர்வரும் மார்ச் மாதம் 21 ஆம் திகதி கரம்பற்றவுள்ளார் முரளி.

இவர்களது திருமணம் சென்னையில் நடைபெறவுள்ளது. வரவேற்பு வைபவம் கொழும்பிலும், கண்டியிலும் இடம் பெறும்.

கண்டி, கட்டுகஸ் தோட்டையை பிறப்பிடமாக கொண்டவரும், முத்தையா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வருமான முரளிதரன் 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி பிறந்தவர். இவருக்கு நான்கு சகோதரர்கள் உள்ளனர்.

பாடசாலை கிரிக்கெட் அணியில் சிறந்த பந்துவீச்சாளராக விளங்கிய முரளி காலப்போக்கில் சர்வதேச அளவில் சிறந்த சுழற்பந்து வீச்சாளராக உருவெடுத்தார். இவரது சுழலில் திக்குமுக்காடாத துடுப்பாட்ட வீரர்களே கிடையாது. அந்த அளவு சர்வதேச கிரிக்கெட்டில் தனது ஆதிக்கத்தை செலுத்தி வந்தார்.

இதுவரை காலமும் திருமணம் எப்போது? என்ற பல ரசிகர்களின் கேள்விக்கு தற்போதுதான் முரளி பதிலளித்துள்ளார்.

முரளியின் துணைவியாராக வரப்போகும் மதிமலர், மருத்துவ மனையில் பணிப்பாளராகக் கடமையாற்றுகிறார். முகாமைத்துவ நிர்வாகத்துறையில் விசேட பட்டம் பெற்ற இவர் தந்தையாரின் மரணத்தின் பின் மருத்துவமனை நிர்வாகப் பொறுப்புக்கள் ஏற்றுள்ளார். மணமகளின் சகோதரியும் அதே மருத்துவமனையில் டாக்டராகப் பணியாற்றி வருகிறார்.

பெற்றோரின் விருப்பப்படியே உறவுக் கார தமிழக மணமகளை வாழ்க்கைத் துணைவியாக முரளி ஏற்கப் போகிறார்.

கிரிக்கெட்டில் வெற்றிகண்ட முரளிதரன், இல்லற வாழ்க்கையிலும் வெற்றிகாண அவரை வாழ்த்துவோம்.

-ஷெனாயா-


இப்பொழுது வெள்ளவத்தையில்...



தமிழ் பேசும் மக்களின் தன்மான பத்திரிகைகளான

உதயன்

சுடர் ஒளி

விளம்பர கருமபீடம்

379 1/1 காலி வீதி, கொழும்பு-06.
தொ.பே:- 011 4517390, 0714 150300
(ஹோட்டல் சபையருக்கு சமீபமாக)






EXPOAIR எக்ஸ்போ எயார்

your friend in the skies...

வானத்தில் உங்கள் நண்பன்...



யாழ் – கொழும்பு

விமான பயணத்திற்கு அழையுங்கள்:

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888

கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91

Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com



திருகோணமலையில்...

சுடர் ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாரச்சி மாவத்தை, கொழும்பு – 14.
011 4734401 – 3, 011 2399666 – 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670



மீண்டும் புதுப் பொலிவுடன்......

உங்களின் இக்காலத் தெரிவுக்கு...

குமரகுரு

புடைவை அழகுப்பொருள் வாணிபம்



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.

KUMARAKURU
TEXTILE & FANCY HOUSE

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

Yarl Road, Kilinochchi. Tel: 021 228 5971 யாழ் சாலை, கிளிநொச்சி



இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள வாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, பெப்.06ஆம் திகதி வெளியிடப்பட்டது.